# திராவிடப் பொழில்

திராவிட ஆய்விதழ்

# DRAVIDA POZHIL

October - December 2022 Quarterly

The Journal of Dravidian Studies



# திராவிடப் பொழில்

திராவிட ஆய்விதழ்

# DRAVIDA POZHIL

October - December 2022 Quarterly Vol.2, Issue 4

The Journal of Dravidian Studies



Patron

**Dr. K.Veeramani**

Chancellor

Editorial Board

Prof. **Dr. Kannabiran Ravishankar**

Prof. **Dr. P. Jagadeesan**

Prof. **Dr. P. Kalimuthu**

Prof. **Dr. Sp. Thinnappan**

Prof. **Dr. Nam. Srinivasan**

**Dr. Soma Ilangovan**

**Dr. V. Neru**



Published by

**Centre of Excellence for Periyar Thought**

**Periyar Maniammai Institute of Science and Technology**

(Deemed to be University)

Vallam, Thanjavur - 613403

Tamil Nadu, India.

Language

**Bi-lingual**

| | |
|---|---|
| Single Issue (India) | Rs.200/- |
| Annual Subscription (India) | Rs.800/- |
| Single Issue (International) | $15 |
| Annual Subscription (International) | $50 |

Designed & Printed at:

**PMIST Press**

Vallam, Thanjavur - 613403

Tamil Nadu, India.

Tel: (91) 98401 32684

Email: *dravidapozhil@pmu.edu*

Visit our Website at

**dravidapozhil.pmu.edu**



1. Humanism: Canadian Multiculturalism's Secret Weapon........7
*Richard Dowsett*

2. History of Social Justice in Tamil Society ........................................... 11
*Prof. Dr. Vee. Arasu*

3. வரலாற்றுச் சுவடுகளில் நாத்திகத்தின் அறிவுத் திறனோக்கிய வளர்ச்சி....................19
*எழுத்தாளர் ஓவியா*

4. கலைஞர் மு. கருணாநிதியின் மேற்கோளாட்சியில் பாரதிதாசன் கவிதைகள் ................................................ 37
*பேரா. முனைவர். இ. கி. இராமசாமி*

5. டாக்டர் அம்பேத்கரும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவும் .............. 51
*எழுத்தாளர் மு. சங்கையா*

6. திராவிடப்பொழில் சூலை-செப்டம்பர் 2022 ஆய்வுக் கூட்டம்..........................................65

**Who are the Dravidians?**

*It is a fact that the term Dravidians and Nagas are merely two different names for the same people. The Nagas were a very ancient people. It must also be remembered that the Nagas were in no way an aboriginal or uncivilised people. Not only did the Naga people occupy a high cultural level but history shows that they ruled a good part of India.*

***The word Dravida is the name of language of the people and does not denote the race of the people.Nagas was a racial or cultural name and Dravida was their linguistic name.***

*Thus the Dasas are the same as the Nagas and the Nagas are the same as the Dravidians. In other words what we can say about the races of India is that there have been at the most only two races in the field, the Aryans and the Nagas.*

(Dr. Babasaheb Ambedkar Writings and Speeches:
Vol.7 - The Untouchables? Part III, Chapter VII)

Prof. Dr. **B. R. AMBEDKAR**, M.A., M.Sc., Ph.D., D.Sc.

*Hon'ble Minister (1st Minister) of Law and Justice,*
*Union Of India (1947–51).*
*Minister of Labour in Viceroy's Executive Council (1942–46).*
*Chairman of the Constitution Drafting Committee -*
*Constituent Assembly of India (1946-50).*
*Member of Parliament - Rajya Sabha for*
*Bombay State (1952–56).*

# ஆசிரியர் குழுவின் முகவுரை

திராவிடப் பொழில் வாசகர்களுக்குச் சமூகநீதி நல்வணக்கம்!

செப் 24 & 25 திகதிகளில், கனடா நாட்டின் ரொறன்ரோ நகரில், 'பன்னாட்டு மனிதநோக்கு & சமூகநீதி மாநாடு' சிறப்புற நிகழ்ந்தேறியது. கனடா, அமெரிக்கா, ஐரோப்பா, கீழை நாடுகள், இந்தியா, இலங்கை என்று உலகெங்கிலிருந்தும் பல சமூகவியல் அறிஞர்களும், பேராசிரியர்களும், அரசாங்க அலுவலர்களும் கலந்து கொண்டு ஆய்வுத் தாள்களும் உரைகளும் வழங்கினர். இம்மாநாட்டைப் பெரியார் பன்னாட்டமைப்பு (PI) அமெரிக்காவுடன், கனேடிய வினவு மையம் (CFIC), கனடா மனிதநோக்கு (HC), மற்றும் ரொறன்ரோ மனிதநோக்குச் சங்கம் (HAT) ஆகிய 3 அயலக அமைப்புகளும் ஒருங்கிணைந்து நடத்தின. உலக மேடையிலிருந்து Dravidian Model குரல் ஒலிக்கத் துவங்கியுள்ளது!

தமிழர்களுக்கு மட்டுமல்லாது, மேலை & கீழை நாட்டு மக்கள் யாவருக்கும், திராவிட மாதிரியின் சமூகநீதியை அறிமுகம் செய்வதும், அயலகங்களில் விளைந்துள்ள மனிதநோக்கினையும் சமூகநீதியினையும் தமிழ்வெளியில் ஒப்பிட்டுச் செம்மை செய்து கொள்வதுமே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மனிதநோக்கும் சமூகநீதியும் என்பதே மாநாட்டின் மையப்பொருள். அந்தக் கருத்துக் கழனியில்..

- மனிதநோக்கும் பெண்ணுரிமையும்
- சிறார்களிடையே மனிதநோக்கு
- அன்றாடப் பகுத்தறிவுச் சிந்தனைகள்
- சோதிடப் புரட்டை ஒழித்தல்
- ஒடுக்கப்பட்டோருக்கான மனிதநோக்கு விடைகள்
- தமிழ் வரலாறும் சமூகநீதியும்
- திராவிட மாதிரியின் சமூகநீதி
- கல்வியில் மனிதநோக்கு
- உடல்நலத்திலும் வளத்திலும் மனிதநோக்கு
- குடிபெயர்ந்தோருக்கான சமூகநீதியும் மனிதநோக்கும்

என்று மேற்காணும் பத்து உட்பொருண்மைகளில், இப் பன்னாட்டு மாநாடு நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், மானமிகு ஆசிரியர் திரு. கி.வீரமணி அவர்களும், மாண்புமிகு கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கரி அனந்தசங்கரி அவர்களும், மேலைநாட்டு அறிஞர் பெருமக்களோடு, தங்களின் சீரிய உரைகளையும் ஒருங்கே வழங்கினார்கள். ஆசிரியரின் வாழ்நாள் மனிதநேய & மனிதவுரிமைப் பணிகளைப் பாராட்டிக் கனேடிய மனிதநேய அமைப்பு, ''மனிதநேயர் சாதனையாளர்'' என்ற விருதளித்துச் சிறப்பித்தது.

உரைகள் மிக்க பேச்சாக மட்டுமன்றிச் செயலிலும் சமூகநீதி செய்யும் முகத்தான், வளம்குன்றிய கனேடிய ஆதிகுடிக் குழந்தைகளுக்கான உணவுப் பொட்டலம் மடித்தலையும் மாநாட்டில் கலந்து கொண்டோர் செய்தார்கள். புத்தகக் கண்காட்சியும் நிகழ்வுற்றது. இம்மாநாட்டில், தமிழ்நாட்டிலிருந்து திராவிடர் கழகக் குழுவும் கனடா வருகை தந்து பாங்குறக் கலந்து கொண்டது. 'சாதி சூழ் உலகு' என்ற தலைப்பில் இம்மாநாட்டுக்கென்றே வரையப்பட்ட பகடி நாடகமும் Nakkalites குழுவினரால் அரங்கேறியது. இம் மாநாடு, உலகளாவிய திராவிடத்தின் மற்றுமொரு மைல்கல்லாக அமைந்துற்றது அனைவருக்கும் மகிழ்ச்சி.

இவ்விதழ், 5 ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

- கனேடியப் பன்முகப் பண்பாட்டில் மனிதநேயமென்னும் ஆயுதம்
- தமிழ்ச் சமூகத்தில் சமூகநீதியின் வரலாறு
- வரலாற்றுச் சுவடுகளில் நாத்திகத்தின் அறிவுத் திறனோக்கிய வளர்ச்சி
- கலைஞர் மு. கருணாநிதியின் மேற்கோளாட்சியில் பாரதிதாசன் கவிதைகள்
- டாக்டர் அம்பேத்கரும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவும்.

இந்த ஆய்வுக் கட்டுரைகளை, நீங்களும் வாசித்து உங்கள் கல்விப்புல அன்பர்களிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறோம். நம் திராவிடக் கல்விப் பயணம், கடல்கடந்து, உலகெலாம் சென்று சிறக்கட்டும்!

ஆசிரியர் குழு

**பேரா. முனைவர். கண்ணபிரான் இரவிசங்கர்**
**பேரா, முனைவர். பெ. ஜெகதீசன்**
**பேரா. முனைவர், ப. காளிமுத்து**
**பேரா. முனைவர். சுப. திண்ணப்பன்**
**பேரா. முனைவர். நம், சீனிவாசன்**
**மரு. சோம. இளங்கோவன்**
**முனைவர். வா. நேரு**

# Preface

To All our Readers of Dravida Pozhil, Vanakkam & Wishes for Social Justice.

This September, 24th & 25th, the 3rd International Humanism Conference on Social Justice was held in Toronto, Canada by Periyar International USA (PI). Along with PI, 3 other Global Organizations – Center for Inquiry Canada (CFIC), Humanist Canada (HC) & Humanist Association of Toronto (HAT) joined hands to conduct this conference. Academicians, Scholars and Government Officials from all over the World - Canada, United States, Far Eastern Nations, India & Sri Lanka – participated, presented papers and gave lectures in this conference. The clarion call of the Dravidian Model has started to ring from a Global Stage.

Introducing the Dravidian Model, not only to Tamil People, but also to the World Populace of West & East, and Benchmarking the Acts of Humanism that have grown in global lands with our own philosophies and practices, was the core aim of this conference.

The Central Theme of this Conference was Humanism & Social Justice, under which there were 10 sub themes as follows.

- Humanism and Women's Rights
- Humanism in Children
- Day to Day Rational Thinking
- Dispelling the myth of Astrology
- Humanist Answers to the underprivileged
- Social Justice & Tamil History
- Dravidian Model of Social Justice
- Humanism in Education (free from Indoctrination)
- Humanism in Health & Wealth
- Humanist Answers to the Tamils & Immigrants

Hon. Chief Minister of Tamil Nadu, Thiru. M.K. Stalin, Self-Respectful

Aasiriyar Dr. K. Veeramani & Hon. Member of the Canadian Parliament, Thiru Gary Anandasangaree gave their thought provoking lectures along sides the Global Scholars. In recognition of the lifelong contributions to Humanism & Human Rights, Humanist Canada presented the Humanist Achievement award to Aasiriyar Dr. K. Veeramani.

At this Conference, Social Justice was celebrated, not only in speech but in action too. There was a Meal Packing event for the benefit of the impoverished children of the indigenous communities of Canada, and all the participants of the conference lent their hands in this exercise. There was a Book Fair as well. From Tamil Nadu, a Team from Dravidar Kazhagam arrived in Canada and participated in the Conference. A Social Drama filled with humor, by the tile – 'Caste Filled World' was also staged by the Nakkalites Team. All the delegates expressed happiness that this Conference has set a new milestone in the Global Path of Dravidam.

This issue of Dravida Pozhil contains 5 Papers.

- Humanism: Canadian Multiculturalism's Secret Weapon.
- History of Social Justice in Tamil Society
- The Growth of Atheism & its Knowledge Corpus in the annals of history.
- The poems of Bharathidasan as portrayed and quoted in the works of Kalaignar M. Karunanidhi
- Hindu Code Bill & Dr. Ambedkar

Please immerse yourself in these papers and share them with your peers. Let the Dravidian Academic Journey, cross the oceans and attain glory all over the globe.

*The Board of Editors*

**Prof. Dr. Kannabiran Ravishankar**
**Prof. Dr. P. Jagadeesan**
**Prof. Dr. P. Kalimuthu**
**Prof. Dr. Sp. Thinnappan**
**Prof. Dr. Nam. Srinivasan**
**Dr. Soma Ilangovan**
**Dr. V. Neru**

# HUMANISM
## Canadian Multiculturalism's Secret Weapon



**Richard Dowsett**
*Humanist Association of Toronto (HAT)*

**Abstract**

*The essence of Multiculturalism is the desire to thrive as individuals in the way of one's own choosing in a society of others who want to do the same. All migrants share this desire. Multiculturalism is intended to preserve the cultural freedom of all individuals and provide recognition of the contributions of diverse ethnic groups. Canada's embracing of Multiculturalism was a pivotal change in government policy and this essay touches upon that and compares with Periyar's vision of an equal and equitable society.*

I am an immigrant. In 1967, when I was 6 months old, my family left our home country for the promise of a better life in Canada. That home country: England. Make no mistake, this was a difficult transition for us!

A different culture – no pubs and not a decent game of cricket to be found.

A different language – sidewalks instead of pavements, trucks, not lorries and tire spelt with an "i" and not a "y".

Different food and drink – no pint of bitter; sweet pies but no meat pies!?

And my new town of Cobourg was very different too. Such diversity! We were surrounded by peoples from all nations – Ireland, Wales, Scotland and there were even a few Italians and Dutch! How would the Dowsett family survive the crushing weight of these *massive* differences?

Most treasured Humanists, most honoured new friends, my family's migrant story is not the one most people would imagine when thinking about those coming to Canada today. The more typical Canadian migrant story, whether it's that of a refugee fleeing their war-torn country

or of an economic migrant in search of a better future, is full of serious challenges: learning a new language, feeling isolated without family or community, not understanding the rules of a strange culture and, very likely, facing the stony stares of those who view you and your loved ones as "the other". But what all migrants do share is the desire to thrive as individuals in the way of one's own choosing in a society of others who want to do the same: this is the essence of Multiculturalism.

In a statement to the House of Commons on October 8th, 1971, Prime Minister Pierre Trudeau announced multiculturalism as an official policy of the government of Canada. Multiculturalism was intended to preserve the cultural freedom of all individuals and provide recognition of the contributions of diverse ethnic groups to Canadian society. Though Canada's embracing of Multiculturalism was a pivotal change in government policy it was also a long overdue recognition of the simple fact: *Canada has always been a Multicultural society*. We have never had the strong national identity of other countries. In the thousands of years before Europeans first landed in the New World there were many tribes of Indigenous peoples, separate and distinct.

Then the French and English colonists added their two solitudes to the mix in the First Wave of immigration1. In the Second Wave, huge numbers of British subjects came to the Canadian colonies, causing the population to explode from 460,000 in 1800 to 3.4 million by Confederation in 1867(2). In the early 1900's Ukrainian, Polish and Russian newcomers rode the Third Wave to farm the newly established prairie provinces. In the post-World War 2 Fourth Wave, Italians, Portuguese and Greeks contributed their skills and flavour across the nation. Since 1971, the Fifth Wave has seen immigration from India, China and other Asian countries exceeding European migration. In the next few years, Africa will overtake Europe as the second largest source of immigrants to Canada for the first time. This change could signal the coming of a Sixth Wave. So, since 1971, Canada has been officially Multicultural but in composition, we always were.

Denying our intrinsic Multiculturalism caused major problems for Canada in our first 100 years. Successive governments were obsessed with forging a strong national identity that was rooted in British and French colonial history. In the name of this obsession, horrific deeds were committed.

Residential Schools were founded with the objective of taking "the Indian out of the child" said our first Prime Minister, John A. Macdonald, as Canada wrestled with its "Indian Problem". This sentiment was the poison at the heart of Canada's greatest shame.

1 https://en.wikipedia.org/wiki/Immigration_to_Canada
2 https://en.wikipedia.org/wiki/Population_of_Canada

Add to this list:

- The Japanese internment during World War 2.
- The Chinese Head tax and later,
- The Chinese Exclusion Act which prevented Chinese people entering Canada altogether for 24 years.
- The 1914 SS Komagata Maru incident where 376 British subjects from the Punjab were denied entry to Canada on the basis of their race.
- The 1939 MS St Louis tragedy where a ship containing 907 Jews fleeing Nazi Germany was left to wander the Atlantic and finally forced to return to Europe where many of the passengers perished in the Holocaust.

All these dark deeds rooted in a narrow view of Canadian National Identity.

These great and specific shames can be viewed as dark stains on the fabric of Canadian society, already interwoven with threads of racism, bigotry and intolerance that caused immigrants to deny their culture, their heritage, their language and even give up their names to do what was expected

– assimilate.

In his address to the House of Commons on that momentous day in 1971, Prime Minister Trudeau eloquently summarized the whole reason for official "Multiculturalism in a bilingual framework" saying:

"*There cannot be one cultural policy for Canadians of British and French origin, another for the original peoples and yet a third for all others. For, although there are two official languages, there is no official culture, nor does any ethnic group take precedence over any other. No citizen or group of citizens is other than Canadian, and all should be treated fairly.*"

We are all equal. We should all be treated fairly. This is the Canadian Dream.

These two simple statements also point clearly to the underlying secret weapon of our nation's multiculturalism – HUMANISM. With the repatriation of the Constitution in 1982 and the adoption of the Charter of Rights and Freedoms, Canada stripped away the last vestiges of our class-ridden roots and proceeded down an impressively secular humanist path to being a country where:

- All are born free and equal in dignity and rights.
- Democracy, the Rule of Law and human rights are shared values.
- We value reasoning and the scientific method as vital for knowing the world.
- We are free to Speak our minds and test our opinions in open debate.
- We are free to find meaning and purpose in our own lives.

But, above all, Canada is a country where your cultural heritage will not determine your life outcomes.

3 https://en.wikipedia.org/wiki/Self-Respect_Movement
4 https://www.usnews.com/news/best-countries/rankings

We are lucky in Canada to be part of a society that Periyar himself seemed to be envisioning when he said:[3] "we are fit to think of 'self-respect' only when the notion of 'superior' and 'inferior' caste is banished from our land".

These secular humanist underpinnings are what make Canada one of the most desirable countries to migrate to and live in. In the US News Best Countries Report of 2021[4], Canada once again finished first. Of the 76 attributes Canada was scored upon, almost half benefitted from our secular humanist core. Attributes like being committed to race, gender and income equality, concern for human rights, the environment and democracy, equal access to justice, education and government.

We are best placed to fulfill the vast potential of our multicultural society when we focus on those essentially human values able to be shared by all humans, not by privileging cultures over the rights of individuals.

The challenge for Canada over the decades leading up to our bicentennial year of 2067 will be for us to continually renew the secular humanist core of our society by educating those hundreds of thousands of people that immigrate to our country each year about the institutions and values that made us the just, progressive, adaptable, fair and friendly society they chose in the first place. The institutions and values that safeguard the unfettered expression of their chosen culture and make our multiculturalism work so well!

I immigrated to Canada in 1967 and became a Canadian citizen in 1980. I was very fortunate to never have my ability to find a place in Canadian society obstructed by my cultural heritage. By continuing to insist upon the individual rights common to everyone as recognized in secular humanism, all those coming to Canada will be able to count on the welcome acceptance that my family experienced and to quickly become a part of the rich and colourful mosaic that is our vibrant multicultural Canada.

*(The above paper was presented at the 3rd International Humanism Conference on Social Justice – Toronto during Sep 2022.)*

**References**

Provided as a footnote in the essay itself.

**About the Author**

Richard has been the HAT Coordinator since 2017. He first became a member of HAT in December 2011 and joined the Steering Committee as Treasurer in 2012. Experiencing Humanism as a practice that balances rationality with respect for all living creatures is the core of his philosophy. Providing others with a place to explore their own humanism is his passion.

# HISTORY OF SOCIAL JUSTICE IN TAMIL SOCIETY



**Prof. Dr. Vee. Arasu**
*University of Madras (Chennai)*

**Abstract**

*Tamil Society has gradually moved on the path of social justice from its historical annals until the current day.Education is a crucial aspect of any development. Gender Equality was articulated extensively from the 20th century. From the activities of colonial systems in the Tamil society during the 19thCentury, we can understand how the European Enlightenment tradition identified the unequal development of feudal societies that came under colonization.*

*Religions that were influenced by the colonial, enlightenment traditions began to approach social justice differently.As a by-product, many social movements evolved devoid of religious affiliations and recorded how religions worked against social justice. This paper attempts to explore that interesting history and also the contribution of the Dravidian Movement to instill Social Justice in the social fabric of the current day Tamil Society.*

We learn about how the Tamil society moved from its ancient native communities through gradual formation of the State to Empires based on monarchy, through Tamil classical literary and grammatical texts. From the mid- 19th Century onwards the shift to democratic systems of citizenry began to take shape. Therefore, the caste discriminations, religious differences and economic contradictions that were taken for granted thus far came under scrutiny. They were not accepted as given. These structures were created by the society with vested interests. And all of us are implicated in it. These were seen as factors against social justice. It became imperative to question these. Individuals, social groups and political/ ideological movements brought these under scrutiny in multiple dimensions. At the international level too, these movements took many different forms.

Narrowing our focus to Tamil society we can categorize the discourses on social justice as follows:

The activities of colonial systems in the Tamil society during the 19th Century are to be taken into account. We can understand how the European Enlightenment tradition identified the unequal development of feudal societies that came under colonization. There is a need to hold extensive discussions on those aspects.

Religions that were influenced by the colonial, enlightenment traditions began to approach social justice differently. A debate on how to address inequalities and contradictions were waged. As a by-product, many social movements evolved devoid of religious affiliations. They recorded how religions worked against social justice. It is a very interesting history to be explored.

Division of labour had evolved among the human communities leading to different groups of people based on the work they did. Historically, these divisions got consolidated as castes. Caste structure functions against social justice in ways that are not yet fully articulated. Hence, it is primary to take this into consideration for any discussion on social justice and the modes by which caste worked against it.

In the course of evolution, individuals and their basic needs shaped into a crucial factor. It is obvious that not all the needs are fulfilled for all human beings. And thus, it affects social justice at various levels in the society.

Education is a crucial aspect of any development. But still education for all remains just a dream. This contradiction affects social justice in innumerable ways. The history of access to education is one of the major aspects of social justice.

Gender has been a contested terrain over many centuries. In the 20th century it was articulated extensively. It is imperative to look at how the concept of gender equality has existed or not existed in Tamil society from the perspective of social justice.

I am attempting to focus on the discussions on social justice in the above-mentioned domains in relation to Tamil society here.

By mid- 19th century colonial rule was firmly established in the Tamil context. With the fall of Tippu Sultan, colonial rule spread to the Southern parts of India freely. It was colonialism that brought the prevalent systems of caste, religion and education in the Tamil region under question. The colonial administration became aware that the tribal, scheduled castes and artisans were oppressed in the society. Right from the 16th century onwards, Christian Missionaries have worked to liberate the oppressed sections of people from caste shackles. Once the governance was under the British, they started legislating the reforms into laws. Slavery was abolished. Among the scheduled castes – specifically the paraiyars – found conversion to Christianity as a means of liberation. That freed them from both caste and religious oppressions. This occurred differently in different regions with minute variations. Untouchability became a cruelty in public

sphere and that it is against social justice was established. There were sporadic efforts to accommodate these sections within the existing religious systems. But none of them addressed untouchability or attempted to change that material basis earlier. Saivite and Vaishnavite texts do not contain any record of anti- untouchability.

Colonialism undertook various measures to liberate the people from caste shackles. They were sent as 'coolies' – or contract labourers - to South Africa, various islands on the coast, Burma, Malaysia, Thailand and Sri Lanka. It is a tragic turn in Tamil society that from untouchability they moved to being coolies. It is a milestone in Tamil history that migration became the crux of fighting against untouchability and extreme polarization of class.

From early 19th century colonialism introduced education – for the oppressed castes and women - by bringing modern education through new school systems. It is the anchor of education that has helped the Paraiyar and Nadar communities to achieve a significant change in the society over these 150 years. It is quite unique to the history of Tamil Nadu. When we look at the changes in the social sphere of the oppressed castes and women critically, we realize the significance of the dialectic of social justice.

The contribution of colonialism in the sphere of languages is equally significant. The notion of 'Dravidian languages' became possible through the efforts of colonial scholarship. Ellis (1777 - 1819) and Caldwell (1814 -1891) are two key figures we need to be grateful for this achievement. Before that the primacy of Sanskrit remained unquestioned. It was consolidated by the dominant Brahmanical caste. Right from the pre-historic times Sanskrit was projected as the language of the Gods and later as the language of the rulers and therefore remained associated with hierarchy and authority. Colonial discovery of the family of Dravidian languages led to a drastic reversal of that ideology.

Colonialism denied the practice of non-acknowledgement of the ancient Tamil language in public sphere and the pressure of Sanskrit being the rulers' tongue. Therefore, Tamil language got liberated and the Tamils gained their ethnic identity through their language. The contradiction between the language of power and regional languages came to be questioned. Social justice of the languages was established through identification of linguistic families, printing of manuscripts and institutionalization of archeological findings. It is due to these efforts that the ancient history of Tamils, changes in the evolution of Tamil paleography and the material culture of the ancient Tamils were projected in the public sphere. We can consider these as the colonial contribution to social justice of the Tamil society.

In practice, we know that the polarized binary of Sanskrit / Tamil still continues. The cultural debate on Vedic and non-Vedic philosophy and practice, the unique features of the South Indian Dravidian languages family, the unbroken history of Tamils from pre-historic era onwards

and the specific aspects of culture based on Tamil in the Dravidian, South Indian contexts became established in public sphere by the end of 19th century. Earlier ancient Indian history dealt with 3500 BCE to roughly about 500 CE. These re-discoveries proved beyond doubt the parallel existence of Dravidian cultures. Erasing that fact was an injustice meted out to the Tamils because of the support of State, culture and practices based on the primacy of Sanskrit. Colonialism interrogated that hierarchy and put the Tamil society on the map. The commemoration of Tirukkural by early colonial scholars led us to liberate ourselves from the Manu smriti.

It is important to deliberate upon the role played by the institutions of religions from the point of view of social justice over time. We learn about the system of social justice in the ancient Tamil society through the classical texts. Post- 19th century, with the advent of Christianity, the negotiations led by religion changed in many ways. In order to face the spread of Christianity, the religious systems that were in practice already, assimilated some of the values of Christianity and worked on reforming their religions. Brahmo Samaj, Ramakrishna Mutt were some examples we can mention here. Brahmo Samaj denied idol worship; it also negated many rituals. Theosophy – an amalgamation of all religions- was formed. These started in Kolkata initially and spread to other parts of India. However, in Tamil society, there was a section that continued the Buddhist traditions; Jainism was also present in many quarters. But Tamil region is perhaps the first to argue that religions in general - and Hinduism in particular – was against social justice of all kinds.

In 1878, Athippakkam Venkatachalanar published a manuscript called Hindu Matha Abaasadarshini (Obscenities of Hinduism Exposed). That text denied all the aspects of Hinduism. He was a supporter of the Madras Secular Society. This organization was the Chennai chapter of the London Secular Society inspired by the European Enlightenment heritage, that questioned religious beliefs and practices. The Madras Secular Society published two magazines: The Thinker in English and Thaththuva Vivesini in Tamil between 1882 – 1888. (I have worked in detail on this organization and collated their publications that are available, in six volumes.) This group deserves to be highlighted in the light of social justice in Tamil society. They argued against religions; proved in minute detail how religions are opposed to social justice; opposed women's suppression and discrimination; and strongly fought against superstitions. These are the people who fought for social justice at the end of the 19th century in Tamil Nadu. They inherited the Enlightenment system of knowledge and analytical thinking. They addressed issues of social justice like caste discriminations, religious bigotry, gender inequities and poverty. This historical milestone has not yet been discussed in Tamil society fully. But we need to realize that this was the historical continuity that led to the many struggles for social justice in the 20th century Tamil Nadu.

References to caste are strewn in many sources in Tamil. There are also records of compromises among castes. Only in the 19th century the voice critiquing caste as being basically against social justice came about. The primary place for raising that voice goes to Ramalinga Adikal aka Vallalaar (1823 -1874). He promulgated a concept called samarasa sanmarkkam (Path of Universal Truth). He opposed the Vedic religions. Hence, he ruled out varnashrama built on Vedic practices. He created a new Manu Needhi (New Manu Dharma). Vallalar made a modernist intervention in the system of caste contradictions. The 20th century anti – caste movements in Tamil Nadu owe a great deal to Vallalar.

Colonial administration also formed many new departments like Judiciary, Education, Public Works, Revenue and such. A new class of employees who became part of these departments did lesser physical labour and more non-physical, intellectual labour. In most of these departments the dominant caste of Brahmins occupied almost 98% of positions. The traditional varnashrama practice found a new face of domination and authority. It was in the 19th century when caste and religion came under public debate that this new administrative authority took shape. During monarchic reigns Brahminism and Sanskrit domination were endorsed by the rulers. As against that, the new republics refused to accept them lying low. Gods, Hinduism, Brahminism and Sanskrit were part of the nexus that worked against social justice. This revelation came to the fore in the 19th century. There was a revival of Tamil Buddhism to counter this hoary past. Aryan vs Dravidian discourses were emphasized. Dravidianism stood against all the above - mentioned dominations. Many organisations were founded on the concept of Dravidianism. They functioned in myriad ways: Dravidar Manavar Sangam (Dravidian Students Association) (1912), Thenninthiya Nalaurimai sangam (South Indian Welfare Association) (1916), Justice Party (1917), Chennai Magana Sangam (Madras Presidency Association) (1919), Suyamariyaathai Iyakkam (Self Respect Movement) (1925) are a few major outfits. Many of these focused on non-Brahmin people's welfare. All of them had a component of social justice. Self-Respect movement provides the amalgamation of all their identities. It cannot be denied that the activities of Self-respect movement, especially the contribution of Periyar E V Ramasami, is equivalent to the summary of social justice in the 20th Century Tamil society. His struggle for social justice can be summed up as follows:

Between 1919 – 1925, Periyar was in the Congress. In all their conferences the glaring caste contradictions of the South Indian societies came to the front. In each conference Periyar brought up the issue of reservation. Since the Congress leadership was essentially Brahminical, it did not accept his recommendation. Hence, he quit the Congress and formed the Self- Respect movement and announced Communal Representation or reservation as its axis.

Caste is initiated and protected by religion. Religions protect gods. And Brahmins remain the key operators of

these systems. Periyar opposed God, religion and Brahminism in one stroke. He believed that we can annihilate caste and remove the economic disparities. He exposed the domination of the forces that made caste exist as a reality. He involved himself in all the anti- caste activities. That became the clarion call for social justice in Tamil society.

He waged a lifelong struggle against the literatures, Vedic texts and superstitions that scaffolded the above-discussed contradictions. He criticized Sanskrit Puranic literatures and epics such as Ramayana vehemently. He propagated how these texts spread concepts against social justice in every nook and corner of the State. He hoped to build a just society accessible for all by these activities.

He centered the women's question in all his views and practices. He argued that women's liberation is a pre-condition for social justice to come into force and be extended. Without women's liberation he did not see the possibility of complete social justice. The fact that many women rallied around his views from all walks of life still remains an unprecedented saga of social justice in Tamil society. Periyar pioneered the feminist discourse in 1930's Tamil society.

Periyar dedicated himself to social justice and fought against caste and gender discrimination through many different alternate structures, reservation being the chief among them. He founded many organizations and published journals and pamphlets towards that end. We have a rich treasure house of resources to learn from.

Modern education has led to newer ways of economic aspects in Tamil society from early 20th century. Government and factories offered new openings. The necessity to have reservation in all these institutions based on caste, gender, minority religions and class was recognized earlier on. Struggles to incorporate an inclusive reservation system began in early 20th century in Tamil Nadu. Caste becomes a unit of reference for this end. Since caste is oppressive, communities discriminated by that system are entitled to reservations. That process enabled many from the subaltern sections to enter into employments. We can assess the impact of reservation as a tool of social justice in Tamil society through the data available on scheduled castes, middle castes- Backward and Most Backward -, and women over more than five decades. This is in stark contrast to the rest of the nation in India, both in education, employment and access to resources. It is a historical social justice event in Tamil society. This has helped the downtrodden communities to come out of their chEris – ghettos – and become part of the mainstream society. It has become one of the means to escape caste atrocities. It is important to relate the role of reservation and economic changes as part of the nexus of social justice. One needs to trace the time it takes to reach this level of recognizable equality and equity.

## To sum up

The history of social justice in Tamil society is documented in the classical literary and grammatical works and ethical texts like Tirukkural. Monarchies that were established later made varnashrama the norm. All discriminations based on caste, economy, gender and culture were taken as 'given' and legitimized. This trend continued for a long time till the 19th century.

Once the colonial rule took over, these contradictions came under scrutiny. Caste domination, linguistic authority, class disparities and women's oppression were recognized as factors denying social justice for all. Many reformist movements were formed. They sought to set right the course of social justice that has been skewed hitherto.

Many organizations based on social justice were formed in the 20th century, chief among them being the Self- Respect movement of Periyar. The social shifts that occurred through his interventions is the most significant part of the history of social justice in Tamil society. As he himself articulated social justice is a pre-condition for social revolution!

(The above paper was presented at the 3rd International Humanism Conference on Social Justice – Toronto during Sep 2022.)

## About the Author

Dr. Vee. Arasu is a retired Professor who served at the Department of Tamil Literature, University of Madras for 29 years. During his service, he was the Prof. & Head of the same for 16 years and also was a member of the Syndicate, Senate and Academic Council for over 14 years. Arasu has been a member of Board of Studies in almost all the Universities of Tamil Nadu for over 20 years. He has functioned as an academician all his life.

He led the Curriculum Redesign Committee of the Eastern University, Sri Lanka and University of Malaysia. He served as the Visiting Professor and External Examiner at the Univ. of Malaysia for three consecutive years. He has delivered Endowment Lectures at various universities in Tamil Nadu and Sri Lanka.

49 Scholars have completed their Ph.D. under his guidance. He has published 4 volumes of selected articles. He has over 30 monographs on different aspects of Tamil society and culture to his credit. He has edited over 70 volumes on many authors, subjects and fields. Va. Vu. Si, Jeevan, Madras Secular Society, Mayilai Seeni Venkatasami, Athippakkam Venkatachalanar and Puthumaippithan are some of the edited volumes that deserve mention. He has served on the advisory committees of Sahitya Akademi, National Book Trust, National Mission for Manuscripts and other committees within the state and abroad. There are over 70 lectures of Arasu online.

Arasu's primary field of study is the social history of the Tamils. He has undertaken many studies on Tamil classical and modern literatures. He has

paid special attention to 19th century social context, especially in the light of print culture. Many of his students continue the traditions set by him. He has travelled to Malaysia, Singapore, Sri Lanka, Czech Republic, Paris, London and Canada for academic purposes. Arasu is happy and proud to have created a vibrant generation of student-scholars.

# வரலாற்றுச் சுவடுகளில் நாத்திகத்தின் அறிவுத் திறனோக்கிய வளர்ச்சி



**எழுத்தாளர் ஓவியா**
*புதிய குரல் நிறுவனர்*

***கட்டுரைச் சுருக்கம்***

*கடவுள் மறுப்பு வாசகங்களை வடிவமைத்தார் பெரியார்.பலரும் இன்று வரை கடவுள் மறுப்பு வாசகங்களை ஒரு வகையான வசவுஎன்றே புரிந்தும் அதன்படியே பேசியும் வருவது சரியா? என இந்தக் கட்டுரை ஆராய்கிறது. மேலும், அமெரிக்காவைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் ஜேம்ஸ் வில்லியம் டிராப்பர் அவர்கள் எழுதிய மதத்துக்கும் அறிவியலுக்குமான முரண்பாட்டின் வரலாறு என்னும் நூலை எடுத்துக்கொண்டு, அவர் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் கருத்துகளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்து,அந்த நூலின் பல சுவையான பக்கங்களில்,மதத்திற்கும் அறிவியலுக்கும் நடந்த உரையாடல்கள் பற்றி வாசிப்பாளர்களோடு உரையாடுகிறது.பரிணாமக் கோட்பாடு போன்ற அறிவியல் உண்மைகளை எடுத்துக்கொண்டு,அது எப்படி மதம் சொன்னதை மறுத்தது என்பதையும்,அரிஸ்டாட்டில்,பிளோட்டோ தத்துவக் கோட்பாடுகள்,ஒரு தெய்வம் தோன்றிய விதம்,தேவாலயங்கள் தோற்றம்,வளர்ச்சி,தோற்கடிக்க இயலாத பெண் தெய்வங்கள் போன்றவற்றை வரலாற்றின் துணைக்கொண்டும்,அறிவியலைத் துணைக்கொண்டும் ஆராய்கிறது இக் கட்டுரை.*

**கடவுள் இல்லை**
**கடவுள் இல்லை**
**கடவுள் இல்லவே இல்லை**
**கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்**
**கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்**
**கடவுளை நம்புகிறவன் காட்டுமிராண்டி**
**தலைவர் பெரியார்**

இந்த கடவுள் மறுப்பு வாசகங்களை வடிவமைத்த பெரியார் தனது இயக்க நிகழ்வுகளை இந்த வாசகங்களைக் கூறியே துவங்க வேண்டும் என்று நடைமுறைப்படுத்தியதுடன், தனது சிலைகளின் அடியில் இந்த வாசகங்கள் தவறாது இடம் பெறச்செய்ய வேண்டுமென கட்டளையிட்டதுடன், அதன் பொருட்டே தனக்கு சிலைகள் வைக்க ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார். பலரும் இன்று வரை இது ஒரு வசவு வார்த்தைகள் என்றே புரிந்தும் அதன்படியே பேசியும் வருகிறார்கள். ஆனால் அந்நாட்களிலேயே மேடையில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் இந்த வார்த்தைகள் அறிவு வழி வார்த்தைகளேயன்றி, உணர்ச்சி வழி வடிவமைக்கப்பட்டவை அல்ல என்பதனை ஒரு பாடம் போல் விவரிப்பார். அதற்கு ஒரு வரலாற்று சாட்சியத்தை பதிவு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம், இதில் பல சிரிப்பை வரவழைக்கும். அதனினும் கூடுதலாக வேதனையை தோற்றுவிக்கும். இறுதியில் ஆழமான சிந்தனைக்கு இட்டுச் செல்லும்.

## பேராசிரியர் ஜேம்ஸ் வில்லியம் டிராப்பர்

அமெரிக்காவைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் ஜேம்ஸ் வில்லியம் டிராப்பர் அவர்கள் எழுதிய மதத்துக்கும் அறிவியலுக்குமான முரண்பாட்டின் வரலாறு என்கின்ற நூலிலிருந்து சில சுவையான பக்கங்களை இங்கு நாம் காண இருக்கிறோம். இந்நூல் ஆங்கிலத்தில் கிடைக்கிறது. இக்கட்டுரைக்கு தேவையான பகுதிகளில் இக்கட்டுரையாசிரியரின் மொழிபெயர்ப்பே தரப்பட்டிருக்கிறது.

அந்த நூல் விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| ஆசிரியர் | டிராப்பர், ஜேம்ஸ் வில்லியம் (1811–1882) |
| நூலின் பெயர் | ஹிஸ்டரி ஆஃப் த கான்ஃபிலிக்ட் பிட்வீன் ரிலிஜன் அண்டு சையின்ஸ் —(மதத்துக்கும் அறிவியலுக்குமான மோதலின் வரலாறு) |
| | நூல் எழுதப்பட்ட ஆண்டு 1873 |

ஆங்கிலத்திலுள்ள இந்த நூலின் கூற்றுக்களை அப்படியே மொழிபெயர்ப்பாக மட்டும் தராமல் இக்கட்டுரையாசிரியரின் சில சிறிய விளக்கங்களுடன் இந்த கட்டுரை அமைக்கப் பட்டிருக்கிறது.

அறிவியல் என்பது ஏதோ கண்டுபிடிப்புகளின் தொகுப்பல்ல. மூடநம்பிக்கைகள் பொய்ப்பிக்கப்பட்டதற்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குமிடையே ஒரு வரலாற்று உரையாடல் நடந்தது என்கிறார் அவர். அதனை அவருடைய வார்த்தைகளிலேயே பார்ப்போம்

*அறிவியலின் வரலாறானது தனித்தனி கண்டுபிடிப்புகளின் வெறும் பதிவுகளோ அல்லது தொகுப்போ அல்ல, விரிவடைந்து வரும் மனித அறிவின் ஆற்றல் ஒருபுறமும் மரபுசார் நம்பிக்கைக்கும் மனிதர்களின் நலன்களுக்கும் இடையிலான அழுத்தம் ஒருபுறமுமாக இரண்டு முரண்பட்ட சக்திகளுக்கிடையிலான உரைத்தொகுப்பாகும் அது,*

*(நூல் முன்னுரையிலிருந்து)*

இந்த நூல் வெளிவந்து ஒன்றரை நூற்றாண்டாகி விட்டது. ஆனால் அறிவியலுக்கு இந்த பேராசிரியர் கூறியிருக்கும் இந்த விளக்கம் இன்றைக்கும் புதுமையாய் நமது சிந்தனைக்கு புது ஒளி பாய்ச்சுவதாய் அமைந்து நிற்கிறது. அதிலும் மதமும், அறிவியல் போர்வையில் கார்ப்பரேட்டுகளாகி விட்ட அறிவியல் நிறுவன அதிகாரிகளும் கைகோர்த்து உலா வரும் இந்த காலகட்டத்தில் பேராசிரியர் ஜேம்ஸ் வில்லியம்ஸ் டிராப்பரின் மேற்காணும் வரிகளை வாசித்தவுடன் புரிந்து கொள்வது சற்று கடினம். எனவே அவரது மேற்கூறிய வார்த்தைகளை சில உதாரணங்கள் வழியாக விவரித்து சொல்ல நாம் விரும்புகிறோம்.

## படைப்புக் கோட்பாட்டை மறுப்பதே பரிணாமத் தத்துவம்

பரிணாமத் தத்துவம் அறிவியலின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு. இங்கு டிராப்பர் அவர்களின் பார்வையில் அறிவியல் என்பது வெறுமனே பரிணாமத் தத்துவம் குறித்த தகவல்களின் தொகுப்பல்ல மாறாக அது கடவுள் உலகத்தைப் படைத்தார் என்கின்ற மதவாதிகளின் படைப்பு தத்துவத்தை மறுத்த உரையாடலாகும். உலகம் உருண்டை என்கின்ற கண்டுபிடிப்பானது தனியான ஓர் அறிவியல் உண்மையல்ல மாறாக உலகம் தட்டை என்கின்ற மதவாதிகளின் கூற்றை, பைபிளின் கூற்றை மறுத்த அக்கூற்றின் மீது பதில் வினைபுரிந்த வரலாற்றின் உரையாடலாகும். அறிவியலை இவ்வாறுதான் அவர் வியாக்கியானப் படுத்துகிறார்.

இதன் வழியாக நாம் ஓர் உண்மையை உணர வேண்டும். மதத்தை மறுத்து உரையாடத் தயாராக இல்லாத ஒருவருக்கு அவர் சில அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடித்தவராகவே இருந்தாலும் அறிவியல் உலகத்தில் முழுமையான இடமில்லை என்கின்ற உண்மைதான் அது. இதன் இன்னொரு பக்கம் அறிவியல் உலகத்தின் பக்கம் நின்று மதத்தின் வாதங்களை எதிர்த்து உரையாடிக் கொண்டிருக்கும் ஒருவர் நவீன அறிவியலின் பௌதீகத்தின் வேதியியலின் உயிரியல் தத்துவங்களின் அடிப்படையில் தொழிற்படுகிற ஒருவராக இல்லா விட்டாலும் அறிவியல் உலகைப் படைப்பதில் அவருக்கு இடம் இருக்கிறது. அந்த வகையில்தான் நாம் தந்தை பெரியார் அவர்களை சமூக விஞ்ஞானி என அழைக்கிறோம்.

## ஏன் அறிந்து கொள்ள வேண்டும்?

மதவாதிகளுடன் போராடி பல அறிவியலாளர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்துதான் அறிவியல் உண்மைகளை நிறுவினார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததுதானே.... இதில் புதிதாகத் தெரிந்து கொள்ள என்ன இருக்கிறது என்கின்ற கேள்வி எழுவது இயல்பே. கலிலியோ, புரூனோ போன்றோரின் உயிர்த்தியாகங்கள் நாம் அறியாதவையல்ல. அவற்றைத் தாண்டி இப்போது நாம் பார்க்க இருக்கும் இந்த நூலின் பக்கங்கள் நமக்கு தெரிவிப்பது என்ன என்பதையும் டிராப்பரின் வார்த்தைகளிலேயே பார்ப்போம்

*இந்தப் பக்கங்களில் பேசப்பட்டுள்ள பல விவாதங்கள் குறித்து பரவலாகப் பலரும் அறிந்தே உள்ளனர். ஆனால் அவை எவ்வாறு குறுங்குழு விவாதங்களாக, நீண்ட உட்பூசல்களாக நீண்ட வரலாற்றை நிரப்புகின்றன என்பது பற்றிய போதுமான விபரங்களை போதுமான வரை இதுவரையில் எடுத்து வைக்கப்படவில்லை. உண்மையைத் தேடுபவர்களின் கவனத்திற்க்கு இந்த நீண்ட விவாதங்கள் முழு விபரங்களுடன் இந்த நூலில் தரப்பட்டுள்ளன.*

*(நூல் முன்னுரையிலிருந்து)*

அதாவது ஒரு பழைய கருத்துடன் முரண்படுகின்ற ஒரு புதுக் கருத்து தோன்றிய நாளிலிருந்து பல்வேறு குறுங்குழு விவாதங்கள் மனித சமுதாயத்தின் அறிவுப் பயணத்தை இட்டு நிரப்புகின்றன. இறுதியில் புதிய கருத்து சமுதாயத்தில் நிலைபெறுகிறது. அப்போது அந்தக் குறுங்குழு விவாதங்கள் மறக்கப்பட்டுவிடுகின்றன. மறக்கப்பட்ட அந்த விபரங்களைப் பதிவிடுவதே இங்கு சிறப்பு பெறுகிறது. சரி, ஏன் அவற்றை பதிவிட வேண்டும்? **ஏனெனில் அந்தக் குறுங்குழு விவாதங்களைத் தோற்றுவித்தவர்கள் அந்த விவாதங்களைக் கை விடுகிறார்களே ஒழிய அந்த மனநிலையை அல்ல.** அந்த மனநிலை அறிவியலுக்கும் உண்மைக்கும் எதிராக சமுதாயத்தில் இன்னும் உயிர்ப்போடு எடுத்துவரப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதனை நடப்பு சமுதாயத்தில் பல உதாரணங்களோடு நாம் பொருத்தி விளக்கிட முடியும். ஆனால் அதன்பின் இக்கட்டுரை முழுமையும் அதற்கேயானதாக மாறிவிடும். எனவே மதவாதத்துடன் அல்லது பழமைவாதத்துடன் தொடர்ந்து உரையாடலில் இருக்கின்ற பகுத்தறிவாளர்கள், அறிவியலின் பக்கம் நிற்பவர்கள் டிராப்பரின் வார்த்தைகளில் சொல்வதானால் உண்மையைத் தேடக்கூடியவர்கள். இந்த விவாதங்களின் முழு விபரங்களை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## அறிவின் முதற்படி பயணம்

தனக்கு தோன்றியவாறெல்லாம் கடவுளை மனிதன் படைத்து வைத்திருந்த நிலையில் இக்கற்பனைகளை முதலில் உடைத்து போட்டது மனித இனத்தின் பயண எல்லைகளில் ஏற்பட்ட புரட்சிதான். நிலத்திலும் நீரிலும் அதிக தூரம் பயணிக்க தொடங்கிய போதே கடவுள் பற்றிய கற்பனைச் சித்திரங்கள் உடையலாயின. மனித சமுதாயத்தின் சிந்தனை இரண்டு தரப்பாக பிரிந்தது. முன்னோர் சொல்லியதே உண்மை என்று ஒரு தரப்பும், அதற்கு நிரூபணமில்லை எனவே அவை பொய்தான் என்று இன்னொரு தரப்பும் தோன்றியவுடன் அவற்றுக்கிடையிலான உரையாடலே அதன்பின் வரலாற்றைத் தீர்மானிப்பதாயிற்று. இரண்டாவது அணியில் தத்துவவியலாளரும் வரலாற்றாசிரியர்களும் அவர்களைத் தொடர்ந்து கவிஞர்களும் இணைந்தனர். எஸ்கிலஸ் என்கின்ற நாடகக் கலைஞன் மதநம்பிக்கையாளர்களால் கல்லெறிந்து கொல்லப்படுவதிலிருந்து நூலிழையில் தப்பினார். எனவே நாத்திகக் கலகத்தை முதலில் தொடங்கிய அணி இலக்கிய அணிதான் போலும்.

## கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்

மனிதனால் கடவுள் தோற்றுவிக்கப்பட்ட வடிவத்தில் அதனைப் பொய் எனப் புரிந்து கொள்ள மனிதர்களின் விரிந்து வந்த அனுபவ அறிவே போதுமானதாக இருந்தது. ஆனால் முதலாம் அணியை அதாவது பக்தி அணியை காப்பாற்றுகிற வேலையை மன்னர்கள் மேற்கொள்ளலாயினர். முட்டாள்களின் குழந்தையாகிய கடவுள் தங்களுக்கு மிகப் பெரிய ஆயுதமாகப் பயன்பட முடியும் என்பதை மன்னர்கள் குலம் கண்டுகொண்டது. எனவே இயற்கையான அனுபவ அறிவின் மூலமே முற்றுப்பெற்றிருக்க வேண்டிய கடவுள் நம்பிக்கை

மன்னர்களால் தத்தெடுத்துக் காப்பாற்றப்பட்டது. இதற்கொரு உதாரணம் வேண்டுமென்றால் உலகின் மாவீரர் என அறியப்படும் அலெக்சாண்டர் தனது போர்ப் பயணத்தின் ஓர் உச்ச கட்டத்தில் தனது வீரர்களை தனது வசம் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் பொருட்டு தன்னை பெண் தெய்வம் ஜீபிடர் அம்மனின் மகன் என்று அறிவித்துக்கொள்கிறார். அது மட்டுமல்ல தான் பிறப்பித்த ஆணைகளில் இறுதியில் ஜீபிடர் அம்மனின் மகன் என்றே எழுதி கையொப்பமிடலானார். கடவுள் கற்பனையை தொய்வின்றி காப்பாற்றி அவர்களின் பிரதிநிதியாக மக்களிடம் தன்னைக் கொண்டு செல்லுவதன் மூலமாக மட்டுமே வானளாவிய அதிகாரத்தைத் தாங்கள் பெறமுடியும் என்பதை மன்னர்கள் தெரிந்து கொண்டார்கள். (கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன் என்றார் பெரியார்)

ஆனால் அதேவேளையில் அலெக்சாண்டர் போன்ற மன்னர்களுக்கும் அவரின் வழித்தோன்றல்களுக்கும் தத்துவவியலின் வழி இயற்கை சார்ந்த உண்மைகளை அறிந்து கொள்கின்ற ஆர்வத்தையும் தடை செய்திடும் எண்ணமில்லை. விண்ணிலும் மண்ணிலும் புதைந்து கிடக்கும் இயற்கை உண்மைகளை அறிந்திட பெருமுயற்சிகள் மேற்கொண்டார்கள். கண்டுணர்ந்த உண்மைகளை பயன்படுத்தி அறிவியற் செயற்பாடுகளையும் தொடர்ந்தார்கள். இங்கு டிராப்பர் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார், **அவர்கள் எளிய மக்களுக்கு மதத்தையும் மேல்மட்டத்திலுள்ள மக்களுக்கு தத்துவத்தையும் பிரித்து கொடுத்தார்கள்.**

## கலாச்சாரங்கள் பரவின கடவுள்கள் தோற்றார்கள்

அறிவின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வரலாற்றில் வித்திட்டது மனித இனத்தில் நடந்த போர்கள்தாம் என்று சொல்கிறார்கள். இரண்டு விதமான மதங்கள் வெவ்வேறு கடவுள்களைக் கொண்ட மக்கள் போரிட்டுக் கொண்டபோது வெற்றி பெற்ற படைவீரர்கள் தோல்வியுற்றவர்களின் கடவுள் சிலைகளை பரிகாசத்துடன் சிதைத்துத் தள்ளினார்கள். இத்தகைய செய்கைகள் இதுகாறும் அந்தச் சிலைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த தெய்வீக மதிப்பை அவற்றை வணங்கி வந்த மக்கள் மத்தியிலேயே பெரும் கேள்விக்குள்ளாக்கின. இவ்வளவு காலமாக தாங்கள் அச்சத்துடன் வழிபட்டு வந்த கடவுள் சிலைகள் தலையில்லாமல் கைகளில்லாமல் மூளியாய் நின்ற போது அவை அவற்றை வழிபட்டு வந்த மக்களின் நம்பிக்கையை இழக்கலாயின. மட்டுமன்றி வெற்றி பெற்ற நாடுகளில் நிலவி வந்த கலாச்சாரங்கள் வெற்றி பெற்றவர்களையும் சென்றடைந்தன. வேறுபட்ட நம்பிக்கைகள் மத அமைப்புகளின் சந்திப்பு மக்களின் மத அமைப்புகளின் மீது மிகப் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியது என்று டிராப்பர் குறிப்பிடுகிறார்.

அரிஸ்டாட்டிலின் சீடரான அலெக்சாண்டருக்கு நாம் அதிகம் அறிந்திராத வரலாற்று முகம் ஒன்று இருக்கிறது. தனது படையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க தன்னைக் கடவுளின் புதல்வர் (கிறித்துவ மதத்தின் தோற்றத்திற்கு முன்பாகவே கன்னி மேரியின் சாயலில் பல கதைகள் உலவி வந்திருப்பதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது) என்று கூறிக் கொண்டவர்தான் அலெக்சாண்டர் என்ற போதிலும் 33 வயதிலேயே இறந்து போன அந்த இளைஞனுக்கு புதிய சமுதாயத்தைப் படைத்திடும் கனவுகள் இருந்திருக்கின்றன. அதனைப் பற்றி நாம் அறிந்துகொள்வது அவசியம். ஏனெனில் அவ்வாறு அவரால் படைக்கப்பட்ட உலகின் முதல் செயற்கை நகரமாகிய அலெக்சாண்டிரியா மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சிக்கு பெரிய அளவில் பங்காற்றியது. மனித சமுதாயத்தின் அறிவுத்திறன் நோக்கிய வளர்ச்சியில் அய்ரோப்பாவின் மிகப் பெரிய பங்களிப்பை அலெக்சாண்டிரியா அருங்காட்சியகமே வழங்கியது.

பாரசீகப் படைகளை முறியடித்து இந்தியா வரையும் கூட தனது போர்ப்பயணத்தை மேற்கொண்ட நிலையில் மனிதர்கள் பல்வேறு இனமாக பல்வேறு கலாச்சாரங்களில் வாழ்ந்து வந்த போதிலும் இவர்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டியவர்கள் என்கின்ற சிந்தனை அலெக்சாண்டருக்கு தோன்றியிருக்கிறது. அவரது போர்த்திறத்தைப் பற்றிப் பேசிய அளவுக்கு இந்த உலகம் அவரது இந்த கனவைப் பற்றிப் பேசவில்லை. கி.பி. 331 ஆம் ஆண்டில் எகிப்து கடற்கரையோரம் அலெக்சாண்டரால் நிறுவப்பெற்ற

அலெக்சாண்டிரியா நகரத்தின் தோற்றமும் வரலாறும் மிக மிக சிறப்பு வாய்ந்தவை. அந்நகரின் தோற்றம் பற்றி டிராப்பர் கூறியிருப்பதை கீழே காண்போம்,

*அவர் தனது தலைமையகத்தை நாட்டின் பழைய தலைநகரங்களில் நிறுவாமல் அலெக்சாண்டிரியாவில் நிறுவினார். ஜீபிடர் அம்மன் கோவிலுக்கு சென்ற போது மெசிடோனிய ஆக்ரமிப்பாளர், அவ்விடம் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையிலான ஓர் வணிக நுழைவுத் தளமாக அமையக்கூடும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு அந்நகரில் அடிக்கல் நாட்டினார். இங்கு கவனிக்கத்தக்கவை, அலெக்சாண்டரே பாலஸ்தீனத்திலிருந்து யூதர்களை இங்கு அழைத்து வந்து குடியமர்த்தினார் என்பது மட்டுமல்ல, தோலமி சோட்டர் தனது ஜெருசலமின் முற்றுகைக்குப் பிறகு மேலும் நூறாயிரம் பேரை அழைத்து வந்தார் என்பதோடு மட்டுமல்ல, அவரைப் பின் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிலடெல்பியஸ் ஒரு லட்சத்து எண்பதனாயிரம் அடிமைகளை அவர்களின் எகிப்திய எஜமானர்களுக்கு அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய தொகையை செலுத்தி அவர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுவித்து இங்கு அழைத்து வந்தார். இந்த யூதர்கள் அனைவருக்கும் மெசியடோனியருக்கு வழங்கப்பட்ட அனைத்து சலுகைகளும் வழங்கப்பட்டன. பரிவான இந்நடத்தையின் விளைவாக அவர்களின் பல சிரியன்களும் தம் தேசத்தவருடன் மனமுவந்து தாமாகவே எகிப்திற்குள் வந்தனர். அவர்களுக்கு "ஹெலனிஸ்டிக்கல் (கிரேக்கம் சார்ந்த) யூதர்கள்" என்ற பட்டமளிக்கப்பட்டது. இதே போல், சோட்டரின் நல்லாட்சியால் கவரப்பட்டு எண்ணிலடங்கா கிரேக்கர்கள் அந்நாட்டில் அடைக்கலம் புகுந்தார்கள். மேலும், பெரிடிகாஸ் மற்றும் ஆண்டிகோனஸ் ஆகியோரது படையெடுப்புகள் கிரேக்க வீரர்கள் பிற மெசிடோனிய தளபதிகளைத் துறந்து இப்படைகளில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.*

*எனவே, அலெக்ஸாண்டரியாவின் மக்கள் தொகை மூன்று தேசிய இனங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. 1) பூர்வீக எகிப்தியர்கள் 2)கிரேக்கர்கள் 3) யூதர்கள் இந்த உண்மையானது நவீன ஐரோப்பாவின் மத நம்பிக்கையின் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றது. ((நூல் முதல் அத்தியாயம்).*

ஆம், எகிப்தியர்கள் யூதர்கள் கிரேக்கர்கள் ஆகிய மூன்று தேசிய இனங்களை திட்டமிட்டு இணைத்து ஒரு புதிய சமுதாயத்தைப் படைத்திட அவரும் அவர் தளபதியாகிய தோலமியும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். அந்த சிந்தனையே அதுகாறும் நிலவி வந்த மத அமைப்புகளின் மீது மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கியது. அதில் விளைந்தது தான் உலகப் புகழ் பெற்ற பின்னாளில் ஜீலியஸ் சீசரால் நெருப்புக்கிரையாக்கப் பட்ட அலெக்சாண்டிரியா அருங்காட்சியகம். இந்த அருங்காட்சியகம் குறித்த ஒரு முதற்கட்ட விவரணையை நாம் டிராப்பரின் வார்த்தைகளிலேயே காண்போம்,

இந்த அருங்காட்சியகத்தை அமைப்பதில் தோலமி சோட்டருக்கும், அவருடைய மகன் பிலடெல்பஸிக்கும் மூன்று நோக்கங்கள் இருந்தன: (1) உலகில் அதுவரை தோன்றியுள்ள அறிவை நிலை பெறச் செய்வது (2) அதனை விருத்தி செய்வது (3) அதனைப் பரவச் செய்வது

### 1. அறிவை நிலைபெறச் செய்ய:

தலைமை நூலகருக்கு அரசரின் செலவில் எத்தனை நூல்கள் வேண்டுமானாலும் வாங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. உரிமையாளர்கள் விற்பதற்குத் தயாராக இல்லாததால் வாங்கவியலாமல் உள்ள நூல்களை எழுதிப் படிகள் எடுப்பதற்கு படியெடுப்போர் குழு ஒன்று அருங்காட்சியகத்தில் அமர்த்தப்பட்டிருந்தது. வெளிநாட்டினர் யார் எந்த நூலைக் கொண்டு வந்தாலும் அந்நூல் உடனடியாக நூலகத்தில் பெறப்பட்டு படிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்நகலை உரிமையாளரிடம் தந்து விட்டு மூல நூல் நூலகத்தில் வைக்கப்பட்டது. அடிக்கடி இதன் பொருட்டு பெரும் பொருள் நட்ட ஈடாகத் தரப்பட்டது. இவ்வாறாகவே, தோலமி யூர்கிட்டஸ், ஏதென்சிலிருந்து யூரிபைட்ஸ், சோபோக்ளஸ், மற்றும் எஸ்கிலஸ் ஆகியோர் படைப்புகளையெல்லாம் பெற்றதாகக் கூறப்படுகிறது. அவர் அந்தப் படைப்பாளிகளுக்கு எடுக்கப்பட்ட படிகளுடன், பதினைந்தாயிரம் டாலர்கள் நட்ட ஈடாகத் தந்தார். சிரிய படையெடுப்பில் வெற்றி பெற்று திருப்பி வந்த போது அவர் ஏக்பட்னாவிலிருந்தும், சூசாவிலிருந்தும் கேம்பிசெசும், மற்ற படையெடுப்பாளர்களும் எகிப்திலிருந்து கொண்டு சென்ற அனைத்து எகிப்திய நினைவுச் சின்னங்களையும் மீட்டுக் கொண்டு வந்து அவற்றின் பழைய இடங்களில் இடம் பெறச் செய்தார். தோலமி பிலடெல்பியஸின் உத்தரவின் பேரில் 'ஹீப்ரு' மொழியிலிருந்த பைபிள் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு நம்பற்கரிய பெரும் தொகை தரப்பட்டது. இதைப் போன்ற பிற படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்ட

போதும், நகலெடுக்கப்பட்ட போதும் பெரும் தொகை ஈடாகத் தரப்பட்டது.

### 2. அறிவை விருத்தி செய்ய:

அருங்காட்சியகத்தின் தலையாய நோக்கங்களில் ஒன்று கல்விக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருந்த ஓர் அறிஞர் குழு அருங்காட்சியகத்தையே இல்லமாகக் கொண்டு, அங்கு தங்க வைக்கப்பட்டு அரசரின் செலவில் பராமரிக்கப்பட்டது. சில நேரங்களில் அரசரும் அவர்களுடன் கலந்து கொண்டார். அம்மாதிரியான தருணங்களைப் பற்றிய பழங்கூற்றுகளும், கதைகளும் இன்றைய நமது காலம் வரை வந்து சேர்ந்திருக்கின்றன. இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்ட போது, இங்கு தங்கியிருந்த பேராசிரியர்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள் - இலக்கியம், கணிதவியல், வானியல், மற்றும் மருத்துவம். இப்பொதுத் தலைப்புகளின் கீழ் பொருத்தமான முறையில் குறுந்தலைப்புகள் பிரிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, இயற்கையின் வரலாறு மருத்துவத்தின் ஒரு பகுதியாகக் கணிக்கப்பட்டிருந்தது. பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்ற ஓர் உயர் அலுவலர் இந்தஅமைப்புக்கு தலைவராக நியமிக்கப்பட்டு அதன் நலன்களுக்கு பொறுப்பு வகித்தார். பல வருடங்கள் ஏதென்சின் ஆளுநராக இருந்த 'டெமுட்ரிஸ் பலார்கஸ்', அக்காலகட்டத்தின் மிகச் சிறந்த கல்விமான் அவராகத்தான் இருக்கக்கூடும். அவர்தான் இந்த அலுவலராக முதன் முதலில் நியமிக்கப்பட்டார். அவருக்குக் கீழ் நூலகரும், நமது காலம் வரை நினைவு கூறப்படுகின்ற அறிஞர்களான 'எரோஸ்தனிஸ்' மற்றும் 'அப்போலினியஸ்' ரோயஸ் போன்றோர் பங்கேற்ற அலுவலகமும் இயங்கின.

இந்த அருங்காட்சியகத்தை ஒட்டி ஒரு தாவரவியல் பூங்காவும், விலங்கியல் பூங்காவும் காணப்பட்டன. இந்தத் தோட்டங்கள் அவற்றின் பெயர்கள் குறிப்பிடுவதைப் போல் தாவர மற்றும் விலங்கினங்கள் குறித்த ஆய்வை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தன. வான்கோள்களின் இயக்கங்களைக் காட்டுவதற்குரிய உலோகப் பட்டைகளாலான மாதிரிக் கோள வகைகள், மாதிரி உலக உருண்டைகள், கதிர்த் திருப்பு முகங்கள், நில நடுக்கோடு இவற்றைக் காட்டும் வளையங்கள், உயர்வுமானிகள், விழிக்கோட்ட வழுச் சார்ந்த ஒரு பொருளை இரண்டு புள்ளிகளிலிருந்து பார்க்கும் போது ஏற்படும் கோணங்களின் வேறுபாடுகளை அளக்கும் அளவு கோல்கள் மற்றும் அப்போது பயன்பாட்டிலிருந்த பிற கருவிகள், பலபடி நிலைகளைக் கொண்ட பகுமானிகள், ஆகியவையடங்கிய ஒரு வானியல் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த ஆய்வுக் கூடத்தின் தரையில் ஒரு தீர்க்க ரேகை வரையப்பட்டிருந்தது. காலத்தையும், வெப்பத்தையும் சரியாக அளக்கக் கூடிய கருவிகளின் தேவை தீவிரமாக உணரப்பட்டது. டெஸ்பியஸின் நீர்வட்டில் நாழிகைப்பொறி காலத்தைக் கணிப்பதற்கு ஓரளவிற்கு பயன்பட்டது. ஆனால் இது மிகவும் தோராயமாகவே நேரத்தைக் கணித்தது. ஒரு குவளை நீரில் மிதந்து கொண்டிருக்கும் நீர்ம எடைமானியைக் கொண்டு வெப்பத்தை அளக்கலானார்கள். இக்கருவி அடர்த்தியின் மாறுபாடுகளைத் தீர்மானித்தது. வாழ்வின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த பிலடெல்பியஸ், மரணம் குறித்துத் தாங்கிக் கொள்ள முடியாத அச்ச உணர்வுக்கு ஆட்பட்டு அவருடைய நேரத்தின் பெரும்பகுதியை ஆயுட்காலத்தை நீட்டிக்கக் கூடிய மருந்தைக் கண்டுபிடிக்க செலவிட்டார். இந்த முயற்சியின் பொருட்டு அருங்காட்சியகத்தில் ஒரு வேதியியல் சோதனைச் சாலை அமைக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் நிலவி வந்த கருதுகோள்களுக்கும் குறிப்பாக எகிப்திய நம்பிக்கைகளுக்கும் மாறாக இந்த அருங்காட்சியகத்தின் மருத்துவத் துறையில் மனித உடலினைக் கூறு செய்து பார்க்கும் உடற்கூற்று. அமைப்பியல் ஆய்வு அறை ஒன்று அமைக்கப்பட்டது. அதில் இறந்தவர்களின் உடல்கள் மட்டுமல்ல, குற்றத்திற்காக தண்டனை பெற்ற உயிருள்ள மனிதர்களும் பயன்படுத்தப்பட்டனர்.

### 3. அறிவைப் பரப்புவதற்காக

அறிவைப் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், மனித அறிவின் பல்வேறு துறைகளில் நிகழ்ச்சிகள், உரைவீச்சுகளாகவும், கலந்துரையாடல்களாகவும், அல்லது வேறு பொருத்தமான வடிவத்திலுள்ள நிகழ்ச்சிகளாகவும் நடத்தப்பட்டன. பல்வேறு நாடுகளிலிருந்து மாணவர்கள் கூட்டம் கூட்டமாக

இந்த அறிவு மய்யத்திற்கு வருகை புரிந்தனர். ஒரு காலத்தில் பதினான்காயிரத்துக்கும் குறையாத எண்ணிக்கையில் அவர்கள் வருகை இருந்தது என்று சொல்லப்படுகிறது. தொடர்ந்து வந்த காலகட்டங்களில் கிறித்துவ மதாலயம் கூட தங்களுடைய புகழ் பெற்ற மதகுருமார்களாகிய கிளிமன்ஸ் அலெக்ஸாண்டிரினஸ், ஒரிஜின், அதனாசியஸ் போன்றோரை அங்கிருந்துதான் பெற்றது. (நூலின் முதல் அத்தியாயம்)

இந்த அலெக்சாண்டிரியா அருங்காட்சியகத்தின் அறிவியல் பணிகள்தாம் இறையியலின் அடிப்படைக் கோட்பாடும் முதற்கோட்பாடுமான உலகம் தட்டையானது என்கின்ற கற்பனையைப் பொய் என நிறுவி உலகம் உருண்டை என்கின்ற புள்ளியை நோக்கி மனித சிந்தனையைத் திருப்பின. உலகம் உருண்டை என்கின்ற கருத்தை எரோஸ்தனீசு என்கின்ற அறிஞர் கண்டுணர்ந்தது அலெக்சாண்டிரியா அருங்காட்சியகப் பணிகளில்தான்.

மேலே எடுத்துக் காட்டியுள்ள வரலாற்று நிகழ்வுகள் எத்தனை பெரிய உண்மைகளை நமக்கு சுட்டி நிற்கின்றன. சமுதாய சீர்திருத்த சிந்தனையும் மனிதநேயமும் அறிவியல் வளர்ச்சியும் அல்லாத அறிவியல் சிந்தனையும் ஒன்றிலிருந்து மற்றொன்று தவிர்க்க இயலாதபடி பிணைந்திருப்பதையும் ஒன்றின் விளைவாக இன்னொன்று முகிழ்த்திருப்பதையும் நம்மால் உணர முடிகிறதல்லவா?

## அரிஸ்டாட்டிலும் பகுத்தறிவுச் சிந்தனையும்

அரிஸ்டாட்டிலின் சிந்தனையின் வளர்ச்சிதான் அறிவியல் உலகமாக மலர்ந்தது என்று டிராப்பரின் இந்த நூல் கூறுகிறது. அது மட்டுமன்றி அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள் பகுத்தறிவு சார்ந்து கடின உழைப்பைக் கோரி நின்ற வேளையில் பிளேட்டோவின் சிந்தனைகள் கற்பனையான புனைவுகள் சார்ந்து சிந்தனையில் உழைப்பு சோம்பேறித்தனத்தைத் தோற்றுவித்தன என்றும் அவர் குறிப்பிடுகிறார். இந்த இடமும் நாம் ஆழமாகக் கவனிக்க வேண்டிய இடமாகும். அரிஸ்டாட்டில் மற்றும் பிளேட்டோவின் சிந்தனா மற்றும் உண்மையை அறியும் பரிசோதனை முறைகளைக் குறித்து டிராப்பர் கூறுவதைக் கேளுங்கள்

*பிளேட்டோவின் தத்துவ முறையானது அரிஸ்டாட்டிலின் முறையின் தலைகீழ் வடிவமாகும். அதன் துவக்கப் புள்ளியே நம் கண்களுக்குக் காட்சியாகாத, நம்பிக்கையின் அடிப்படையிலேயே தனது இருத்தலைக் கொண்டிருக்கிற இயற்கை முழுதளாவிய அண்டம் ஆகும். இதிலிருந்து குறிப்பானவற்றிற்கும், விரிவான தகவல்களுக்குள்ளும் அத்தத்துவம் செல்கிறது. அரிஸ்டாட்டிலோ இதற்கு நேர் மாறாகக் குறிப்பானவற்றிலிருந்து பொதுவானவற்றை நோக்கித் தனிவிதியிலிருந்து பொது விதியை வந்தடையும் பகுப்பாய்வு முறையை பயன்படுத்தி அவற்றை எடுத்துச் செல்கிறார்.*

*எனவே, பிளேட்டோ கற்பனைத் திறனை நம்பினார். அரிஸ்டாட்டில் பகுத்தறிவை நம்பினார். முன்னவர் ஓர் ஆதிக்கருத்தில் தொடங்கி அதனை மேலும் மேலும் கூறு போட்டுப் பார்த்துக் கொண்டே வந்து இறுதியில் பல்வேறு தகவல்களை வந்தடைகிறார். பின்னவர் தனக்கு, புலனாகும் / கிட்டக்கூடிய தகவல்களிலிருந்து அவற்றை ஒருங்கிணைத்துப் பார்த்து பொதுவான கருத்துருவாக்கங்களைப் பெறுகிறார். எனவே, பிளேட்டோவின் முறையில் தக்கவாறு நிரூபிக்கப்படாவிட்டாலுமே கூட 'அதி அற்புதம்'. என்று தோன்றக் கூடியவற்றை படைக்க முடிந்தது.*

*ஆனால், அரிஸ்டாட்டிலின் முறை காலதாமதம் ஏற்படுத்தினாலும் நிரூபிக்கக் கூடிய திட்டமான முடிவுகளைத் தரக்கூடியதாக இருந்தது. அம்முறையானது, உண்மைகளைத் திரட்டுவதில் முடிவில்லாத உழைப்பையும், தொடர்ச்சியான பரிசோதனைகளையும், உற்றாய்வையும், அவற்றை செய்மாதிரிகளில் பயன்படுத்துவதையும் கோரியது. பிளேட்டோவின் தத்துவமானது ஆகாசத்தில் கட்டப்பட்ட வியக்கத்தகு கோட்டையைப் போன்றது, அரிஸ்டாட்டிலின் தத்துவமோ கடுமையான உழைப்பில் பல தோல்விகளுக்குப் பின்னால் பாறையில் செதுக்கிய உறுதியான சிற்பம் போன்றது.*

*அறிவைப் பயன்படுத்துவதை விடக் கற்பனையைப் பயன்படுத்துவது மிகவும் கவர்ச்சிகரமானதுதான். அலெக்சாண்டிரியாவின் அறிவுஜீவிதத்தில் சரிவு ஏற்பட்டபோது நீண்ட சலிப்பூட்டக்கூடிய உற்றாய்வுகளையும், பல்வேறுபட்ட மூளைப் பயிற்சிகளையும் விட நோவுதராத மடிமையுடைய முறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. நவீன பிளேட்டோனிய போதனா முறையில் 'அம்மோனியம் சாக்கா' மற்றும் 'புளூட்டோனிய' அற்புத சாகசங்களும் கற்பனைக் கோபுரங்களும் நிரம்பி வழிந்தன. (புளூடோனியஸ், அம்மோனியம் சாக்கா = பிளேட்டோ பள்ளியில் உருவான ஆன்மீக அறிஞர்கள்) பழைய அருங்காட்சியகத்தின் கடுமையான கணக்குகளின் இடத்தை இவை பிடித்துக் கொண்டன. ((நூல் முதல் அத்தியாயம்)*

இதன் வாயிலாக ஆன்மீகப் பள்ளிகள் எவ்வாறு உருவாகின என்கின்ற தோற்றுவாய் குறித்தும் அதிஅற்புதங்களின் பிறப்பிடங்கள் குறித்தும் நாம் அறிகிறோம் இல்லையா... அதுமட்டுமல்ல பிளேட்டோவின் சிந்தனையே பிற்காலத்தில் கிறித்துவ மதத் தத்துவத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

## பிறந்தது எதேச்சதிகாரம்; தோன்றியது ஒரு தெய்வ வழிபாடு

இதற்கடுத்த காலகட்டத்தில்தான் ரோமக் குடியரசு எதேச்சதிகாரப் பேரரசக உருமாறியது. உலகத்தில் பல்வேறு தேசிய இன மக்களை ஒரே அரசின் குடைக்குக் கீழ் கொண்டு வந்த எதேச்சதிகாரம் பிறந்தது. இதன் உடன்விளைவாகவே கிறித்துவ மதம் மக்களின் கையிலிருந்து பிரிக்கப்பட்டு அரசு ஆதரவு பெற்ற மதமாக வளர்ந்தது. அரசையும் மதகுருமார்களையும் எதிர்த்துத் தோன்றிய மதம் மீண்டும் அவர்கள் கைகளில் போய்ச் சேர்ந்தது. முதலில் பல தெய்வ வழிபாட்டின் இடத்தை ஒரு தெய்வ வழிபாடு எப்படி எடுத்துக் கொண்டது என்பதை டிராப்பர் கீழ்க்காணும் வரிகளில் கூறுகிறார்,

### ரோமில் ஒரு தெய்வ வழிபாடு:

*வெற்றி கொள்ளப்பட்ட அனைத்து நாடுகளின் அரசர்களும் மறைந்துபோனார்கள். அவர்களின் இடத்தில் ஒரே ஒரு பேரரசர் வந்தார். அந்தக் கடவுள்களும் மறைந்து போனார்கள். எல்லாக் காலங்களிலும் மதத்துக்கும் அரசியலுக்கும் இருந்து வந்திருக்கிற தொடர்பைக் கருதும் போது, இவ்வாறாக பல தெய்வ வழிபாடு இங்கு ஒரு தெய்வ வழிபாட்டுக்கு வழி விட்டுக் கடந்து சென்றது வியப்புக்குரிய ஒன்றாக இருக்க இயலாது. அவ்வகையில்தான் தெய்வீக மரியாதைகள் முதலில் மறைந்தவர்களுக்கு செலுத்தப்பட்டு காலப்போக்கில் உயிருள்ள பேரரசருக்கு செலுத்தப்படலாயின.*

*எல்லா மக்கள் பிரிவினரும் ஒரு தெய்வ வழிபாடு என்ற கருத்துக்கு ஒரே நேரத்தில் வந்து சேரவில்லை. தங்கள் தொழிலின் வாயிலாக வாழ்க்கையின் மேடுபள்ளங்களை பற்றி அதிகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றிருந்தவர்களும், அதிக அளவில் அறிவுத் திறமிக்கக் கருத்துக்களையும் கொண்டிருந்த வியாபாரிகள், வழக்கறிஞர்கள் மற்றும் போர் வீரர்கள் முதலில் மாறினார்கள். விவசாயக் கூலிகளும், தொழிலாளர்களும், விவசாயிகளும் இறுதியாக வந்து சேர்ந்தார்கள். ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

பிறக்கும் போது கிறித்துவம் அரசுக்கு எதிரான அமைப்பாகவே தோன்றியது பொதுவுடமைக் கொள்கையையும், அன்பையும், இரக்கத்தையும் பின்பற்றியது. எளிய மக்களின் அமைப்பாக தோன்றிய கிறித்துவம் அரசு மதமாக மாறியது எப்படி என்கின்ற கேள்விக்கான பதில் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். கிறித்துவ மதத்தின் தோற்றம் பற்றி டிராப்பர் இவ்வாறு கூறுகிறார்;

*கிழக்குப் பகுதிகளில் ஒன்றான 'சிரியா'வில் சில மனிதர்கள் இரக்கத்தைப் போதிக்கும் மத நோக்கங்களுடன் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் கொண்டிருந்த கோட்பாடுகள் வெற்றி கொள்ளப்பட்ட தேசங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதால் தோன்றிய சகோதரத்துவ உணர்வுடன் இணைந்திருந்தன. அந்தக் கோட்பாடுகள் 'ஜீசஸால் கற்பிக்கப்பட்டவை.*

*யூத மக்கள், அக்காலத்தில் வாழ்ந்து வந்த, தங்களது பழைய மரபுகளின் அடிப்படையில் அவர்களுடைய பழைய பொற்காலத்தை மீட்டுத் தருகிற ஓர் இரட்சகர் ஒருவர் அவர்களிடையே தோன்றுவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். 'ஜீசசின்' சீடர்கள் அவரை, இவ்வாறு வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்ட 'மீட்பர்' என்றே கொண்டார்கள். ஆனால், அவரால் கற்பிக்கப்பட்ட கருத்துக்கள் தங்கள் நலனுக்கு எதிரானவையாக இருப்பதாகக் கருதிய பூசாரி சமூகத்தவர் அவர்கள் ரோமன் ஆளுநரிடம் சென்று அவரைப் பற்றிப் பழித்துக் கூறினார்கள். அவரும் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக தயக்கத்துடன் அவருக்கு மரணதண்டனை வழங்கினார். ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

## தேவாலயம் என்கின்ற ஒரு புதிய அமைப்பு தோன்றியது

கிறித்துவ மதத்தின் வாழ்முறையிலிருந்து அரசுக்கு வெளியே ஒரு மக்கள் அமைப்பாகவே வரலாற்றில் தேவாலயம் என்கின்ற ஒரு புதிய அமைப்பு தோன்றியது என்று அவர் பதிவிடுகிறார்.

*இரக்கம், மனித சகோதரத்துவம் பற்றிய அவரது கோட்பாடுகள் அவரது மரணதண்டனையைக் கடந்து நீண்ட காலம் வாழ்ந்தன. சீடர்கள் பிரிந்து போவதற்கு பதிலாக ஒன்றிணைந்தார்கள். பொதுவுடமைத் தத்துவத்தின் அடிப்படையில் தங்களை இணைத்துக் கொண்ட அவர்கள், தங்களிடமிருந்த அனைத்து உடமைகளையும், அதில் தாங்கள் பெற்ற இலாபத்தையும் பொது இருப்பிற்கு அளித்து விட்டார்கள். இவ்வாறாக விதவைகளும்,*

*அனாதைகளும் அச்சமூகத்தில் காப்பாற்றப்பட்டார்கள். ஏழைகளும் நோயுற்றோரும் பராமரிக்கப்பட்டார்கள். இந்த விதையிலிருந்து ஒரு புதிய சமூக அமைப்பு தோன்றியது. பிற்கால, நிகழ்ச்சிகள் நிரூபித்தவாறு அனைத்து வலிமைகளுமுடையதாக அந்த அமைப்பு விளங்கியது. அந்த புதிதான சமூக அமைப்பு தான் 'தேவாலயமாகும்'. 'தேவாலயம்' என்ற அமைப்பு அன்றைய சமூகத்திற்கு மிகவும் புதிது. ஏனெனில் அது போன்றதொரு வலிமையான சமூக வடிவம் பழங்காலத்தில் அதுவரை இருந்ததில்லை. உள்ளூர் தேவாலயங்கள் முதலில் புறக்கணிக்கப்பட்டாலும் கூட வெகு விரைவில் அவர்களின் பொது நன்மைக்கான அமைப்பாக ஒருங்கிணைந்தன. இந்த அமைப்பின் மூலமாக கிறித்துவம் அதன் அனைத்து அரசியல் வெற்றிகளையும் எட்டியது.*

*அது சிரியாவிலிருந்து ஆசியா மைனர் முழுவதும் பரவியது. பின் அதனைத் தொடர்ந்து சைப்ரஸ், கிரீஸ், இத்தாலி ஆகிய நாடுகளை அடைந்து, அதனைத் தொடர்ந்து மேற்கு முகமாக முடிந்த அளவு கால் பதித்து மற்றும் பிரிட்டன் வரை பரவியது. அனைத்துத் திசைகளிலும் இம்மதத்தை எடுத்துச் சென்ற சமயப் பரப்புக் குழுக்களின் பணியால் இதன் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டது. அதற்கு முந்தைய பழங்காலத்திய தத்துவங்கள் எதுவும் எப்போதும் இப்படியொரு வழிமுறையைப் பயன்படுத்தியதில்லை. ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

இவ்வாறு மக்கள் அமைப்பாக தோற்றுவிக்கப்பட்ட தேவாலயங்கள் அதிகார மய்யங்களை நெருங்கின. பின் அரசுக்கு இணை அதிகார அமைப்புகளாகத் தங்களை வளர்த்துக் கொண்டன. கிட்டத்தட்ட பவுத்த மத வரலாறும் இதனையொத்ததாகவே நம்மால் ஒப்பிட்டு உணர முடிகிறது. அதனையும் டிராப்பர் வரிகளிலேயே பார்ப்போம்

### அம்மதம் அரசியலதிகாரத்தை அடைதல்

*கடவுளை வணங்குதல், தனிப்பட்ட வாழ்வில் தூய்மை, சமூக வாழ்வில் இரக்கம், இவை மூன்றுக்குமான அமைப்பாகவே, கிறித்துவம் பல வருடங்களாகத் தன்னை வெளிப்படுத்தி வந்தது. துவக்கத்தில் தங்களது மதம் பலவீனமாக இருந்தபோது அவர்கள் பிரச்சாரத்தின் வாயிலாக மட்டுமே தங்கள் கருத்துக்களைப் பரப்பி வந்தனர். ஆனால் அம்மதம் எண்ணிக்கையில் செல்வாக்கிலும் அதிகரிக்க அதிகரிக்க அவ்வமைப்பில் அரசியல் உணர்வுகள் தலைதூக்கலாயின. அது அரசாங்கத்துக்குள் அரசாங்கமாக, பேரரசுக்குள் இன்னொரு பேரரசாக மாறியது. இந்தப் போக்குகளை இன்று வரை அது விட்டுவிடவில்லை. உண்மையில் இந்தப் போக்குகள் அதன் வளர்ச்சியின் தர்க்கரீதியான விளைவுகளேயாகும். தங்களது எதேச்சதிகார அமைப்பினால் வன்முறை மூலமாக அம்மதத்தை அழித்துவிட முடியாது என்பதை ரோமானியப் பேரரசர்கள் கண்டு கொண்டார்கள். அவர்களுடைய இராணுவ அனுபவங்கள் உணர்த்திய உண்மையின்படி, அம்மதத்துடன் இணக்கத்தை நிலைநாட்டுவது ஒன்றே அவர்களுக்கிருந்த ஒரே வழியாகும்.*

### அரசுக்குள் பேரரசாய் வளர்ந்த கிறித்துவம்

*ஆனால் கிறித்துவம் அந்த இணக்கத்தை மென்று சீரணித்து அரசின் அதிகாரத்தை விரைவில் கடந்து அதற்கு மேலதிகாரமாக வரலாற்றில் தன்னை தகவமைத்துக் கொண்டது. அரசதிகாரமும் தேவாலயமும் மோதிக் கொள்ளலாயின. அரண்மனைக்கு தீ வைக்கப்பட்டது. பதிலுக்கு கிறித்துவத்தைப் பின்பற்றிய வீரர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். பழைய மதத்தின் நம்பிக்கைக்கெதிரான புதிய நம்பிக்கையை பின்பற்றியவர்கள் விரோதியானார்கள். விளைவு இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. அரசரே நினைத்தால் கூட நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் இருதரப்பாருக்குமிடையே பெரிய போர் மூண்டது. கிறித்துவர்கள் சார்பாக தேவாலயத்திலிருந்து வந்த கான்ஸ்டன்டைன் என்பவர் தலைமையேற்றார். போர்க்களத்திலிறங்கினார்கள் இருதரப்பும். கான்ஸ்டன்டைன் வெற்றி பெற்றார். அவரே கிறித்துவ மத முதல் பேரரசர். கிறித்துவம் அரச மதமாகியது. பதவி, இலாபம், அதிகாரம். இப்போது கிறித்துவத்தை பின்பற்றுகிறவர்களுக்கு பரிசாகக் கிடைக்க தொடங்கியது. பிறகென்ன கூட்டம் பெருகியது. ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

### மீண்டும் பழமையோடு கலந்து....

வெற்றி பெற்றபின் காண்ஸ்டன்டைன் தான் கிறித்துவ மதத்துக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்குமான அரசனே என்று தன்னை பாவித்துக்கொண்டார். அதன் விளைவு கிறித்துவம் பெருங்கூட்டடமாக வளரத் தொடங்கிய அதே வேகத்தில் அது எந்த மதக் கொள்கைகளை, மதகுருமார்களை எதிர்த்து வளரத் தொடங்கியதோ அதே பழைய மதங்களின் நம்பிக்கைகளையும் அம்சங்களையும் தனக்குள் இணைத்துக் கொள்ளலாயிற்று. இப்போக்கிற்கெதிராக டெர்டுலியன் என்பவர் அன்றைய நீதிபதிகள் முன்பாக வைத்த நீண்ட வாதம் இன்று வரை மிகச் சிறந்த கிறித்துவ இலக்கியமாகப் போற்றப்படுகிறது என்று டிராப்பர் குறிப்பிடுகிறார். ஆனால் பின் வரும் மிக மோசமான பல விளைவுகளை உண்டு பண்ணிய

ஓர் அறிக்கை அதில் அடங்கியிருந்தது. அதனை டிராப்பர் வார்த்தைகளில் கீழே காண்போம்

*தனது தரப்பு வாதத்தை முடிக்குமுன்பாக, டெரிடூலியன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஓர் உறுதிமொழியை மீண்டும் மொழிகிறார். அது பின்னால் ஐரோப்பாவில் நடைபெற்ற அனைத்து விதமான அறிவுத்திறனோக்கிய வளர்ச்சியையும் வெகுவாக பாதித்தது. அவர் அறிவிக்கிறார். 'புனித மறை நூல் ஒரு மிகப் பெரிய சொத்தாகும்; அதிலிருந்து தான் உலகின் அனைத்து அறிவுத்திறமும் பெறப்பட்டது. எனவே, ஒவ்வொரு தத்துவவாதியும், கவிஞரும் அதற்குக் கடன் பட்டுள்ளனர்.' மேலும், அவர் அந்த மறைநூலே அனைத்து உண்மைகளுக்கும் ஆதாரமும், அளவுகோலும் ஆகும், என்றும் அந்நூலில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு முரண்பட்ட யாவையும் கண்டிப்பாகப் பொய்யாகவே இருக்க முடியும் என்றும் வலிந்துரைக்கிறார். ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

இவ்வாறு அறிவிக்கப் பட்ட இந்த இறுதி வார்த்தைகளே பின்னாளில் கிறித்துவம் பல பிற்போக்கான கொடூரமான காரியங்களில் ஈடுபடுவதற்கான அடித்தள ஆதாரத்தை இட்டது எனலாம். டெரிடூலியன் அவர்களது வாதம் எத்தனையோ நேர்த்தியான தர்க்கங்களை உள்ளடக்கியிருந்தாலும் அதன் இறுதி அறிவிப்பு மனிதகுல அறிவின் மீதான போர்த் தொடுத்தலாகவே அமைந்து போனது என்கிறார் டிராப்பர்.

இதன் அடுத்த கட்டத்தில் மன்னர்களின் ஆதரவோடு கிறித்துவம் என்கின்ற புதிய சிந்தனைப் போக்கு தனது தனித்துவத்தை இழந்து பண்டைய நம்பிக்கைகளுடன் ஒருவித கலப்பை ஏற்படுத்திக்கொள்ளலே நடைமுறையாயிற்று. மன்னர் காண்ஸ்டன்டைன் இராணி மாதா ஹெலினா ஆகியோரின் போக்குகள் அதற்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தன. அதன் விளைவாக என்னென்ன நடந்தன...

## பெண் தெய்வங்களை தோற்கடிக்க முடியவில்லை...

## கன்னிமேரி வழிபாடு...

அதுமட்டுமல்ல இந்த இடத்தில் வில்லியம் டிராப்பர் சொல்லாத சில விசயங்களை இணைத்துக்கொள்ள நான் விரும்புகிறேன். தொன்மையான மதத்தில் பெரும்பாலான தெய்வங்கள் பெண் தெய்வங்கள். அந்த இடம் ஆணை மய்யமாகக் கொண்ட தந்தை மகன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட போது அங்கு பெண்ணின் இடம் காலி செய்யப்பட்டது. இதனை பெண்கள் சமுதாயம் எதிர்த்திருக்க வேண்டும். மேலும் பெண் தெய்வத்தை வழிபட்டு வந்த ஆண்களும் கூட பின்பற்றுவதில் மனத்தடைகள் ஏற்பட்டிருக்கக் கூடும், இவ்வாறு ஏற்பட்ட ஒரு போராட்டத்தைத் தான் டாவின்சி கோடு என்கின்ற திரைப்படம் நமக்கு உணர்த்தியிருப்பதாகக் கருதுகிறேன். அவர்களையும் திருப்திபடுத்தி இணைக்கும் விதமாகவே கன்னிமேரி வழிபாடு பழைய சாயலில் மீட்டுருவாக்கம் செய்து தோற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டும். இனி இந்த நிகழ்வுகளை டிராப்பரின் வார்த்தைகளில் பார்ப்போம்

கொடுமைகளுக்குள்ளான போதும் தனது இருத்தலுக்காகப் போராடிய போதும் "கிறித்துவம்" என்னவாக இருந்தது என்பதை நாம் டெரிடூலியனின் வார்த்தைகள் மூலமாக அறிய முடிகிறது. அதே கிறித்துவம், எதேச்சதிகாரத்தை அடைந்த பின் என்னவாக இருந்தது என்பதை அடுத்துக் காண வேண்டும். செவரசுக்குக் கீழிருந்த கிறித்துவத்துக்கும், கான்ஸ்டன்டைனுக்குப் பிறகு வந்த கிறித்துவத்துக்கும் இடையே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. பிந்திய காலத்தில் முக்கியத்துவம் பெற்று விட்டிருக்கிற பல கோட்பாடுகள், முந்தைய காலத்தில் அறியப்படாமலிருந்தவையாகும்.

இராணி 'மாதா ஹெலினா' தனது அரசவைப் பெண்கள் துணையுடன் இந்தப்போக்கை வழி நடத்தினார். அவருடைய திருப்திக்காக, ஜெருசலமில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட குகையிலிருந்து, சேவியர் (இரட்சகரின்) மற்றும் அந்த இரண்டு திருடர்களின் சிலுவைகளும் அவற்றில் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களும், மேலும் அதில் பயன்படுத்தப்பட்ட ஆணிகளும் கண்டெடுக்கப்பட்டன. எச்சங்கள்/நினைவுச் சின்னங்கள் மீதான உண்மையான வழிபாடு ஏற்படுத்தப்பட்டது. பழைய கிரேக்கத்தின் இயல் நிலைக்கப்பாற்பட்ட காலம் மீண்டும் தோன்றியது. அன்று பயன்படுத்தப்பட்ட 'பிலோப்ஸின் செங்கோல்', கரோனியாவிலும், 'ஆக்கிலெஸின் ஈட்டி' பேசிலிஸிலும், மெம்னானின் கத்தி நிக்கோமீடியாவிலும்

ட்ரோஜான் குதிரை 'ட்ராய்' தேசத்தை அழிக்க பண்டைய கிரேக்கர்கள் உத்தியாக பயன்படுத்திய பொய் மரக் குதிரை செய்யப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் மெட்டாபோண்டும் நகரத்தில் காணப்படும் நம்பிக்கைகள் தோற்றுவிக்கப்பட்டன. பழைய கிரேக்கப் புராணக் கதைகளின் நினைவுச் சின்னங்கள் என பல பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டன. பண்டைய நகரமாகிய?? ட்ராய் தோற்கடிக்கப்பட்ட போது கிரேக்கர்கள் கைப்பற்றிய 'பள்ளடியம்' என்ற உருவச்சிலை, (இது இருக்கும் நாட்டைத் தோற்கடிக்க முடியாது என நம்பப்பட்டது) தங்களிடம் இருப்பதாகப் பல நகரங்கள் பறையடித்துக் கொண்டன. பழைய கிரேக்க தெய்வங்களின் உருவச்சிலைகளும் 60 ஓவியங்களும் உருவாக்கப்பட்டு எண்ணற்ற வழிபாட்டுத் தலங்கள் அதிசய அற்புத சுகமளிக்கும் இடங்களாக உருவெடுத்தன.

பழைய கிரேக்க புராணீகத்துடன் அது பிணைக்கப்பட்டது. 'ஒலிம்பஸ்' மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தெய்வங்கள் வேறு பெயர்களுக்கு மாறிக் கொண்டார்கள். பெரும்பான்மையான ரோமப் பேரரசின் பலம் பொருந்திய பகுதிகள் தாங்கள் காலங் காலமாக போற்றிவரும் கருத்துருக்கள் பின்பற்றப்பட வேண்டுமென வலியுறுத்தின. எகிப்திய மரபின்படி மும்மையின் கருத்துக்கள் நிலைநிறுத்தப்பட்டன. புதிய பெயரில் 'இஸிஸின்' வழிபாடு புதுப்பிக்கப்பட்டது மட்டுமல்ல, வளர்பிறையில் நின்று கொண்டிருக்கும் அவளது உருவமே மீண்டும் தோன்றுவிக்கப்பட்டது. அந்தப் பெண் தெய்வம் தனது தோளில் அவள் குழந்தையுடன் உள்ள புகழ் பெற்ற உருவச் சிலை குழந்தையுடன் உள்ள மேரி மாதாவைப் படைக்கும் அழகிய கலைப் படைப்பாக இன்றைய நமது காலம் வரை எடுத்து வரப்பட்டிருக்கிறது. இவ்வாறு, பழைய கருத்துருக்கள் புதிய வடிவங்களில் உயிர்ப்பிக்கப்படுவது எங்குமே மகிழ்ச்சியுடனேயே வரவேற்கப்படுகிறது. 'சிரில்' தலைமையிலுள்ள அரண்மனைச் சிலை கன்னி மேரியை கடவுளின் தாய் என்று அழைக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. எஃபிசியன்களுக்கு அறிவிக்கப்பட்டபோது அவர்கள் ஆனந்தக் கண்ணீருடன் பிஷப்பின் முழங்கால்களைக் கட்டிக்கொண்டனர். அது அவர்களின் பழைய அகத்தூண்டுதலின் பீறிடுதலாகும். அவர்களுடைய மூதாதையர் இதையேதாம் டயானாவிற்கு செய்திருப்பர் (நூல் இரண்டாம் அத்தியாயம்)

இவ்வாறு இயேசுநாதர் என்கின்ற சமூக சீர்திருத்தவாதி அல்லது புர்ட்சியாளர் கூறிய போதனைகளுக்கு முற்றிலும் மாற்றான நம்பிக்கைகளும் சடங்குகளும் எவ்வாறு கிறித்துவ மத நடைமுறைகளில் பரவின என்பதன் தொடக்கத்தை விவரிக்கும் டிராப்பர் நாம் இன்று அந்த மதத்தில் காணும் நடைமுறைகள் இக்காலகட்டத்தின் தொடர்ச்சியாகத் தோன்றியவையே என்பதை கீழ்க் காணுமாறு விளக்குகிறார்

*இவ்வாறு உருவாகி வந்த மாற்றங்கள் எல்லாம் பழைய மதத்துடன் மீண்டும் கலந்ததால் என்னவெல்லாம் நடந்திருக்கும்? அறிவுத்திறனானது எந்த அளவுக்கு வீழ்ச்சியை சந்தித்திருக்கும்? பழைய மதச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன, ஆரவாரத்துடனும் வண்ண விளக்குகளுடனும் கூடிய சடங்குகளும், ஒளிதரும் திரிகளும் மரப்பட்டைகளிலான தலைப்பாகைகளும், தியாராக்களும் (பாதிரிகள் அணியும் கிரீடம்) மெழுகுப் பட்டைகளும் ஊர்வல அணி வகுப்புகளும், புனித நீராட்டு விழாக்களும் தங்கத்திலும் வெள்ளியிலுமான பூச்சாடிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.*

*பாதிரிமார்களின் முன்னால் சிலுவையைச் சுமந்து கொண்டு செல்லும் பணியாட்கள் அமர்த்தப்பட்டனர், பொதுப் பிரார்த்தனையில் குறி சொல்லுதலே மதகுருமார்களின் 'வேலையானது. சிற்றாலயங்கள் மதத் தியாகிகளின் கல்லறைகளின் மேல் எழுப்பப்பட்டதுடன், பழைய ரோமானியப் புரோகிதர்களிடமிருந்துகடன்பெறப்பட்டசடங்குகளைக்கொண்டு புனிதமாக்கப்பட்டன. மதத்துக்காக உயிர் துறந்தோருக்கான விழாக்களும், நினைவுநாள் கொண்டாட்டங்களும், அவர்களுடைய எச்சங்கள் என கண்டுபிடிக்கப்பட்ட எண்ணற்ற புனைவுகளுடன் பல்கிப்பெருகின. சாத்தானை விரட்டவும், கடவுளைத் திருப்திப் படுத்தவும் உண்ணா நோன்பே முகாமையான வழியாக உருவெடுத்தது. பாலஸ்தீனத்திற்கும், மற்ற தியாகிகளின் கல்லறைகளுக்கும் புனிதப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. புண்ணியதலத்திலிருந்து மண்ணும், புழுதியும் கொண்டு வரப்பட்டு சாத்தானை விரட்டும் மருந்துகளாக நல்ல விலைக்கு விற்கப்பட்டன. புண்ணிய தீர்த்தத்தின் மகிமை தூக்கிப்பிடிக்கப்பட்டது. சிலைகளும், மந்திரங்களும் சிற்றாலயங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு தொன்மைக்காலக் கடவுள்களுக்கு செய்யப்பட்ட முறையில் வழிபாடு நடத்தப்பட்டது. தொல்காலத்தில் நடந்தது போலவே மாயாவேலைகளும் அற்புதங்களும் சில இடங்களில் நடக்கலாயின.*

*மரணமடைந்துவிட்ட கிறித்துவர்களின் மகிழ்ச்சியான ஆத்மாக்களிடம் வேண்டுதல்கள் நிகழ்த்தப்பட்டன; அவர்கள் உலகில் அலைந்து கொண்டிருப்பதாகவோ அல்லது அவர்களின் இடுகாட்டில் ஆவியாகச் சுற்றிக் கொண்டிருப்பதாகவோ நம்பப்பட்டார்கள். கோயில்களும், பலிபீடங்களும்/ மதகுருமார்கள் நின்று போதனை செய்யும் திருமேஜை, மத (பாதிரிமார் அணியும்) உடைகள் பல்கிப் பெருகின. பழைய மதத்திலிருந்து மதம் மாறியவர்கள் தங்களது நாட்டுப்புறத் தேவதைக்கு விருந்தளிக்கும் விழாவான 'லூப்பர்காலியா'வை இழந்ததனால் ஏற்பட்ட மன ஏக்கத்தை நீக்குவதற்காக கன்னி மாதாவை தூய்மைப்படுத்தும் விழா தோற்றுவிக்கப்பட்டது. சிலைகள், சிலுவைத் துண்டுகள் அல்லது எலும்புகள், நகங்கள் மற்றும் தொன்மைச் சின்னங்கள் இவற்றை வழிபடுதல், மற்றும் மூடநம்பிக்கை நிறைந்த வழிபாடு வளர்த்தெடுக்கப்பட்டது. இப்பொருட்களின் மீதான நம்பகத்தன்மைக்கு இரண்டு வாதங்கள் முன்வைக்கப்பட்டன; ஒன்று, மதாலயத்தின் அதிகாரம் மற்றொன்று அற்புதங்களின் நிகழ்வு. ஏன், மதகுருமார்களின் கிழிந்த ஆடைத் துண்டுகளும், அவர்களது புதைமண்ணும் கூட வணங்கப்பட்டன. பாலஸ்தீனத்திலிருந்து புனித மார்க் மற்றும் புனித ஜேம்ஸ் இவர்களின் எலும்புக் கூடுகள் என்று கூறப்பட்டவையும் மற்றும் பிற தொன்மையான வணக்கத்துக்குரிய பொருட்களும் கொண்டு வரப்பட்டன. ரோமானிய காலத்தின் கொள்கை வழிபாடு திருச்சிலை வழிபாட்டால் பதிலீடு செய்யப்பட்டது. சிறு தெய்வ வழிபாட்டைத் தொடர்ந்து மதகுருமார்களும் அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து சாதாரண பொருட்கள் தெய்வீக மாற்றமடையத் தொடங்கின. ரொட்டியும் ஒயினும் இயேசு நாதரின் சதையாகவும் இரத்தமுமாக மாறிவிடுதல் நிகழத் தொடங்கியது. பின் வந்த நூற்றாண்டுகளில் கிறித்துவப் புறச்சமய மயமாதல் மேலும் மேலும் முழுமை பெற்றது.*

*இரட்சகருடைய உடலைத் துளைத்துக் சென்ற ஈட்டி, இரட்சகரைச் சிலுவையிலறையச் செய்த ஆணிகள் மற்றும் அவர் தலையை அலங்கரித்த முட்கிரீடம் இவற்றின் நினைவுகளைப் புனிதப்படுத்தும் திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏராளமான திருக்கோயில்களில் மகிமை வாய்ந்த இயேசுநாதரின் எச்சத்தை வைத்திருப்பதாக பல தேவாலயங்கள் உரிமை பாராட்டிக் கொண்டன. அது எப்படி இத்தனை தேவாலயங்களில் அவரது எச்சம் இருக்க முடியும்? இது உண்மையாயிருக்க வாய்ப்பில்லை என்பதைச் சொல்லும் துணிவு யாருக்கும் இல்லை. (நூல் இரண்டாம் அத்தியாயம்)*

ஒரு கொள்கையாக இருந்த கிறித்துவ மதம் முழுமையான ஆதிக்க நிறுவனமாக மாற இந்த சடங்காச்சாரங்களே பெருந்துணை புரிந்தன.

## மனித சிந்தனைக்கு மத விலங்கு

சரி. இதனால் மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சி எவ்விதம் பாதிக்கப்பட்டது என்பதையும் அவர் விளக்குகிறார். கிறித்துவத்துக்கு முந்தி நிலவி வந்த டிராப்பர் புறச்சமயம் என்றழைக்கிற நாம் பழைய மத அமைப்புகள் என்று புரிந்து கொள்கின்ற மத நம்பிக்கைகளில் எவ்வளவு மூட நம்பிக்கைகள் மலிந்திருந்த போதிலும் புதிய சிந்தனையாளர்களும் அதிலிருந்த தோன்றுவதற்கு இடமிருந்தது. முற்றும் முழுக்க புனிதப் படுத்தப்பட்ட மதக் கோட்பாடுகளாக அவை கெட்டி தட்டிப் போகவில்லை. ஆனால் இயேசுநாதருக்கு பிற்பாடு கூட வெகுகாலம் மக்களுக்கு தொண்டாற்றுவதே கிறித்தவமாக இருந்த நிலை மாற்றப்பட்டு மத நம்பிக்கைகள் புனிதப்படுத்தப்பட்ட கேள்விக்குட்படுத்தப்பட முடியாத மதக் கோட்பாடுகளாக ஆணைகளாக மாற்றப்பட்டன. அதன் விளைவு அவற்றை மீறி மனித இனம் சிந்திக்கக் கூடாது என்கின்ற மிகக் கொடூரமான சமுதாய விளைவு ஏற்பட்டது. இது மனித சமுதாய சிந்தனையை ஆயிரம் ஆண்டுகாலத்திற்கு பாதித்தது என்கிறார் டிராப்பர். எண்ணிப் பாருங்கள் மதத்தினால் மனித இனம் எவ்வளவு நீண்ட பாதிப்புக்குள்கியிருக்கிறது என்று. டிராப்பர் எடுத்து வைக்கும் இந்த சித்திரத்தைப் பாருங்கள்.

*கிறித்துவ சமயமோ அனைத்து அறிவும் வேதங்களிலும், தேவாலயச் சடங்குகளிலுமே கண்டறியப்பட வேண்டும் என வலியுறுத்தியது. தான் எழுதிய 'தெய்வீக வெளிப்படுத்துதலில்'*

*கடவுள் உண்மையின் பிரமாண சூத்திரத்தைத் தந்திருப்பது மட்டுமல்ல நாம் எதையெல்லாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினாரோ அவை அனைத்தையும் தெரியப்படுத்தி உள்ளார். எனவே, வேதங்கள் அனைத்து அறிவின் மொத்தத்தையும், இறுதியையும் கொண்டுள்ளன. எனவே பேரரசர்களைத் தங்கள் பின் புலமாகக் கொண்டிருக்கும் இந்த மத குருமார்களுக்கு போட்டி என்று யாருமில்லை.*

*இவ்வாறாக 'புனிதமான அறிவு ' ' புனிதமற்ற அறிவு' என்றழைக்கப்பட்ட பிரிவுகள் கொண்டு வரப்பட்டன. இவ்வாறாக, மனித அறிவின் வழிகாட்டுதலை நம்புகிற ஒரு பிரிவும், வேதகாமத்தின் தெய்வீக வெளிப்படுத்துதலை நம்புகிற ஒரு பிரிவுமாக இரண்டு எதிரெதிர்த் தரப்புகள் தோன்றின. புறச்சமயம் அதன் தத்துவவியலாளரின் கல்விக்கு*

*ஆதரவளித்தது, கிறித்துவம் அதன் பாதிரிமார்களின் அருட்கிளர்ச்சிக்கு ஆதரவளித்தது.*

*இவ்வாறாக, தேவாலயம் தன்னை அறிவின் சேமிப்புக் கிட்டங்கியாகவும், அறிவுக்கு தீர்ப்பு சொல்லும் நீதிபதியாகவும் ஆக்கிக் கொண்டது. தனது முடிவுகளுக்குக் கீழ்ப்படிதலை வற்புறுத்தும் பொருட்டு அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த அது எப்போதும் தயாராக இருந்தது. இவ்வாறாக, மதம் தனது எதிர்கால நிலையை தீர்மானிக்கக் கூடிய ஒரு போக்கை மேற்கொண்டது. ஐரோப்பாவில் அறிவுத்திறனோக்கிய வளர்ச்சியில் ஓர் ஆயிரம் ஆண்டு காலத்திற்கு அது ஒரு முட்டுக் கட்டையாக உருவெடுத்தது. ((நூல் இரண்டாம் அத்தியாயம்)*

இனி மனித அறிவின் தத்துவ வளர்ச்சியில் முட்டுக் கட்டையாகக் கிடத்திய விவாதங்களின் வரிசையைக் கொஞ்சம் பார்ப்போம்.

## மும்மைக் கோட்பாட்டு விவாதம்

இந்தக் கோட்பாடு என்பது யாதெனில் அதாவது கடவுள் என்பவரை மூன்றாகப் பார்ப்பது. தந்தை, மகன், பரிசுத்த ஆவி. இவ்வாறு கடவுளை மூன்றாகப் பிரிக்க முடியாது கடவுள் ஒருவரே என வாதிட்டவர்கள் இவர்களை எதிர்த்தார்கள். இவர்கள் எழுப்பிய முதற் கேள்வி... தந்தை மூத்தவராகதானே இருக்க முடியும் அவரும் மகனும் எப்படி சமகாலத்தவராக இருக்க முடியும்... என்று கேட்டார்கள். சரி. இதுபோல் ஆயிரம் விவாதங்கள் நடந்திருக்கலாம் அதற்கென்ன இப்போ என்று சாதாரணமாகக் கேட்டு விட முடியாது. இந்த விவாதத்தின் பொருட்டு என்னென்ன தடைகள் ஏற்படுத்தப் பட்டன என்று பாருங்கள்.

*ஆரியஸின் இவ்வாதத்தை, அவரைப் போட்டியிட்டு வென்ற பிஷப் மறுத்தார். இருவருக்குமிடையே பொதுவிவாதங்கள் நடைபெற்றன. பிஷப் தனது ஆரவாரமான சொல்லாட்சித் திறனை வெளிப்படுத்தினார். இந்த சொற்போர் பரவியது. அலெக்சாண்டிரியாவின் பெரும் மக்கட் கூட்டத்தவராகிய யூதர்களும், புறச்சமயத்தவரும், மேடைகளில் இந்த சொற்போர் போட்டிகளை கேளிக்கை நிகழ்வாக நடத்தி மகிழ்ந்து கொண்டார்கள். அவர்களின் நையாண்டிக்குரிய விசயமாக மகனுக்கும் தந்தைக்கும் ஒரே வயதா? என்ற கேள்வி அமைந்தது,*

*பேரரசரின் அவைக்கு எடுத்துச் செல்லப்படும் அளவுக்கு இப்பிரச்சனை விசுவரூபமெடுத்தது. முதலில் அரசர் இதனை ஒரு பொழுது போக்கான விவாதமாகப் பார்த்தார். ஒருவேளை ஆரியஸின் நிலைப்பாடே உண்மையென எண்ணியிருக்கக் கூடும்; ஏனெனில் தந்தை மகனை விட மூத்தவராக இருப்பதுதானே இயற்கை? ஆனால், அவரது இந்தத் தனிப்பட்ட கருத்தைத் தாண்டி, இந்த மோதலைத் தீர்ப்பதற்காக 'நிசியா குழு'வைக் கூட்டுமளவுக்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். அக்குழுவானது ''புனிதமான கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தல திருச்சபையானது, கடவுளின் மகன் இல்லா காலமொன்றிருந்தது என்றும், அவர் தோன்று முன்பாக அவர் இல்லாமலிருந்தார். பின் சூன்யத்திலிருந்தோ அல்லது வேறொரு பொருளிலிருந்தோ உருவாக்கப்பட்டார், படைக்கப்பட்டார் அல்லது மாற்றம் செய்யப்பட்டார் என்றும், பேசக்கூடியவர்களை திருச்சபை பழிப்பு நிந்தனைக்குள்ளாக்குகிறது' என்ற விதியை சமயக் கோட்பாட்டுத் தொகுப்பில் இணைக்க வேண்டுமென முடிவெடுத்தது. காண்ஸ்டன்டைன் உடனே அம்முடிவை தனது அரசதிகாரத்தைப் பயன்படுத்தி அமுல்படுத்தினார்.*

இதனைத் தொடர்ந்து சில வருடங்களில் பேரரசர் தியோடொசியஸ் உயிர்ப்பலிகளைத் தடை செய்தார்; விலங்குகளின் குடல்களைப் பரிசோதனை செய்வதைத் தலையாய குற்றமாக்கினார். மேலும், இதன் பொருட்டு கோயிலுக்குள் யாரும் வருவதைத் தடை செய்தார். அவர், நம்பிக்கை குறித்து விசாரணை நடத்த விசாரணை அதிகாரிகளை நியமித்ததோடு ரோமின் பிஷப்பாகிய 'டமாஸஸ்' மற்றும் அலெக்சாண்டரியாவின் பிஷப்பாகிய 'பீட்டரின்' நம்பிக்கையோடு உடன்படாதவர்கள் அனைவரும் குடியுரிமை பறிக்கப்பட்டு நாடு கடத்தப்பட வேண்டும் என்று சட்டமியற்றினார். யூதர்கள் கொண்டாடும் அதே நாளில் ஈஸ்டரைக் கொண்டாடியதாக நம்பப்படுபவர்கள் மரணதண்டனைக்குள்ளாவர்,

*கற்பது நின்று போனது; மெய்யான புலமை காலாவதியானது. (நூல் மூன்றாம் அத்தியாயம்)*

## புனித சிரிலும் பெண் அறிவியாலாளர் ஹிப்பாட்டியா படுகொலையும்

ஆம் டிராப்பர் கூறுகிறாரே அந்த ஆயிரம் வருடங்கள்.... மனித இனத்தின் அந்த ஆயிரம் ஆண்டுகள் மதவாதிகளால் அறிவைத் தேடிய சிந்தனையாளர்கள் பலரும் கொடூரமாகக் கொல்லப் பட்டார்கள். இதோ கொடுங்கதைகள்... பிஷப்பாக புனித சிரில் என்பவர் பதவியேற்ற காலத்தில் நடந்தது. மதம் அறிவு வளர்ச்சிக்கு தடையாக

இருந்தது என்பது ஒருபுறம் உண்மையாக இருக்க மனித உயிர்கள் மதங்களுக்குள் நடைபெற்ற மோதல்களிலும் பலியாகின. அந்த வரலாறு இன்று வரை தொடர்வதைக் காணும் எவரும் அந்த நம்பிக்கையாளர்களைக் காட்டுமிராண்டிகள் என்று கூறுவதிலிருந்து தங்களைத் தடுத்துக் கொள்ளுதல் இயலுமா? கீழ்க்காணும் சம்பவங்களின் தொடர்ச்சியைக் காணுங்கள்,

*இந்த சமயத்தில், அலெக்சாண்டரியாவின் பிஷப் அலுவலகம் 'தியோபிலஸ்' என்பவர் வசமிருந்தது. ஒரு பழைய ஓசிரிஸ் கோவிலொன்று அந்நகரின் கிறித்துவர்களுக்கு தேவாலயம் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. புதிய கட்டிடத்துக்கான அஸ்திவாரம் தோண்டுகையில் முன்னாளில் வழிபாட்டுக்குரியவையாக இருந்த சில ஆபாசமான பொருட்கள் அதில் அகப்பட்டுவிட்டன. இவற்றை 'தியோபிலஸ்' ஆர்வக் கோளாறு காரணமாக பெருந்தன்மையின்றி, சந்தையில் பொது மக்களின் ஏளனத்துக்காளாகும் விதத்தில் காட்சிப்பொருளாக வைத்துவிட்டார். மும்மை விவாதத்தில் கிறித்துவக் கட்சியார் காட்டியதைவிடக் குறைவான பொறுமையுடன் புறச்சமயத்தவரும் வன்முறையில் இறங்கினர். ஒரு, கலகம் மூண்டது. அவர்கள் செரபியனைத் தலைமையகமாகக் கொண்டனர். பேரரசர் தலையிடவேண்டிய அளவுக்கு ஒழுங்கின்மையும் இரத்தக்களறியும் ஏற்பட்டது. பேரரசர் என்ன செய்தார்? அவர் அலெக்சாண்டிரியாவுக்கு பிஷப்பின் கருத்திற்கிணைந்து ஒரு படையை 'செரபியனை'' அழித்து விடும்படி அனுப்பினார். ஆம். தோலமியால் சேகரிக்கப்பட்டு, ஜீலியஸ் சீசரின் நெருப்புக்குத் தப்பி நின்றிருந்த அந்த மாபெரும் நூலகம் அந்த மத வெறியரால் அழிக்கப்பட்டது.*

'ஹிப்பாட்டியா' 'பிளேட்டோ' மற்றும் 'அரிஸ்டாட்டிலினுடைய தத்துவங்களில் மிகுந்த ஆளுமை மிக்கவர் என்பதோடு 'அப்பலோனியஸ்' மற்றும் பிற நிலக்கணக்கியலாளருடைய எழுத்துக்கள் மீதான திறனாய்வினாலும் தனித்து விளங்கினார். ஒவ்வொரு நாளும் அவருடைய கல்விச் சாலை முன்பு பல குதிரை வண்டிகள் சங்கிலித்தொடர் போல் நின்றன. அவருடைய சொற்பொழிவறை அலெக்சாண்டிரியாவின் செல்வந்தர்களாலும், புதுமை விரும்பிகளாலும் நிரம்பி வழிந்தது.

*தத்துவமும், மதவெறியும்!! இவைகள் இரண்டும் ஒரே நேரத்தில் இருப்பது சாத்தியமில்லை. இதை சிரில் உணர்ந்தார். அந்த உணர்வினால் செயல்பட்டார். 'ஹிப்பாட்டியா' தனது பல்கலைக்கழகத்தை மராமத்து செய்து கொண்டிருந்த வேளையில், சிரிலினுடைய வன்முறைக் கும்பலொன்று அவரைத் தாக்கியது – அந்த வன்முறைக் கும்பல் பல மதகுருமார்கள் உள்ள கூட்டம். ஆடைகள் உரியப்பட்டு நிர்வாணமாக அவர் தேவாலயத்துக்கு இழுத்துவரப்பட்டு அங்கு திருக்கோவில் வாசிப்பாளரின் குண்டாந்தடியால் கொலை செய்யப்பட்டார். உயிரற்ற அவரது உடல் பல துண்டுகளாக வெட்டப்பட்டது; எலும்புகளிலிருந்து சதைகள் தோலோடு சேர்த்து பிய்க்கப்பட்டன, இறுதியில் எச்சம் தீ வைக்கப்பட்டது.*

*அலெக்சாண்டிரியாவில் கிரேக்கத் தத்துவம் இப்படியொரு முடிவைச் சந்தித்தது. தோலமியரால் அரும்பாடுபட்டு வளர்க்கப்பட்ட புலமைக்கு காலவரையற்ற மூடுவிழா நடத்தப்பட்டது. செரபியனிலிருந்து 'மகள் நூலகம்' கலைக்கப்பட்டது. ஹிப்பாட்டியாவுக்கு நேர்ந்த கதியானது மதச்சார்பற்ற சிந்தனையை வளர்க்க விரும்பும் அனைவருக்கும் எச்சரிக்கையாக அமைந்தது. அதுமுதற்கொண்டு மனித அறிவிற்கான சுதந்திரம் இருக்கக் கூடாதென்றாகியது. திருச்சபைகள் எவ்வாறு ஆணையிட்டிருக்கிறதோ அவ்வாறே ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். கி.பி. 414–ல் ஏதென்ஸிலும் தத்துவவியல் தனது இறுதிக்கட்டத்திற்குக் காத்திருந்தது. 'ஜஸ்டினியன்' மிக விரிவான அளவில் அதனுடைய போதனையைத் தடை செய்ததுடன் அந்நகரிலுள்ள அனைத்துப் பள்ளிகளையும் மூடச் செய்தார். (நூல் மூன்றாம் அத்தியாயம்)*

இம் மண்ணில் அறிவியல் வளர்ச்சிக்காக தன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் வரிசையில் ஹிப்பாட்டியா என்கின்ற பெண் அறிவியலாளர் தலையாய இடம் பெறுகிறார் என்பதை இன்று வரை வரலாற்று நூல்கள் போதுமான அளவு உரத்து சொல்லவில்லைதானே?

## பெலஜியசும் புனித அகஸ்டினும்

மரணம் என்பது மதத்தின் மிகப் பெரிய ஆயுதம். மரணம் என்கின்ற ஒன்று இல்லாவிட்டால் கடவுள் என்பரின் தேவையே மனித சமுதாயத்தில் தோன்றியிருக்க வாய்ப்புகள் மிகக் குறைவு. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதே கடவுளை தக்க வைக்க மக்கள் மனதில் பதியப் பட்ட

முதல் ஆணி என்று கூறலாம். மரணம் பற்றி வேதநூல்கள் உரைத்ததை புத்தியுள்ள மனிதர்கள் கேள்விக்குட்படுத்த தான் செய்தார்கள். ஆனால் மதத்தின் அடுத்த உடனடி ஆயுதம் வன்முறையும் கொடுங்கோன்மையும்தான் என்பதைத்தானே நாம் பார்த்து வருகிறோம்.

*பெலஜியஸ் என்கின்ற பிரிட்டிஸ் மதகுரு ஒருவரே இதனைக் கேள்வி கேட்கும் கருத்துக்களைப் பதிவிடலானார். அவர் மட்டுமல்ல பல மதக்கருத்துக்களை மறுத்தவர்களில் மதகுருமார்களும் அடங்குவர். இங்கர்சால் அவர்களே மதக்கல்வி கற்றவரே என்பதை அறிவோமல்லவா? உண்மையாக மதத்தை அறிவின் வெளிச்சத்தில் பார்க்கும் எவரும் இதனைச் செய்தனர் அவர்கள் அறிவியலறிஞர்களாக மட்டுமல்ல மதகுருமார்களாகவும் இருந்தனர்.*

*‘மரணம் என்பது ஆதமின் பாவத்தினால் இவ்வுலகில் அறிமுகப்படுத்தப்படவில்லை, மாறாக, இயற்கையின் விதிப்படி அவன் மாண்டுதான் ஆகவேண்டும். எனவே அவன் பாவமே செய்யாமலிருந்திருந்தால் கூட மாண்டுதான் போயிருப்பான், அவனுடைய பாவத்தின் விளைவுகள் அவனை மட்டுமே சாரும்; தவிர, அவனுடைய சந்ததியை பாதிக்காது, இப்போதனையை அவர் மேற்கு அய்ரோப்பா மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா முழுவதிலும் எடுத்துச் சென்றார்.*

*’ஆதாமுடைய வீழ்ச்சிக்கு முன்பே உலகில் மரணம் இருந்து வந்ததா?’ அல்லது ’ஆதாமுடைய பாவத்துக்கு தண்டணையாக தான் மரணம் உலகில் புகுத்தப்பட்டதா?’ என்ற கேள்விக்கான பதிலைத் தீர்மானிப்பதில், பெலஜியஸின் கருத்துக்கள் இயற்கையோடு ஒத்திருந்ததா அல்லது முரண்பட்டிருந்ததா என்று ஆய்வு செய்யப்படவில்லை. பதிலாக, புனித அகஸ்டீனின் மதக் கோட்பாடுகளுடன் தான் பொருந்திப் பார்க்கப்பட்டது. முடிவும் எதிர்பார்க்கக் கூடியதாகவே அமைந்திருந்தது. (அதாவது பெலஜியஸ் நாடு கடத்தப்பட்டார்)*

*ஆனால் மதத்தின் பேரால் தேவாலயங்களின் அதிகாரத்தால் தூக்கிப்பிடிக்கப்பட்ட இந்தக் கோட்பாடானது கேள்விக்கப்பாற்பட்ட நவீன அறிவியலின் கண்டுபிடிப்புகளால் தூக்கியெறியப்பட்டது. பூமியில் ஒரு மனித உயிர் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, இலட்சக்கணக்கான தனி உயிரிகளும், அதற்குமேல் பல்லாயிரக்கணக்கான உயிரின வகைகளும் பொதுப்பண்புள்ள இனக் கூட்டங்களும் மரணமடைந்திருக்கின்றன, அந்தப் பரந்த மூதாதையரின் வழித்தோன்றல்களில் ஒரு மிகச் சிறிய விகிதம்தான் இன்று நம்மிடையே எஞ்சியுள்ளது. (நூல் மூன்றாம் அத்தியாயம்)*

இவ்வாறாக ஆதாமுக்கு முன்பே உலகில் மரணம் என்று ஒன்று இருந்தது என்று கூறிய குற்றத்திற்கு பெலஜியசு ஆளாகி நாடு கடத்தப்பட்ட பின்னர் மதம் இது குறித்து கறாரான நடவடிக்கைகளில் இறங்கியது.

*’பெலஜியன் முரண்பாட்டில்’ வழங்கப்பட்ட தீர்ப்பானது முக்கியத்துவம் வாய்ந்த விளைவை உருவாக்கியது. உலகின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் நூல் கிறித்துவத்தின் அடிப்படையாகியது. ஒருபக்கம் இறையியற் பார்வையில் ஏதென் தோட்டத்தில் நடந்த பாவமும், ஆதாம் வரம்பு மீறியதும் தண்டிக்கப்பட்டதும் மிகப் பெரிய முக்கியத்துவம் கொண்டவையாக மாறின என்றால், மற்றொரு புறம் தத்துவவியல் பார்வையில் பிஷப்புகளுக்கு அறிவியல் துறையில் மிகப் பெரிய அதிகாரத்தை அளித்தது. வானவியல், நிலவியல், பூகோளம், மானுடவியல், காலக் கணிப்புத் துறை, மேலும் மனித அறிவின் பிற அனைத்து பிரிவுகளும் பிஷப்பின் அறிவியல் கொள்கையுடன் ஒத்துப் போகுமாறு அமைக்கப்பட்டன. (நூல் மூன்றாம் அத்தியாயம்)*

இப்போது புனித அகஸ்டீன் என்கின்ற பாதிரியாரைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

புனித அகஸ்டீன் கோட்பாடுகளே கிறித்து மதத்தின் அடிப்படை விதிகளாகக் கிட்டத்தட்ட 15 நூற்றாண்டுகளுக்கு மேலாக வரலாற்றில் ஆட்சி செய்தன என்று எடுத்துரைக்கும் டிராப்பர் அவருடைய இறையியலை ஒருவர் வாசித்தால் தனியாக அவற்றை விமர்சனம் செய்ய வேண்டிய தேவை இருக்காது என்று கூறுகிறார். அந்த அளவுக்கு அவருடைய எழுத்துக்கள் இருந்தன,,, உதாரணத்துக்கு ஒரு சில வரிகள். புனித அகஸ்டீனடமிருந்து,

*புனித அகஸ்டீன் மேலும் கூறிக் கொண்டு போகிறார். இவ்வாறாகக் கடவுளால் உச்சரிக்கப் பட்ட வார்த்தைகள் தொடர்ச்சியாக உச்சரிக்கப் பட்டன. மேலும் இவற்றை உச்சரிப்பதற்கு முன்பே படைக்கப்பட்ட ஒரு பொருள் இருந்திருக்க வேண்டும். எனவே இப்பொருளானது விண்ணும் மண்ணும் தோன்றுவதற்கு முன் எந்த உயிரும் தோன்றியிருக்க முடியாது. ஆனால் அது ஒரு படைப்பாகதான் இருக்க வேண்டும். ஏனெனில் அதனின்று வெளிப்பட்ட வார்த்தைகள் முடிந்து விடுகின்றன. ஆனால் கடவுளின் வார்த்தைகள் என்றென்றைக்குமானவை என்பதை நாம் அறிவோம். மேலும் பேசப்பட்ட வார்த்தைகள்*

*ஒன்றன்பின் ஒன்றாக உச்சரிக்கப் படவில்லை. மாறாக ஒரே நேரத்தில் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியில்லாவிட்டால் அவை தோன்றிய காலம் இருந்து அது வேறுபட்டிருக்கும். தொடர்ச்சி என்பது இயல்பாகவே நேரத்தைக் குறிக்கும். ஆனால் அப்போதோ அழியாமையும் நிலைத்திருப்பவையும் தவிர வேறெதுவுமேயில்லை. என்றென்றைக்குமாக் கடவுள் அறிந்து கூறியிருக்கும் வார்த்தைகள் அவற்றிற்குரிய காலத்தில் நடந்தேறுகின்றன. (நூல் மூன்றாம் அத்தியாயம்)*

இவ்வாறு நீண்டு செல்கிறது புனித அகஸ்டினுடைய தத்துவம். டிராப்பர் கூறியது போல் இவற்றை நாம் தனியாக விமர்சிக்க வேண்டாம்தானே? இந்த வாசகங்கள் டாக்டர் பாஸி என்பவரின் கத்தோலிக்க திருச்சபை தந்தையரின் நூல் திரட்டு என்கின்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்றும் டிராப்பர் தெரிவிக்கிறார். மதத்துக்கும் அறிவியலுக்குமிடையே மிகப் பெரிய முரண்பாடுகளைத் தோற்றுவித்த பாதிரியாரும் இவரே என்று டிராப்பர் விரிக்கிறார்,

அறிவுத்திறனோக்கிய வளர்ச்சியில் அலெக்சாண்டிரியா அருங்காட்சியகம் நிகழ்த்திய மாபெரும் சாதனைளை அழிக்கும் வேலையை புனித அகஸ்டீன் காலத்திய கிறித்துவ மதம் செய்யலாயிற்று. உலகம் மற்றும் மனிதனின் படைப்புக் கோட்பாடுகள் பற்றி பைபிளின் கதைகளை நாம் அறிந்திருப்போம். எனவே இக்கட்டுரையில் அப்பகுதிகள் பற்றிய விவரணைகளைத் தவிர்த்து சில முக்கியமான விவாத உரைகளைப் பற்றி மட்டும் பார்க்கலாம், பூமி தட்டையாக இருக்கிறது என்றும் பூமிக்கு மேற்கூரையாக வானம் இருக்கிறது என்றும் பூமிக்குக் கீழே அக்கினிக் குண்டமாக பாதாளம் இருக்கிறது என்பதுமே உலகம் பற்றிய மதத்தின் சித்திரமாக இருந்தது இல்லையா? ஆனால் அவ்வாறில்லாமல் பூமி தட்டை அல்ல உருண்டை என்றும் அலெக்சாண்டிரியா அருங்காட்சியகத்தின் அறிவியல் கண்டுபிடிப்புகளே உணர்த்திவிட்டன அதன் வழி வந்த எரோஸ்தனீசு என்கின்ற அறிவியலாளர் உணர்ந்து உரைத்திட்டார் என்றும் ஏற்கனேவே கூறினோமில்லையா? இந்தக் கூற்றை மறுத்து புனித அகஸ்டின் கால மதவாதிகள் என்னவெல்லாம் கூறி வாதிட்டார்கள் என்று பார்ப்போமா...

பூமி கோள வடிவத்திலுள்ளது என்று சொல்பவர்களைப் பார்த்து லக்டானிடஸ் என்பவர் எழுப்பும் கேள்விகளைப் பாருங்கள்

தாவரங்களும் மரங்களும் பூமியின் அடுத்த பாகத்தில் கீழ்நோக்கி தொங்கிக் கொண்டிருக்கின்றன. மனிதர்களின் கால்கள் அவர்கள் தலையை விட உயரமாக இருக்கின்றன என்றெல்லாம் நம்புமளவுக்கு மனிதர்கள் முட்டாள்களாக இருக்க முடியுமா? பூமியின் அடுத்த பக்கத்திலிருந்து எப்படி பொருட்கள் கீழே விழாமல் தொங்கிக் கொண்டிருக்கின்றன? அவர்களிடம் கேட்டால் இது போன்ற முரண்பாடுகளுக்கு என்ன சமாதானம் சொல்வார்கள்? ((நூல் மூன்றாம் அத்தியாயம்)

இதனைத் தெடர்ந்து புனித அகஸ்டீன் உறுதியாகப் பதிலளிக்கிறார்

பூமியின் அடுத்த பாகத்தில் யாரும் வசித்துக் கொண்டிருக்க முடியாது. **ஏனெனில் ஆதமின் வாரிசுகளில் அப்படி எந்த ஓர் இனமும் விவிலியத்தில் சொல்லப்படவில்லை (!!!!)**

இவை எல்லாவற்றையும் விட பூமி உலோக வடிவிலுள்ளது என்கின்ற வாதத்தில் அதிகமாகப் பதிலளிக்கப்படாத கேள்வி இதுவாகத்தான் இருந்திருக்கும், “நியாயத் தீர்ப்பு வழங்கும் நாளில் பூமியின் அடுத்த பக்கத்திலுள்ள மனிதர்கள் ஆகாயத்திலிருந்து கீழிறங்கி வரும் கடவுளை எப்படி பார்க்க முடியும்?

இவ்வாறாக நீண்டு செல்லும் அறிவு வளர்ச்சிக்கான போராட்ட பாதையின் வரலாற்றுச் சுவடுகளுக்கான ஒரு முன்னுரையே இக்கட்டுரை. தங்கள் வாழ்க்கையையும் தங்கள் இன்னுயிரையும் மதங்களின் தண்டமுறை மன்றத்திடம் பலியிட்டு அறிவியலாளர் இந்தக் கேள்விகளைத் தாண்டி அறிவியல் உண்மைகளை மனித புத்தியில் நிலை பெறச் செய்தார்கள். அலெக்சாண்டிரியாவின் அழிவுக்குப் பிறகு நீண்ட காலம் கழித்து அராபியர்கள் அதனைக் கைப்பற்றி நின்று போயிருந்த அல்லது நிறுத்தப் பட்டிருந்த அறிவியல் வளர்ச்சியைக் குறிப்பாக வானவியலிலுமே கணிதவியலிலும் தொடர்ந்தார்கள். ஆனால் அதன்பிறகும் 18ம் நூற்றாண்டு வரை மதத்திற்கும் அறிவியலுக்குமான மோதல் அரசு அதிகாரத்தையும் மீறிக் கூட

நடத்தப்பட்டுக் கொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் அய்ரோப்பா அரசிடமிருந்து மதத்தை பிரித்திட தீர்மானித்தது. அதுவரையிலுமான வரலாறு கூட பல நூல்களாக இயற்றப்படும் வண்ணம் முக்கியத்துவம் வாய்ந்ததே ஆகும். மதத்தின் இத்தகைய வரலாற்றை அறிந்திருந்தும் அறிவியலைத் தொழிலாக ஏற்றுக் கொண்டிருப்பவர் பலரும் மதம் மனித வாழ்வில் இன்றியமையாதது எனக் கூற முற்படும்போது அதனை மறுத்துத் தலைவர் பெரியாரின் கடவுள் மறுப்பு முழக்கங்கள் நமக்குள் உயிர்ப்போடொலிக்கின்றன. அவை மனித இன வரலாற்றை சுருக்கிக் கூறிட்ட வரிகளாகும்.

## அடிக்குறிப்புகள்

1. HISTORY OF THE CONFLICT BETWEEN RELIGION AND SCIENCE
By John William Draper, M. D., LL. D., December 1873.
ஹிஸ்டரி ஆஃப் த கான்ஃபிலிக்ட் பிட்வீன் ரிலிஜன் அண்டு சையின்ஸ் (மதத்துக்கும் அறிவியலுக்குமான மோதலின் வரலாறு), திசம்பர் 1873.
ஆசிரியர்: டிராப்பர்,
ஜேம்ஸ் வில்லியம்(1811-1882)

## ஆசிரியர் குறிப்பு

1930களில், தமிழகத்தில் முதல் தலைமுறை சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், சாதி மறுப்புத் திருமணங்கள் செய்து கொண்ட சுயமரியாதைச் சுடரொளிகள் ச.வீ.க.முத்துசாமி- காந்தியம்மாள் அவர்களின் பேத்தி ஆவார் ஓவியா. தந்தையார் தமிழரசன் என்ற இராசாமணி, தி.மு.க.ப.க., அதன்பின் திராவிடர் கழகத்தில் பேச்சாளாராக, மாவட்டப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றியவர்.

ஓவியா 13 வயதிலிருந்து மேடைப்பேச்சாளராக இருந்து வருகிறார். மகளிர் விடுதலை மன்றம், தமிழனப்பெண்கள் விடுதலை இயக்கம், தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்கம் ஆகிய அமைப்புகளை நடத்தியவர். ஏழாண்டுகள் நடத்தப்பட்ட புதிய குரல் இதழின் ஆசிரியர். புதிய குரல் என்னும் இயக்கத்தின் நிறுவனர். இது ஒரு கலாச்சார இயக்க, சிந்தனை உருவாக்கக் களம். சாதியற்ற, பாலின பேதமற்ற தமிழ்ச் சமூகம் அதுவே இலக்கு என்பது இந்த இயக்கத்தின் குறிக்கோள் வாசகம். சாதியற்ற பொது வெளியைக் கட்டுவதே இதன் முகாமையான நோக்கம்.

திரு. ஆனந்தன் அவர்களால் எழுதப்பட்ட புத்த மதத்தின் சாரம் என்ற புத்தகத்தினை மொழி பெயர்த்தவர் ஓவியா. 'பெண்ணும் ஆணும் ஒண்ணு', 'கருஞ்சட்டைப்பெண்கள்', 'ஆதிப்பெண்ணின் அடிதேடி', 'மதம் மாறச்சொன்னாரா பெரியார்?', 'புதிய குரல் தொகுப்பு', 'மதமும் பெண்களும்' என்னும் பல நூல்களின் ஆசிரியர். 'மதத்திற்கும் அறிவியலுக்குமான போர்' என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூல் வெளிவர இருக்கிறது. சிந்தனையாளன், உண்மை, காலச்சுவடு, கைத்தடி போன்ற ஏராளமான இதழ்களில், மலர்களில் இவரது கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. கருத்துரையாளராக, எழுத்தாளராக ஊடகத்தளத்தில் இயங்கி வருகிறார். 22 ஆண்டுகள் ஒன்றிய அரசுப்பணியாளராக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி மய்யத்தில் பணி புரிந்தவர். தற்சமயம் கம்பெனி செகரட்டிரியாக சென்னையில் சொந்தத் தொழில் செய்து வருகின்றார். பல தனியார் நிறுவனங்களுக்கும் பணியாற்றுகிறார்

**The Indus script is most likely to have belonged to the Dravidian family.**

*The Indus symbols and seals represent a logo-syllabic script and based on computer analysis,it is strongly suggested that an underlying agglutinative Dravidian language is the most likely candidate for the underlying language of the Indus Valley Civilization.*


..............................................

Proto-Indica:
Report onthe Investigations of the Proto-Indian Texts.
Moscow: Nauka Publishing House, 1981.

Prof. Dr. **YURI KNOROZOV**

*N.N. Miklukho-Maklai-*
*Institute of Ethnology and Anthropology (IEA),*
*Academy of Sciences of (formerly USSR)*
*Russia.*

# கலைஞர் மு. கருணாநிதியின் மேற்கோளாட்சியில் பாரதிதாசன் கவிதைகள்



**பேரா. முனைவர் இ. கி. இராமசாமி**
மேனாள் தலைவர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை

**கட்டுரைச் சுருக்கம்**

*கலைஞர் மு.கருணாநிதியின் படைப்புலகம் பரந்துபட்டது.அவருடைய படைப்புலகில் பாரதிதாசனின் கவிதைவரிகள் சாலப் பொருத்தமான இடங்களில் அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளனவா? என இந்தக் கட்டுரை ஆராய்கிறது.கலைஞரின் நூல்களை எடுத்துக்கொண்டு, அதில் பாரதிதாசனின் கவிதை மேற்கோள்கள் எங்கெல்லாம் எடுத்து ஆளப்பட்டிருக்கிறது என்பதையும், கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் எப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் எங்ஙனம் பாரதிதாசனின் கவிதை வரிகளைக் கையாண்டிருக்கிறார் என்பதையும், பல ஆதாரங்களை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்கிறது.காலம், களம், காரணம் ஆகிய மூன்றுநிலைகளில் பாரதிதாசன் கவிதை வரிகளைக் கலைஞர் எப்படி எடுத்தாண்டுள்ளார் என்பதையும், அவருடைய பேச்சிலும் எழுத்திலும் இடையிலும் இறுதியிலும் எப்படியெல்லாம் பொருத்தமாகப் பாரதிதாசன் கவிதை வரிகளைக் கலைஞர் மு.கருணாநிதி கையாண்டுள்ளார் என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.முடிவில் இதைப்போல வேறு தலைவர்கள் இப்படி பயன்படுத்தி இருக்கிறார்களா? என்று ஆராய்வதற்கான வழிமுறைகளையும் இந்தக் கட்டுரை தருகிறது*

## 1.1 அறிமுகம்

கலைஞர் மு.கருணாநிதியின் படைப்புலகம் பரந்துபட்டது. புதினங்கள், நாடகங்கள், உரைஓவியங்கள், கட்டுரைகள், கடிதங்கள், சிறுகதைகள், கவிதைகள், பயணநூல்கள், தன்வரலாறு, நேர்காணல்கள், பொன்மொழிகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் என அவற்றைப் பகுத்தும் தொகுத்தும் பார்க்கலாம். அவற்றில் அவருடைய பன்முகத் திறன்களையும் படைப்பு ஆளுமைகளையும் காணமுடியும். அவருடைய படைப்புலகில் தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதிதாசன் கவிதைகள் ஆகியன எடுத்தாளப்பெற்றிருக்கும். அவற்றில் பாரதிதாசனின் கவிதைவரிகளே சாலப் பொருத்தமான இடங்களில் அதிகமாக எடுத்தாளப்பட்டுள்ளன.

### 1.1.1 ஆய்வு நெறிமுறை

கட்டுரையின் செறிவும் சொற்சிற்பமும் வரையறையும் கருதி எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள்களுக்கு அடிக்குறிப்பு இடவில்லை. கலைஞரின் நூல்களே அடிக்குறிப்பில் இடம்பெறுகின்றன. தமிழ்நாட்டு வரலாறும், அரசியல் வரலாறும் கலைஞரின் வாழ்க்கை வரலாறும் பாரதிதாசன் கவிதைகளின் நோக்கும் போக்கும் அறிந்து விருப்பு வெறுப்பின்றிக் கலைஞரை ஒரு படைப்பு ஆளுமையாகப் பார்த்தால் கட்டுரையின் கருத்து எளிதாகப் புரிந்துவிடும்.

காலம், களம், காரணம் ஆகிய மூன்று நிலைகளில் பாரதிதாசன் கவிதை வரிகளைக் கலைஞர் எடுத்தாண்டுள்ளார். அவருடைய பேச்சிலும் எழுத்துக்களிலும் இடையிலும் இறுதியிலும் பொருத்தமாகக் கையாண்டுள்ளார். அவற்றில்

இறுதிப்பகுதிகளில் இடம்பெறும் கவிதைவரிகள் தண்டமிழாற்றலை உணர்த்தும்.

அறிஞர் அண்ணாவின் பேச்சிலும் எழுத்திலுங்கூட இத்தகைய உத்தி காணப்பெறவில்லை. நாவலர் இரா.நெடுஞ்செழியன் பாரதிதாசன் கவிதைகளை மேடைதோறும் முழங்கி இளைஞர்களுக்கு எழுச்சியூட்டினார் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் கலைஞர் தேர்ந்தெடுத்த பாரதிதாசன் கவிதை வரிகளைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு பெய்துள்ளார். பாரதிதாசனே தேர்ந்தெடுத்த சொற்களைத்தான் பயன்படுத்துவார். அது அவருடைய கவிதை நடையின் தனிச்சிறப்பு. மொத்தத்தில் பாரதிதாசன், கலைஞர் ஆகிய இருவர் பாணியிலும் உயிரோட்டம் இருக்கும்.

## 2.1 தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் (1942)

கலைஞர் தமது 18ஆம் வயதில் தாம் தொடங்கிய 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற' ஆண்டு விழாவை நடத்தினார். அதற்கு பாரதிதாசன் அனுப்பிவைத்த வாழ்த்துப்பா கலைஞரை ஆட்கொண்டுவிட்டது.

**"தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றங் காண்!**
**வண்மையொடும் உண்மையொடும் வாழ்த்திடுங் காண்**
**மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்!**
**கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்**
**கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியெய் துங்காண்!**
**புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவாரூரின்**
**புலியிளைஞர் காண்! தோள்கள் பூரித்தார் காண்!"**

**"எழில்மன்றச் சட்டத்தை உயிரைப் போலே**
**எண்ணியந்த வண்ணமே நடப்பார் கள்காண்!**
**ஒழிந்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்**
**உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட்;டார்கள்**
**மொழியினிலே தமிழ்மொழியே உயர்ந்த தென்றும்**
**மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல**
**வழியறிந்து விட்டார்காண்! முத்த மிழ்க்கு**
**மடை கோலி விட்டார்காண்! உலகில் பாய்ச்ச!"**

**"கிளம்பிற்று காண்தமிழ்ச் சிங்கக் கூட்டம்**
**கிழித்தெரியத் தேடுதுகாண் பகைக்கூட் டத்தை!**
**வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழ ரல்லார்**
**வால்நீட்டி னால் உதைதான் கிடைத்திடுங்காண்!**
**தளும்புதுபார் பக்தியென்றும் யோக மென்றும்**
**சாமியென்றும் முழுமியென்றும் எழுதிப் பேசிப்**
**புளுகுதல் இனிப்பலிக்க வழியில் லைகாண்**
**புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட் டின்காண்!"**

(மேற்கோள் எடுத்தாளப்பட்டது — நெஞ்சுக்குநீதி - முதல்பாகம், திருமகள் நிலையம், சென்னை, 2000, ப. 53). மேற்கண்ட வரிகளை இளைஞர் கூட்டங்களில் கலைஞர் முழங்குவதை ஒரு வழக்கமாகவே கொண்டிருந்தார்.

## 2.2 கல்லக்குடிப் போராட்ட அழைப்பு (1953)

டால்மியாபுரத்திற்குக் கல்லக்குடி என்ற தூய தமிழ்ப்பெயரைச் சூட்டச் சொல்லி நடத்திய போராட்டத்தில் 6 மாதம் கடுஞ்சிறைத்தண்டனை பெற்று அரியலூர் சிறையில் அடைக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட தொண்டர்கள் யாரும் மன்னிப்புக் கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு விடுதலை பெறக்கூடாது என்பதை முதலிலேயே சொல்லிவிட்டார். அதற்குத் தன்மான உணர்வு பொங்கும் பாரதிதாசன் கவிதை வரியினையே அடிநாதமாக வெளிப்படுத்தினார்.

"எதிரிகள் கோடிஇட்டு அழைத்தாலும்
தொடேன்" (மேலது, ப. 192).

### 2.2.1 சிறைவாசம்

சிறைக்குள் தொண்டர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றுங்கால்,

**"தமிழென்று தோள்தட்டி ஆடு! அந்தத்**
**தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு" (மேலது, ப.** 237)

என்று பாரதிதாசன் கவிதைவரிகளைச் சொல்லித் தமிழ்ப்பற்றை ஊட்டினார்.

### 2.2.2 சோர்வு நீக்க

சிறைத்தண்டனை தொண்டர்களைச் சோர்வடையச் செய்யும். அதனை அனுபவித்துக் கொண்டிருந்த கலைஞர் மேற்கோளாய் எடுத்தாண்ட பாவேந்தரின் கவிதை வரிகள் வருமாறு:

**"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை**
**மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" (மேலது, ப.** 240)

சற்றொப்ப 23 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் 1976-ல் டால்மியாபுரம் கல்லக்குடி என மாற்றப்பட்டது.

### 2.2.3 ஒப்புமை

இவ்விடத்தில் 'உங்களில் ஒருவன்' என்ற தன்வரலாற்று நூலில் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறை அனுபவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். நெருக்கடிநிலை காலத்தில் (Emergency) 1976-ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. மு.க.ஸ்டாலினைச் சிறைக்குக் கொண்டு போனார்கள். எத்தனை ஆண்டுகள் சிறைவாசம் என்று சொல்லப்படவில்லை. தமது மனத்துக்குள் மேற்காட்டிய பாவேந்தர் கவிதை வரிகளை நினைத்துக்கொண்டார். சிறையின் உள்ளே நுழைந்தார். அங்கு,

**"மாங்குயிலின் இனிய கீதம் கேட்கவில்லை, மரண ஓலங்கள் கேட்டன. சிறைச்சாலை சித்திரவதைக் கூடாரமாக நடத்தப்பட்ட கொடுமைகள் அத்தனையும் பதைபதைக்க வைக்கும் நிகழ்ச்சிகள் என்றாலும், அவை ஒரு கொள்கை வீரனுக்கு எதையும் தாங்கும் சக்தியை உருவாக்கியது. சிறைக்குள் உங்களையும் அழைத்துச் செல்கிறேன்!**

**இதோ சிறைவாசலில் காத்திருக்கிறேன்.**
**நீங்களும் வாருங்கள்!"**

**(மு.க.ஸ்டாலின், உங்களில் ஒருவன், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2022, பக். 333-334)**

இவ்வாறு தந்தையின் அனுபவம் அவரே தேடிக்கொண்டது, மகனின் அனுபவம் அவரைத் தேடி வந்தது. தந்தைக்கும் மகனுக்கும் வெவ்வேறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காரணம் இருவேறு சூழ்நிலைகள்.

## 3.1 பாரதிதாசன் மறைவு

21.4.1964 இல் பாரதிதாசன் இயற்கை எய்தினார். அன்று கலைஞர் பாரதிதாசனின் இலக்கிய ஆளுமையினைத் தனி சொற்சித்திரத்தால் வடித்துக்காட்டினார். பாரதிதாசனின் உவமையழகு, உணர்ச்சித் துடிப்பு, புதுமைநோக்கு, புரட்சி வெடிப்பு தமிழரின் நெஞ்சமெல்லாம் நிறைந்தவை.

**"கொலை வாளினை எடடா! — மிகு**
**கொடியோர் செயல் அறவே"**

என்பன போன்ற புரட்சி தெறித்திடும் வரிகளை இன்னொருவரால் புனைந்திட முடியுமா?

**"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்**
**காணத் தகுந்தது வறுமையாம்!**
**பூணத் தகுந்தது பொறுமையாம்!"**

என்று தொழிலாளர்களுக்குத் தோழனாய் உரத்தகுரல் எழுப்ப யாரால் முடியும்!

**"மட்டற்ற செம்பொருட்கே - முரண்படும்**
**மதங்கள் உண்டோடா!"**

என்று மதங்களைச் சாடிய ஆண்மையாளர் உண்டா?

**"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே**
**வெல்லும் தரமுண்டு தமிழுக்கு இப்புவிமேலே"**

என்று தன்னம்பிக்கை ஊட்டிய கவிஞரும் உளரோ?

**"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ!**
**கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையல்!**
**திறம்பாட வந்த மறவன்; புதிய**
**அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்**
**படரும் சாதிப் படைக்கு மருந்து!**
**மண்டு மதங்கள் அண்டா நெருப்பவன்!**
**அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்"**

என்றெல்லாம் பாரதியாரைப் பாடினாலும் அத்தகைய சிறப்பு பாரதிதாசனுக்கும் பொருந்தும். இதுகாறும் காட்டியவை மேற்கோள்களாய் எடுத்தாளப்பட்டவை.

**"இருண்ட வீட்டில் குடும்ப விளக்கு ஏற்றிவைத்தார்.**
**பாண்டியன் பரிசு பெற்றார் - நமக்குக்**
**குறிஞ்சித் திட்டும் உண்டு குயில்**
**இதழ் நடத்தும் போதே கவிதை**
**அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கலந்துவிட்டார்.**
**அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்... அவர்**
**காதல் நினைவாலே கவிப்பெண்ணை**
**வாடவிட்டுச் சாவின்**
**எதிர்பாராத முத்தத்தில் பிரிந்துவிட்டார்"**

(நெஞ்சுக்கு நீதி, முதல்பாகம், பக்.508-513) எனப் பாரதிதாசனின் படைப்புலகை நம் கண்முன் நிறுத்துகின்றார் கலைஞர்.

1967இல் அறிஞர் அண்ணா ஆட்சி அமைத்தபோது,

**"தமிழாய்ந்த தமிழ்மகன்தான்**
**தமிழ்நாட்டின் முதலமைச்சராய்**
**வருதல் வேண்டும்"**

என்று பாடிய பாரதிதாசன் கவிதை நனவாயிற்று என்று பதிவு செய்துள்ளார் கலைஞர் (நெஞ்சுக்கு நீதி, முதல்; பாகம், ப. 687).

1976இல் நெருக்கடிநிலைமை அறிவிக்கப்பட்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தி.மு.க. தொண்டர்களும் பொறுப்பாளர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். 18 மாதங்கள் சிறைக்கொடுமைகளை அனுபவித்தனர். நெருக்கடி நிலைமை தளர்த்தப்பட்டப்பின் அவர்கள் அணியணியாக விடுதலை செய்யப்பட்டனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கலைஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளைச் சொல்லியே வரவேற்றார்.

**"பூட்டிய இரும்புக் கூட்டின்; கதவு**
**திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியே வா!**
**............... ...........**
**எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்**
**புலியெனச் செயல் செய்யப் புறப்படு வெளியே!**
**......... ............ ..................**
**வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!**
**கையிருப்பைக் காட்ட எழுந்திடு!**
**குதிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே!**
**மறிக்க ஒணாக் கடல்போல் பகைமேல் விடு!**
**..................... .............**
**மக்களை ஒன்றுசேர் வாழ்வை உயர்த்துக**
**கைக்குள் திறமை காட்ட எழுந்திடு!"**

(நெஞ்சுக்குநீதி, இரண்டாம் பாகம், திருமகள் நிலையம், சென்னை, 2016, ப. 586).

இந்தக் கவிதையடிகளைத் தப்பும் தவறுமாகச் சீர்களை மாற்றியும் அடிகளை உடைத்தும் திருமகள் நிலையத்தார் பதிப்பித்துள்ளனர். கட்டுரையாளர் அவற்றை நேர்செய்து தந்துள்ளார். கலைஞரின் மேற்கோளாட்சியிலே சில வரிகள் இடம்பெறவில்லை.

## 4.1 மோகன் ரானடே

கோவா விடுதலைப் போராளி மோகன் ரானடே மன்னிப்புக் கேட்க மறுத்து 13 ஆண்டுகள் சிறையில் வாடினான் என்ற வரலாற்றுச் செய்தியைச் சுட்டிக்காட்டிக் கழகக் கண்மணிகள் தன்மான உணர்ச்சியுடன் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டும் என்கின்றார்.

**"எமை நத்துவாயென எதிரிகள்கோடி**
**இட்டழைத்தாலும் தொடேன்"**

என்ற பாரதிதாசன் கவிதைப் பகுதியையே மேற்கோள் காட்டுகின்றார். இது நெருக்கடி காலப் பின்னணியில் நெஞ்சுக்கு நீதியில் எழுதப்பட்டது.

## 5.1 பட்டம் பெறல்

1971இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கலைஞருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அந்த நிகழ்ச்சிக்கு வந்த கலைஞர் இந்தித் திணிப்பை எதிர்த்து இன்னுயிர் நீத்த இராசேந்திரன் சிலையைக் கண்டார். விழாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவில்

**"கொலை வாளினை எடடா — மிகு**
**கொடியோர் செயல் அறவே"**

என்ற பாரதிதாசன் கவிதை வரிகள் முத்தாய்ப்பாக அமைந்தன. அவற்றுக்கு அவர் சொன்ன பொருள் மிக இன்றியமையாதது; பாரதிதாசன் கொடியோர் செயல் அறவே ஒழிக்கச் சொன்னாரே தவிர, கொடியோர் தலையை அறுக்கச் சொல்லவில்லை என்று விளக்கம் சொன்னார்.

## 6.1 பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை மறுப்பு

இந்தக் காலகட்டத்தில் கலைஞர் எழுதிய முரசொலிக் கடிதம் 3.12.1973 மிகவும் குறிப்பிடத்தக்கது. புரட்சிக்கவிஞர் நினைவு அஞ்சல் தலை வெளியிடவேண்டும் என்ற கோரிக்கை தி.மு.க.வால் மாநிலங்களவையில் வைக்கப்பட்டது. அதுவும் இரண்டு முறை வலியுறுத்தப்பட்டது (1972, 1973). அதனை ஆராய்ந்த குழு அந்தக் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டது. அதற்கு உள்நோக்கம் இருந்தது. தேர்ந்த அரசியல்வாதியும் இலக்கியவாதியுமான கலைஞருக்கு அதன் பின்னணி புரிந்துவிட்டது, பாரதிதாசன் கவிதை வரிகளிலேயே பதிலடி கொடுத்தார்.

**“இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி**
**இருக்கிறது என்பானும் இருக்கின்றானே”**

பலாவின் சுளை, கரும்பின் சாறு, மலரின் தேன், பாகின் சுவை, பசும்பாலின் இனிமை, இளநீரின் சுவை ஆகியவற்றைவிடத் “**தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்**” எனப் பாடியவன் பாரதிதாசன். தமிழுக்கு வேறு யாரும் சேர்க்காத பெருமையைச் சேர்த்தவன்; அவனுக்கு அஞ்சல் தலை வெளியிடலாமா? என்று ஆராய்ச்சி நடக்குதாம்!

**“தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பென**
**இருள்தன் கட்டுக் குலைந்தது”**

என்ற ஒப்பற்ற உவமை படைத்துக்காட்டிய கவிஞனுக்கு அஞ்சல் தலை வெளியிட இயலாது என்று சொல்லிவிட்டது டெல்லி அரசு.

**“தனித்துக் கிடந்திடும் லாயம் - அதில்**
**தள்ளி அடைக்கப்படும் குதிரைக்கும்**
**கனைத்திட உத்தரவுண்டு — வீட்டில்**
**காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?”**

என்று பெண்ணுரிமைக்காக ஓங்கிக் குரல் கொடுத்த பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை வெளியிடாதாம்; டெல்லி அரசு. இத்தனைக்கும் இந்திரா காங்கிரசும் திமுகவும் இணைந்தே போட்டியிட்டு வென்று மத்தியிலும் மாநிலத்திலும் அரசுகளை அமைத்த காலச்சூழல் அது. பாரதிதாசனுக்காகப் போராடிக் கலைஞர் தோற்றுப்போன அரசியல் சூழலும் அதுதான் (முரசொலிக் கடிதம், 3.12.1973).

## 7.1 பராசக்தி

கலைஞரின் மலரும் நினைவுகளில் நிற்கும் மற்றுமொரு நிகழ்ச்சி பராசக்தி திரைப்படத்தின் தொடக்கத்தில் பாரதிதாசனின்,

**“வாழ்க வாழ்கவே**
**வளமார் எமது திராவிடநாடு**
**வாழ்க வாழ்கவே**
**சூழும் தென்கடல் ஆடும் குமரி**
**தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்**
**ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்**
**அறிவும் திறனும் செறிந்த நாடு**

**பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த**
**பண்ணிகர் தெலுங்கு துளு மலையாளம்**
**கன்னட நிகர்கன்னட மெனும் மொழிகள்**
**கமழக் கலைகள் சிறந்த நாடு**

**அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்**
**அறிவின் விளைவும் ஆர்ந்திடு நாடு**
**வெள்ளப் புனலும் ஊழித் தீயும்**
**வேகச் சீறும் மறவர்கள் நாடு**

**அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்**
**அழகாய் முத்துக் குவியும் கடல்கள்**
**முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்**
**முல்லைக் காடு மணக்கும் நாடு**

**அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்**
**அடிநாள் ஈன்ற அன்னை தந்தை**
**தமிழர்கள் கண்டாய் அறிவையும் ஊட்டிச்**
**சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு**

**ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்**
**சாற்றில் தென்றல் காற்றில் நல்ல**
**ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்**
**அழகில் கற்பில் உயர்ந்த நாடு**

**புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்**
**பொன்னார் இழையும் துகிலும் பூண்டு**
**கனிமொழி பேசி இல்லறம் நாடும்**
**காதல் மாதர் மகிழுறும் நாடு**

**திங்கள் வாழ்க! செங்கதிர் வாழ்க!**
**தென்றல் வாழ்க! செந்தமிழ் வாழ்க!**
**இங்குத் திராவிடர் வாழ்க மிகவே!**
**இன்பம் சூழ்ந்ததே எங்கள் நாடு.”**

என்று தொடங்கும் பாடலை வைக்கலாம் என்று தயாரிப்பாளரிடம் வேண்டினார் கலைஞர். தயாரிப்பாளர் இசைவு தந்தார்; தயாரிப்பாளர், பாரதிதாசனிடம் அனுமதி கேட்டுத்தரும்படி கலைஞரை வேண்டினார். அதன்படி அனுமதிகேட்ட கலைஞரிடம் அனுமதி தந்ததோடு தமக்குப் பணம் வேண்டாம்; அந்தப் பாடலைப் படத்தில் வைப்பதே தமக்குக் கிடைத்த பரிசுதான் என்று சொல்லிவிட்டார் பாரதிதாசன் (நெஞ்சுக்கு நீதி, மூன்றாம் பாகம், ப. 291).

## 7.2 நாட்டுடைமை

1989-1991களில் கலைஞர் மூன்றாவது முறையாக முதல்வராக இருந்தபோது பாரதிதாசன் படைப்புகளை நாட்டுடைமையாக்கி அவருடைய மரபு வழியினருக்குப் பத்துலட்சம் ரூபாய் நிதி வழங்கினார் (நெஞ்சுக்கு நீதி, மூன்றாம் பாகம், ப. 603).

## 7.3 புதுவை அரசில் தமிழ்த்தாய் வாழ்த்து

புதுச்சேரியில் தி.மு.க. முதன்முதலாக ஆட்சியமைத்த போதுதான்

**"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே**
**மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே**
**வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே**
**வீரனின் வீரமும் வெற்றியும் நீயே!**

**தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப் பேனோ**
**தமிழன் எந்நாளும் தலைகுனி வேனோ**
**சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்**
**தோன்றுடல் நீஉயிர் நான்மறப் பேனோ!**

**செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!**
**செயலினை மூச்சினை உனக்களித் தேனே!**
**நைந்தா யெனில்நைந்து போகும்என் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே!**

**முந்திய நாளினில் அறிவும் இலாது**
**மொய்த்த நன்மனிதராம் புதுப்புனல் மீது**
**செந்தாமரைக் காடு பூத்தது போலே**
**செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!"**

என்ற பாரதிதாசன் பாட்டு புதுவை அரசின் அங்கீகாரம் பெற்ற தமிழ்த்தாய் வாழ்த்தாக அமைந்தது (நெஞ்சுக்கு நீதி, நான்காம் பாகம், ப. 511).

## 8.1 அரசு அலுவலர்களுக்கு

அரசு அலுவலர்களின் போராட்டப் பின்னணியில் அவர் தெரிவித்த கருத்தும் அதற்கு அரண் செய்யும் வகையில் அவர் எடுத்தாண்ட பாரதிதாசன் கவிதையும் குறிப்பிடத்தக்கவை. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் வேலை பார்க்காமல் அரசின் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. திட்டச் செலவையும் அலுவலர் செலவையும் பிரித்துப் பார்க்க முடியாது. பாடுபடும் மக்களின் மீதுள்ள பரிவு தமக்கு அதிகம். அலுவலர்களால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன் மறக்கக்கூடியது அல்ல.

**"சித்திரச் சோலைகளே உமை நன்கு**
**திருத்த இந்தப் பாரினிலே - முன்பு**
**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே"**

(நெஞ்சுக்கு நீதி, நான்காம் பாகம், ப. 141, மேற்கோள் எடுத்தாளப்பட்டது) என்று பாட்டாளி வர்க்கத்தின் பங்களிப்பை விளக்கியுள்ளார்.

## 9.1 மண்டல்குழுப் பரிந்துரை

நடுவணரசில் பிற்படுத்தப்பட்ட (முடீஊ) மக்களுக்கு இடஒதுக்கீடு செய்ய மண்டல்குழு பரிந்துரை செய்தது. உயர்சாதியினர் பொருளாதார அளவுகோலை வைத்து இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றனர். ஆனால் மண்டல்குழு சமுதாய நிலையிலும் கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் இடஒதுக்கீடு செய்து உதவவேண்டும் என்று சொல்லியிருந்தது. அந்தப் பரிந்துரையினை நடைமுறைப்படுத்தவிடாமல் உயர்சாதியினர் செய்த சதியினை மக்களுக்கு உணர்த்த நினைத்த கலைஞர்,

**"அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவாருண்டோ?"**

**(மேலது, ப.** 233)

என்ற பாரதிதாசன் கவிதை வரியினைப் பளிச்செனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்காட்டிய கவிதைவரி தன் குருநாதர் பாரதியாரைத் தூக்கிப்பிடிக்கும்முகத்தான் பாடப்பட்டது. 1946இல் "ரா.கி" (கல்கி) பாரதி உலககவி அல்ல என்றும், அவர் பாடலில் வெறுக்கத்தக்கன உள்ளன என்றும் எழுதியதற்கு மறுப்பாகப் பாரதிதாசன் எழுதியது (பாரதிதாசன் பாடல்கள், நியு செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2000, ஐந்தாம் பதிப்பு, ப. 205).

## 10.1 துரோகம்

தி.மு.கழகத்தில் ஒன்றியிருந்து பாசத்தோடு பழகிய நண்பர்கள் சிலபேர் மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளரை எதிர்த்துச் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றுவிட்டார்கள். அது துரோகச்செயல். அவர்களுக்கு அது மகிழ்ச்சி தரும் செயல் என்றாலும் கழகத்திற்கு ஊனமூட்டும் துரோகச்செயல்.

அமெரிக்க அதிபர் ஜான்கென்னடியின் மனைவி ஜாக்குலின். அவளின் கணவர் கொலை செய்யப்பட்டு ஓராண்டு ஆவதற்குள் மறுமணம் செய்துகொண்டார். அது அந்த அம்மாவுக்கு வேண்டுமானால் மகிழ்ச்சி தரலாம். ஆனால் அமெரிக்க மக்கள் ஜாக்குலின் செய்த காரியத்தை அவமானமாகப் பார்த்தனர்.

**"பாடாத தேனீக்கள்**
**பசியாத நல்வயிறு**
**பார்த்த துண்டோ"**

(பாரதிதாசன் கவிதைகள் காதலைத் தீய்த்த கட்டுப்பாடு, ப. 74) என்று விதவைகட்காகக் குரல்கொடுத்தார் பாரதிதாசன், என்றாலும் ஜாக்குலின் மறுமணத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுபோல கட்சியை விட்டு விலகிச் சுயேச்சையாக நின்று வென்றவர்களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று மறவன் மடலில் (22.10.1968) எழுதினார் கலைஞர். சுயேச்சைகளின் வெற்றி, விதவைத் திருமணத்திற்கு ஒப்பானது என்று குறிப்பிட்டிருப்பது கலைஞரின் கொள்கைக்கு முரண்பட்டது. அதே சமயம் அவரால் ஏற்றுக்கொள்ளமுடியாத துரோகம். கவிஞரின் கவிதையினை இங்கு எதிர்மறை நிலையில் கலைஞர் கையாண்டுள்ளார்.

### 10.1.1 எம்.ஜி.ஆர் விலகியது

தி.மு.கழகத்தைவிட்டுப் பிரிந்து எம்.ஜி.ஆர் அண்ணா தி.மு.க.வை உருவாக்கிய பின் தி.மு.க. தொண்டர்களைத் தமது அணிக்கு அழைத்தார். கலைஞர் அதனை நடக்கின்ற ஆச்சரியமாகக் கருதினார்:

**சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்**
**ஆறு தேக்கிய நல்வாய்க்காலும்**
**நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்**
**நிறையுழைப்புத் தோள்களுக்காக**

ரஷ்யநாட்டு ரஸ்புடீன் கண்ணீர்விட்டுக் கலங்கினானா?

**கற்பிளந்து மலைபிளந்து**
**கருவியெலாம் செய்துதந்த**
**கைகளை**
**முத்தமிட்டு மோதிரம் போட்டானா ஜார்மன்னன்?**

**சித்திரச் சோலைகளை நன்கு திருத்த**
**இந்தப் பாரினிலே ரத்தம் சொரிந்தவர்களை**
**பாராட்டிப் பரிசில் தந்தானா ஜூயிமன்னன்?**

என்றெல்லாம் பாரதிதாசன் கவிதைப் பொருளை மேற்கொள் காட்டிக் கழகத் தொண்டர்கள் எம்.ஜி.ஆர் பக்கம் சென்றுவிடாமல் தடுத்தார். (மு.க. கடிதம் - நாள் 29.05.1973)

### 10.1.2 வெங்கொடுமை

'மிசா' கைதிகளாகக் கழகத்தினர் சிறைக்கொட்டடைகளில் அடைக்கப்பட்டிருந்த போது சிறைச்சாலை அவர்களுக்கு மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று தலைப்பிட்டு 24.02.1976இல் கடிதம் எழுதினார். உடன்பிறப்புக்கள் அனுபவிக்கும் கொடுமைகளைக் கேள்விப்பட்டு.

**"வெங்கொடுமைச் சாக்காட்டில்**
**விளையாடுந் தோள்கள் எங்கள் வெற்றித்தோள்கள்**

என்ற பாரதிதாசன் கவிதைவரிகளையே உடன்பிறப்புக்களின் ஈகமாகக் குறிப்பிட்டார்.

சட்டங்களினாலும், தண்டனைகளினாலும், அடக்கு முறைகளினாலும், துரோகிகளினாலும் உதயசூரியன் சின்னத்தை முடக்கிவிட முடியாது என்று நெருக்கடிநிலை காலத்தில் எழுதினார். (11.04.1976) அதிலேகூடப் புரட்சிக்கவியில் வரும்

**"காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?**
**கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போகுமா?**
**பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?"**

என்ற வரிகளையே மேற்கோளாய் எடுத்தாண்டார்.

### 10.1.3 வள்ளுவனைப் பெற்றதால்

சென்னையில் கலைஞர் கட்டுவித்த திருவள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்டது. ஆனால் அவருக்கு அழைப்பில்லை. தமது மனவலி ஒருபுறம் இருந்தாலும் திருக்குறளின் தனித்தன்மையினைப் பாவேந்தர் எப்படி வருணித்தாரோ அப்படியே எடுத்தாண்டுள்ளர். ஆனால் கனத்த மனத்தோடு!

**"தெள்ளு தமிழ்நடை**
**சின்னஞ் சிறிய இரண்டடிகள்**
**அள்ளு தொறுஞ் சுவை**
**உள்ளுதொறும் உணர்வாகும் வண்ணம்**
**கொள்ளும் அறம் பொருள்**
**இன்பம் அனைத்தும் கொடுத்த திரு**
**வள்ளுவனைப் பெற்றதால்**
**பெற்றதே புகழ் வையகமே"**

(பாவேந்தம், ப. 93)

## 11.1 மகளிர் மாநாடு

மதுரை மாநகரில் மகளிர் மாநாடு நடக்கவிருந்த சூழ்நிலையில் 12.11.1975இல் கலைஞர் வரைந்த கடிதம் புரட்சிக்கவிஞர் முதன்முதலாகப் பாடிய கவிதையின் எதிரொலியாக அமைந்தது.

**"எங்கெங்கு காணினும் சக்தியடா**
**ஏழுகடல் அவள் வண்ணமடா"**

என்ற பாரதிதாசன் கவிதைக்குப் பொருளாக மதுரை மகளிர் மாநாடு விளங்கும் என்று மகளிருக்கு அழைப்பு விடுத்தார்.

### 11.1.2 பகுத்தறிவுச் சோலையாக்கு

கலைஞரின் 19.05.1976ஆம் நாள் கடிதம் பகுத்தறிவுச் சிந்தனையை அடிக்கருத்தாகக் கொண்டு வறுமையைப் பின்னணியாகக் கொண்டு அடுக்கடுக்காகத் தொடுக்கப்பட்ட பாவேந்தரின் கவிதைவரிகளை மேற்கோள்களாகக் கொண்டு எழுதப்பட்டது. பாரதிதாசன் முதலாளியைப் பகுத்தறிவு மன்றத்தில் நிற்க வைத்து ஏழையின் பக்கம் தீர்ப்பு உரைப்பது போல அந்தக் கவிதை அமைந்துள்ளது.

**"பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற**
**பழைய முதலாளியினை நிற்க வைத்து"**

(பாரதிதாசன் கவிதைகள், ப.122)

**"கைத்திறனும் வாய்த்திறனும் கொண்டபேர்கள்**
**கண்மூடி மக்களது நிலமெல்லாம்**
**கொத்திக் கொண்டு ஏப்பமிட்டு வந்ததாலே**
**கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?"**

(மேலது, பக். 123)

**"இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ!**
**புதுக்கணக்குப் போட்டுவிடு பொருளையெல்லாம்**
**பொதுவாக எல்லார்க்கும் நீ குத்தகை செய்!"**

(மேலது, பக்.123)

அச்சத்தை விடுத்துப் பகுத்தறிவை எடுத்தால் பொதுவுடைமைப் பூங்காவாக இந்த உலகத்தை உன்னால் மாற்ற முடியும் என்று உலகப்பனுக்குப் பாவேந்தர் அறிவுரை சொன்னார். அதனையே வழிமொழிந்தார். கலைஞர்.

**"தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு**
**சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டெனபான்**
**சின்னதொரு கடுகுபோல உள்ளங்கொண்டோன்**
**தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்"**

**"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்**
**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே**
**சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே"**

(பாரதிதாசன் கவிதைகள், ப.109)

தன்னலம் தீர்ந்துவிட்டால் அங்கே இன்பம் பூக்கும் என்ற கவிஞரின் கருத்தே கலைஞர் கருத்தும் ஆகும்.

### 11.2.4 கலைஞர் நாடகங்களில் கவிஞர்

கலைஞர் தமது மாணவப்பருவத்திலே நச்சுக்கோப்பை என்ற நாடகத்தை எழுதி இயக்கித் தாமே நடித்து அரங்கேற்றி வந்த காலம் ஒன்று உண்டு. அந்த நாடகத்தில் வரும் கதை நாயகன்;

**"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்**
**என்பது அன்றைய பழமொழி"**

ஆனால்

**"பாரதிதாசன் வீட்டு பானையும் சட்டியும்**
**பண்ணமைத்துக் கவிபாடும் என்பது இன்றைய புதுமொழி"**

என்று வசனம் பேசுவான். கவிஞரின் பெருமையைப் பேசுவான்.

கலைஞர் இயற்றிய தூக்குமேடை நாடகத்திலே இறுதிக்காட்சியில் கவிஞர் எழுதிய புரட்சிக்கவியின் ஒருபகுதியைக் கதைநாயகன் பாண்டியன் முழங்கி மக்களை எழுச்சிகொள்ளச் செய்வான் அந்த கவிதை வருமாறு:

**"பேரன்பு கொண்டவரே! பெரியோரே! என்**
**பெற்ற தாய்மாரே! நல்லிளஞ் சிங்கங்காள்!**
**நீரோடை நிலங்கிழிக்க, நெடுமரங்கள்**
**நிறைந்த பெருங்காடாக்க, பெருவிலங்கு**
**நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்**
**நெடுங்குன்றில் பிலஞ்சோர, பாம்புக்கூட்டம்**
**போராடும் பாழ்நிலத்தை அந்தநாளில்**
**புதுக்கியவர் யார்? அழகு நகர் உண்டாக்கி!**

இவ்வாறு கலைஞர் தமது நாடகப் படைப்புகளுக்கு உரமூட்டும் முகத்தான் கவிஞரின் கவிதைகளை அப்படியே எடுத்தாண்டதும், கருத்துக்களை வசனமாகப் பேசியதும் உண்டு. கவிஞரின் புகழைப் பரப்பி வந்ததும் உண்டு.

## 12.1 நிறைவாக

அ) பாரதிதாசனுக்குப் 'புரட்சிக்கவிஞர்' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டிய அறிஞர் அண்ணாவைவிட அவரது கவிதைகளைத் தமது படைப்புகளில் சாலவும் பொருத்தமான இடங்களில் அதிகம் கையாண்டவர் கலைஞர். சூழல், செயல்பாடு, பொருத்தப்பாடு(Situation, Action, Co-ordination) ஆகிய மூன்று நிலைகளிலும் கவிஞரின் கவிதைகளை மேற்கோளாக ஆண்டுள்ளார்.

ஆ) கவிஞர் மீது கலைஞர் கொண்ட ஈடுபாட்டினைக் காட்டும் வகையில் அவருடைய கவிதைகளை ஒப்பிவிக்கும் போட்டி நடத்தி மாணவர்களுக்குப் பரிசு வழங்கிவருகின்றனர் தி.மு.கவினர். அதற்கு முன்னெடுப்புச் செய்தவரும் கலைஞரே ஆவார்.

இ) போராட்டங்களுக்குத் தொண்டர்களை ஆயத்தப்படுத்தும் போதும், அவர்கள் சிறைவாசத்தை அனுபவிக்கும் போதும், அவர்கள் விடுதலைபெற்ற போதும் கவிஞரின் கவிதைகளைப் பதிவிடுவதைக் கலைஞர் வழக்கமாகக் கொண்டிருந்தார். தமக்குத்தாமே அவற்றைச் சொல்லிக்கொண்ட சூழ்நிலைகள் பலவுண்டு.

ஈ) கவிஞரின் பிறந்தநாள் விழா, மறைந்த நாளை நினைவுகூர்தல் போன்ற சமயங்களில் அவரின் இலக்கிய ஆளுமையினையும் தமிழ்வெறியினையும் மையமிட்டே சொற்பொழிவுகள் ஆற்றினார்; மதிப்பீடும் செய்தார்.

உ) பராசக்தி படத்தில் 'வளமார் எமது திராவிட நாடு வாழ்க! வாழ்கவே' என்ற கவிஞரின் பாட்டைத் தலைப்புப் பாட்டாக வைப்பதில் கலைஞர் வெற்றிகண்டார்.

ஊ) கலைஞரின் தலைமையிலான திராவிடக் கட்சி புதுச்சேரியில் அரசு அமைத்தபோதுதான் கவிஞரின் 'வாழ்வினில் செம்மை செய்பவள் நீயே!' என்ற பாட்டு மாநிலத் தமிழ்த்தாய் வாழ்த்தாக வைக்கப்பட்டது.

எ) பாரதிதாசன் பெயரில் அஞ்சல் தலை வெளியிட நடுவணரசு மறுத்துவிட்டபோது, அதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்தி முரசொலியில் கடிதம் எழுதியவர் கலைஞர்.

ஏ) பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம், அவரது பெயரில் தமிழ் இருக்கை, அவரது பாடல்களைத் தமது திரைப்படங்களில் பயன்படுத்துதல் போன்றநிலைகளில் கவிஞருக்கு எம்.ஜி.ஆர். அளித்துவந்த அங்கீகாரத்தை மேலாய்வுக் களங்களில் காணலாம்.

## பின்னிணைப்பு

### மேற்கோள் காட்டும் நெறிகள்

ஆராய்ச்சி நெறிமுறைகளை வகுத்துக்கொடுத்த மேலைநாட்டு அறிஞர்கள் மேற்கோள்களைக் காட்டும் நெறிகளை விளக்கிக் காட்டியுள்ளனர். மேற்கோள்களைத் தேவை கருதி, இடம்நோக்கி, அளவாக ஆள வேண்டும். ஒரு மேற்கோளை

முழுவதும் ஏற்றுக்கொள்ளவோ, அல்லது முற்றாக மறுக்கவோ, அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு மறுபகுதியை மறுக்கவோ சுட்டிக் காட்டலாம். அப்படிக் காட்டும்போது சொற்களையும் தொடர்களையும் மாற்றாமல் இரட்டை மேற்கோள் குறிக்குள் தருவதே சால்பொருத்தமான முறைமை ஆகும். இப்பொழுதெல்லாம் அச்சுக்கலையின் வளர்ச்சி காரணமாகத் தடித்த எழுத்துக்களில் காட்டுகின்றனர். விவாதங்களானாலும் கட்டுரைகளானாலும் ஆராய்ச்சிகளானாலும் மேற்கோள்கள் உணவுக்கு உப்புப்போல இருக்க வேண்டும். விழா நாட்களில் கட்டப்படும் தோரணங்களைப் போல இருக்கக் கூடாது. இந்த வண்ணமே கலைஞர் மு.கருணாநிதியின் படைப்புக்களில் பாரதிதாசன் கவிதைகள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளன. கவிஞருடைய கனமான கருத்துக்களைத் தாங்கிய கவிதை வரிகளையே கலைஞர் எடுத்தாண்டுள்ளார்.

முழுக்கவிதையினையும் மேற்கோளாகச் சொன்னால் அது கேட்போரைப் பிணிக்காது; படிப்போரையும் கவராது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். தன் கருத்துக்கு அரணாகவும் உரமாகவும் அமைந்த வரிகளையே கையாண்டுள்ளார். முரணாக எந்தக் கருத்தினையும் மேற்கோளாக் கொள்ளவில்லை.

## மேற்கோள் – விளக்கமும் பயன்பாடும்

கலைஞர் தன்னுடைய மனவலிமையையும் இலக்கியப் பயிற்சியையும் வரலாற்று நிகழ்வுகளையும் சுட்டிக்காட்ட கவிஞரின் கவிதைகளை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். உடன்பிறப்புக்களுக்கு நம்பிக்கையூட்டவும் எழுச்சியூட்டவும் அவர்களை அடுத்த கட்டப் போராட்டங்களுக்குத் தயார்படுத்தவும் ஓர் உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். திராவிட இயக்கத்திற்கு ஓர் ஊக்க மாத்திரை போலக் கவிஞரின் படைப்புக்களை பேரறிஞர் அண்ணா, நாவலர் இரா.நெடுஞ்செழியன் போன்றோரும் பயன்படுத்தி வந்தனர் என்னும் உண்மையினைத் தமிழக அரசியல் வரலாறு காட்டும். இன்றும் தமிழர் தலைவர் கி.வீரமணி, சுப.வீரபாண்டியன், செந்தலைக் கவுதமன், சேலம் அருள்மொழி போன்றோர் வெகுசரளமாகப் பாரதிதாசன் கவிதைகளை மேடைகளில் பொழிவதைக் கேட்கின்றோம்.

பாரதிதாசன் கவிதைகளை ஒப்பிவிக்கும் போட்டியினை நடத்திப் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் ஆண்டுதோறும் தி.மு. கழகம் பரிசுகள் வழங்கி ஊக்குவித்து வருகின்றது. பள்ளி மாணவர்களுக்கு,

**“இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்:**
**நீங்கள் எல்லோரும் வாருங்கள் தோழர்களே!”**

என்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் பாடலை மனப்பாடம் செய்து சொல்லும் பள்ளி மாணவர்களுக்குத் தனியாகப் பரிசு தருகின்றனர். புரட்சிக்கவியில் வரும் “நீலவான் ஆடைக்குள்” எனத் தொடங்கித் தொடரும் 36 வரிகளையும், “ஆடுகின்றாய் உலகப்பா” என்பதில் தொடங்கி “ஓடப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ” வரை எட்டு வரிகளையும் மனப்பாடம் செய்து சொல்லும் கல்லூரி மாணவர்களுக்குத் தனியாகவும் பரிசுகள் வழங்கி வருகின்றனர். இந்தப் பாடல்களைக்கூடத் தேர்வு செய்து கொடுத்தவர் கலைஞர்தான்.

## உதாரன் கூற்று

கவிஞரும் காதலும் பாட்டாளியும் பற்றி உரை நிகழ்த்தும் போது புரட்சிக்கவியில் உதாரன்; கூற்றாக வரும் வருணனையை ஆற்றொழுக்காக மனப்பாடமாகச் சொல்லிக் காட்டுவார் கலைஞர்:

**நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து**
**நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்**
**கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்**
**சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!**
**சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ!**
**காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**
**கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!**

**அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்!**
**அவ்வாறேவான்கண்டேன்;திசைகள் கண்டேன்**
**பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?**
**பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!**
**சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்**
**சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி**
**இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்**
**எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ!**

உனைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பம் தானோ!

உன்னைஎன திருவிழியாற் காணுகின்றேன்;;;;;
ஒளிபெறுகின் றேன்; இருளை ஒதுக்கு கின்றேன்;
இன்னலெலாம் தவிர்கின்றேன்; களிகொள் கின்றேன்;
எரிவில்லை குளிர்கின்றேன் புறமும் உள்ளும்!
அன்புள்ளம் பூணுகின்றேன்; அதுவு முற்றி
ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன்!
இன்பமெனும் பால்நுரையே! குளிர்வி எக்கே!
எனைஇழந்தேன், உன்னெழிலில் கலந்த தாலே!"
(பாரதிதாசன் கவிதைகள், தொகுதி —*I* பக்.*19 -- 20*)

## மே தினம்

தொழிலாளர் தினமான மே ஒன்றாம் தேதிக்கு விடுமுறை அறிவித்துத் தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது. அதற்கு மூலகர்த்தாவாக இருந்தவர் கலைஞர்தான். மே தினச் சிறப்புச் சொற்பொழிவில் பாரதிதாசனின் உலகப்பன் பாட்டின் ஒரு பகுதியை அடிநாதமாக வைத்து பேசுவது அவர் வழக்கம்:

"ஆடுகின்றாய் உலகப்பா யோசித்துப்பார்!
ஆர்ப்பாட்டக்காரர் இதை ஒப்பாரப்பா!
தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்;
செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்

ஓடப்பராகி யிருக்கும் ஏழை யப்பர்
உதையப்பராகி விட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார், உணரப்பா நீ "
(மேலது,ப.*123*)

## வழிநடைச் சிந்து

முதல் இந்தித்திணிப்பு எதிர்ப்புப் போராட்ட காலச்சூழலில்(1938) திருச்சி உறையூரிலிருந்து சென்னை நோக்கிப் புறப்பட்ட அறப்போராட்ட வீரர்கள் தைத்தாளமிட்டுப் பாடிக் கொண்டே செல்ல வழிநடைச் சிந்து பாடிக் கொடுத்தார் பாரதிதாசன். 'இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்' எனத் தொடங்கும் அப்பாடல் முழுமையும் கலைஞருக்கு அத்துபடி. சூழ்நிலைக்கு ஏற்பவும் கால வரையறை கருதியும் அப்பாடலின் ஓரிரு பகுதிகளைத் தமது பேச்சிடை முழங்குவார். கடிதங்களிலும் சுட்டிக்காட்டுவார்:

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்-நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்-இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ?
விந்தைத் தமிழ்மொழி எங்கள்மொழி-அது
வீரத் தமிழ்மக்கள் ஆவிஎன்போம்.
இந்திக்குச் சலுகை தந்திடுவார்-அந்த
ஈனரைக் கான்றேயு மிழ்ந்திடுவோம்!

இப்புவி தோன்றிய நாள்முதலாய்-எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டுகண்டீர்!
தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை-இந்தத்
தான்தோன்றி கட்கென்ன ஆணவமோ?

எப்பக்கம் வந்துபு குந்துவிடும்-இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?
அற்பமென் போமந்த இந்திதனை-அதன்
ஆதிக்கந் தன்னைப்பு தைத்திடுவோம்!
எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம்-எங்கள்
இன்பத் தமிழ்மொழிக் கேதருவோம்!
மங்கை ஒருத்தி தரும்சுகமும்-எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்!

சிங்கமென் றேஇளங் காளைகளே-மிகத்
தீவிரம் கொள்ளுவீர் நாட்டினிலே!
பங்கம் விளைந்திடல் தாய்மொழிக்கே-உடற்
பச்சைரத் தம்பரி மாறிடுவோம்

தூங்குதல் போன்றது சாக்காடு — பின்னர்த்
தூங்கி விழிப்பது நம்பிறப்பு!
தீங்குள்ள இந்தியை நாம்எதிர்ப்போம் - உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை
மாட்டநி னைத் திடுஞ்சி றைச்சாலை!

**ஏங்கவி டோம்தமிழ்த் தாய்தனையே — உயிர்**
**இவ்வுட லைவிட்டு நீங்கும்வரை!**

**(பன்மணித்திரள்,மணிவாசகர், பதிப்பகம், *2010*, பக். *114-115*)**

அதேபோலப் பெரியாரின் சிந்தனைகளை விளக்கும் போதெல்லாம் பாரதிதாசனுடைய கவிதை வரிகளான,

**"தொண்டு செய்து பழுத்த பழம்**
**தூயதாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகுதொழும்**
**மனக்குகையில் சிறுத்தை எழும்" (குயில் 26-8-1958)**

என வருவனவற்றை மேற்கோளாய்க் காட்டுவார்.

## கவிஞரின் 99வது பிறந்த நாள் விழா

1989 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் பாரதிதாசனின் 99வது பிறந்த நாளைத் தமிழக அரசு கொண்டாடியது. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர்தான் திருவாரூரில் மாணவர் தமிழ் மன்றத்தின் முதலாமாண்டு விழா எடுத்தபோது (1942) பாரதிதாசன் எழுதி அனுப்பிய கவிதையின் உயிர்நாடியான வரிகளையே தமது பேச்சில் குறிப்பிட்டார்.

**"வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்!**
**மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்!"**

அது மாணவர்களைப் போற்றிப்பாடி வீறுகொள்ளச் செய்த புரட்சிக்கவிஞர் பாட்டு என்பதை நினைவு கூர்ந்தார். 48 ஆண்டுகளுக்குப் பின்னரும் பாரதிதாசன் பாட்டு வரியை அச்சரம் பிழையாமல் மேற்கோள் காட்டிய கலைஞரின் உள்ளத்தில் எப்போதும் கவிஞர் இருந்தார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

கவிஞரின் 100வது பிறந்த நாள் விழாவின் போது அவருடைய நூல்களை நாட்டுடைமை ஆக்கி அவரது வாரிசுகளுக்கு பத்து இலட்சம் ரூபாய் கொண்ட பொற்கிழி வழங்கினார். கவிஞர் முடியரசன், பொன்னி வளவன், அப்துல் ரகுமான் ஆகியோருக்குப் பாரதிதாசன் விருது வழங்கிச் சிறப்பித்தார். (நெஞ்சுக்கு நீதி-நான்காம் பாகம், திருமகள் நிலையம், சென்னை, 2009, ப. 93).

## பார்வை நூல்கள்

1. கருணாநிதி, மு., நெஞ்சுக்கு நீதி — முதல் பாகம், திருமகள் நிலையம், 1924-1974, சென்னை, 1998, ஆறாம் பதிப்பு.
2. கருணாநிதி, மு.,நெஞ்சுக்கு நீதி - இரண்டாம்; பாகம், திருமகள் நிலையம், 1969 — 1975, சென்னை, 2016, ஒன்பதாம் பதிப்பு.
3. கருணாநிதி, மு.,நெஞ்சுக்கு நீதி - மூன்றாம் பாகம், திருமகள் நிலையம், 1976 - 1991, சென்னை, 1999, மூன்றாம்பதிப்பு.
4. கருணாநிதி, மு., நெஞ்சுக்கு நீதி - நான்காம் பாகம், 1989-1996, திருமகள் நிலையம், சென்னை, 2006, இரண்டாம் பதிப்பு.
5. ஸ்டாலின், மு.க.,உங்களில் ஒருவன், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2022.

முரசொலிக் கடிதம், நாள்: 3.12.1973.

## ஆசிரியர் குறிப்பு

பேரா.இ.கி.இராமசாமி அவர்கள் 01-05.1944-இல் கோவை வெள்ளலூரில் பிறந்தவர். 1969-இல் தொடங்கி 2002 வரை, 33 வருடங்கள் கல்லூரிப் பேராசிரியராக, துறைத்தலைவராக, மதுரை யாதவர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருடைய மேற்பார்வையில் நாற்பத்தியோரு பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும், ஒன்பது பேர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். பகுத்தறிவுச் சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளைக் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி மாணவர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகள் வளர உதவி வருகிறவர். இவர்தம் துணைவியார் மு.கசுத்தூரிபாய் அவர்களும் கல்லூரிப் பேராசிரியர். மதுரை யாதவர் கல்லூரியில் பயிரியல் துறைத்தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர்.

தமிழில் பாயிரங்கள், திராவிட இயக்கச் சிந்தனைகள், தமிழின் சிரிப்பு, திருக்குறள் நெறியும்

பகவத் கீதையும், காந்தியடிகளும் பாரதிதாசனும், காந்தியடிகளும் கோராவும், சமூகப் புரட்சியாளர்கள் போன்ற நூல்களின் ஆசிரியர். பாரதிதாசன் பன்மணித்திரள், முப்பாலின் ஒப்புரவு என்னும் நூல்களின் பதிப்பாசிரியர். குறள் கூறும் ஊழும் கூழும், திருக்குறளில் தவமும் துறவும், திருக்குறளில் காமம் என்னும் நூல்களின் தொகுப்பாசிரியர். 2002-இல் பணி ஓய்வு பெற்றபின்பும் தொடர்ந்து பல்வேறு இயக்கப் பணிகளை,தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்து வரும் இவர் அரிய கருத்துகளைச்சுவைபட மெய்ப்பாடுகளுடன் எளிய மொழி நடையில் எடுத்துரைக்கும் நாவன்மை உடையவர். மதுரை, திருச்சி வானொலிகளில் பல்வேறு உரையரங்குகளில் பங்கேற்றுப் பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

சங்க இலக்கியம், காப்பியம், மரபிலக்கணம், இக்கால இலக்கியம், ஆகிய இலக்கிய வகைமைகளில் ஆய்வும் தோய்வும் உடையவர். தந்தை பெரியாரின் கொள்கை வழி நின்றும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் தமிழ் உணர்வோடு ஒன்றியும் விளங்கும் பெருமைக்குரியவர். சாதி சமய மறுப்புத் திருமணங்களும், விதவைத் திருமணங்களும் நிகழ்த்தி வைத்த சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர். தமிழியல் உணர்வுடைய மாணவப் பரம்பரையை உண்டாக்கிய பெருந்தகையர்.

*Dravidar Kazhagam is one of the largest pressure groups in the world, mobilizing people and educating them, via innumerable protest movements for many decades*

..............................................

(Humanism – An update for the New Millennium
London : British Humanist Association, 1998)

**BARBARA SMOKER**

*President of the National Secular Society (1972–1996),*
*Distinguished Humanist Service Award*
*from Humanists International,*
*and Honorary Member of Humanists UK.*

# டாக்டர் அம்பேத்கரும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவும் (Hindu Code Bill) ஒரு சுருக்கமான வரலாறு



**எழுத்தாளர் மு. சங்கையா**

மதுரை

**கட்டுரைச் சுருக்கம்**

*இந்தியாவின் பன்முகக் கலாச்சாரத்தின், வாழ்வியலின்அத்தனை கூறுகளையும் ஆரியமயமாக்கிய வரலாற்றுக்குள்ளே பெண் அடிமைத்தனம் என்பது கொடியதாக இருந்தது. சூத்திரர்களையும் பெண்களையும் அடிமைச் சிறையில் பூட்டி வைத்தது பற்றியும், அதை மாற்ற மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளைப் பற்றியும் இந்தக் கட்டுரை பேசுகிறது. இந்து சட்டத்தொகுப்பு மசோதாவிற்கு அம்பேத்கர் எப்படித் தலைவர் ஆக்கப்பட்டார் என்பதையும், மற்ற எதைக் காட்டிலும் இந்து சட்டத்தொகுப்பை அம்பேத்கர் ஈடு இணையற்றதாக ஏன் கருதினார் என்பதையும் இந்தக் கட்டுரை விளக்குகிறது.அம்பேத்கரின் பார்வைக்கும் நேருவின் பார்வைக்கும் இருந்த நுண்ணிய வேறுபாட்டை ஆராய்கிறது. இந்து சட்டத் தொகுப்பு (Hindu Code Bill)மசோதா முன்வைத்த முக்கிய அம்சங்கள் பற்றி எடுத்துரைக்கும் இந்தக் கட்டுரை, யார் யாரால் இந்தச்சட்டத் தொகுப்பு எதிர்க்கப்பட்டது என்பதையும், யார் யாரால் ஆதரிக்கப்பட்டது என்பதையும், இந்தியாவில் இருந்த அன்றையஇயக்கங்களின் பார்வைகளோடு எடுத்து வைக்கிறது. விடுதலையில் பெரியார் ஆதரவு கொடுத்து எழுதிய தலையங்கத்தை இந்தக் கட்டுரை ஆராய்கிறது. அம்பேத்கர் பதவி விலகியதையும் அதற்கான காரணங்களை அவர் விளக்கியதையும் மேலும் தொகுத்து ஆய்கிறது.*

இந்தியாவின் பன்முக கலாச்சாரத்தின், வாழ்வியலின் அத்தனை கூறுகளையும் ஆரியமயமாக்கிய வரலாற்றுக்குள்ளே பெண் அடிமைத்தனம் என்பது கொடியதாக இருந்தது. சூத்திரர்களையும் பெண்களையும் அடிமைச் சிறையில் பூட்டி வைத்தது.

ஆண்டாண்டு காலமாக பெண்களை சதியின் பெயரால், எரியும் நெருப்பில் தூக்கிப் போட்டு சதி மாதாவாக்கிக் கொண்டாடி மகிழ்ந்தது.. குழந்தைத் திருமணமும், விதவைகளின் நரக வாழ்க்கையும் சாத்திரங்கள் காட்டிய வழியில் துள்ளல் நடை போட்டது. சனாதனவாதிகளின் கொடூர மனம் நாகரிக உலகின் சாபக்கேடாக இருந்தது. ஆயிரம் ஆண்டுகளாக மாறாத மதம் பிடித்த சமூகமாக இருந்த நிலையை மாற்றியமைக்க சீர்திருத்தவாதிகள், மகளிர் அமைப்புகள் முற்போக்கு இயக்கங்கள் ஆங்கிலேய அரசுக்கு கொடுத்த அழுத்தமும், பெண்கள் அடிமையிலும் கீழான நிலையில் வாழும் நிலையை அரசு உணர்ந்ததாலும் அதுவரையிலும், மதத்தில் மற்றும் பரம்பரை பழக்க வழக்கங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்தக் காலனிய அரசு, அவைகளை ஒதுக்கி வைத்து விட்டு உயிர் காற்றுக்கான சாளரக் கதவுகளைத் திறந்து விட்டது.சதிக்கு நெருப்பு வைத்தது. குழந்தைத் திருமணத்தைத் தடுத்தது.

விதவை மறுமணத்துக்கான பாதைப் போட்டது.. இவ்வாறாக. சமூக மறுமலர்ச்சி துளிர் விடுவதைக் கண்ட வைதீகப் பார்ப்பனர்கள் இந்து மதத்துக்கு ஆபத்து என்று இன்று போலவே அன்றும் எதிர்த்தனர்.

மக்கள் தொகையில் 5 விழுக்காடு கூட இல்லாத ஒரு சிறிய இனம் தனது நலன் பாதிக்கப்படும் போதும், தனதுஅதிகாரமும், மேலாண்மையும், பண்பாடும் கேள்விக்-குள்ளாக்கப்படும் போதும், இந்து மதத்துக்கு ஆபத்து என்று திசைத் திருப்பி பொதுப் பிரச்சனையாக மாற்றி தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பலநூறு ஆண்டு கால யுக்தியை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தினர். 1872 ஆம் ஆண்டின் பழைய மசோதா திருத்தம் செய்ய 1923 ஆம் ஆண்டு டாக்டர் கவுர் முயன்ற போதும், குழந்தை திருமணத் தடுப்பு மசோதாவை “திரு.சாரதா” 1929 ஆம் ஆண்டு கொண்டு வந்தபோதும், தேவதாசி முறை ஒழிப்புத் தீர்மானத்தை முத்துலட்சுமி ரெட்டி முன் மொழிந்த போதும், வைதீகப் பார்ப்பனர்கள் மூளையில் மதத் தலையீடாகத் தோன்றியது.எந்த சிறு மாறுதலையும் இந்து மதத்துக்கும் இந்துக் கலாச்சாரத்துக்கு ஆபத்து என்றே அலறினர்.மாறும் என்ற விதிக்கு எதிராக சனாதனத்தை நிறுத்தினர். அறிவியலை வேதம் கொண்டு தடுத்தனர்.

அவர்களது எதிர்ப்பைக் கண்டு கொள்ளாமல் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல சீர்திருத்தச் சட்டங்களை காலனிய அரசு அரங்கேற்றியது. தனது கடைசி காலத்தில் பெண்களுக்கு காலம்காலமாக மறுக்கப்பட்டு வந்த சில உரிமைகளை வழங்குவதற்காக ஏற்கனவே நடைமுறையில், மாகாணத்துக்குக் மாகாணம், சாதிக்குச் சாதி வேறுபட்டு. ஒழுங்கற்றுத் துண்டுத் துண்டாகச் சிதறிக் கிடந்த இந்து தனி நபர் சட்டம் மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களை நவீன காலத்தின் வளர்ச்சிக்கும், சமூகத்தின் தேவைக்கும் ஏற்ற வகையில் சீர்திருத்தி அவைகளை ஒரு பொதுச் சட்டத்திற்குள், ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டுவர முயன்றது.

இரண்டாம் உலகப் போர் உச்சத்தில் இருந்த அந்த நிலையிலும், 1941-ஜனவரியில் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி B.N.ராவ் தலைமையில், நான்கு பேர் கொண்ட குழுவை அமைத்தது.அந்தக் குழு.1941 ஜூன் 19 அன்று தனது முதல் வரைவு அறிக்கையையும். 1942-1943 ஆண்டில் வாரிசு உரிமை மற்றும் திருமணம் குறித்த மசோதாக்களையும் வழங்கியது. அந்த மசோதாக்கள் இரு அவைகளின் கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அதிலுள்ள சில சிக்கலான அம்சங்களை ஆராய ஜனவரி 20, 1944 இல் B.N.ராவ் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவாகப் புதுப்பிக்கப்பட்டவுடன் அது. பம்பாய், பூனா, டெல்லி, அலகாபாத், சென்னை, நாக்பூர், லாகூர் உட்பட இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்தது. மக்களிடமும் 100க்கும் மேற்பட்ட அமைப்புகளையும் சந்தித்து கருத்துகளைத் திரட்டியது.திரட்டியவைகளைத் தொகுத்து இந்து சட்ட வரைவு மசோதாவாக்கி(இந்து குறியீட்டு மசோதா -Hindu Code Bill) ஆகஸ்ட் 1, 1946-இல் இடைக் கால அரசாங்கத்தின் அரசிலமைப்புப் பேரவையில் முன்வைத்தது.1 அது. அன்றைக்கு சட்ட அமைச்சராக இருந்த ஜோகேந்திர நாத் மண்டலால் (பிரிவினைக்குப் பின் அவர் கிழக்கு பாகிஸ்தானுக்கு குடி பெயர்ந்தார்.சில ஆண்டுகளில் மீண்டும் இந்தியாவில் குடியேறினார்.) சபையில் ஏப்ரல் 11, 1947 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த வரைவு மசோதா பல்வேறு காரணங்களால் செயல்படவில்லை.

## அம்பேத்கரின் வருகை

இந்த நிலையில் அம்பேத்கரின் வருகை புதிய பூபாளமானது. பழைய வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில், தொழிலாளர் நலத் துறை மற்றும், மத்தியப் பொதுப்பணித் துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுபவமும், ஆற்றலும், கல்விப் புலமையும் உள்ள

டாக்டர் அம்பேத்கர் ஆகஸ்ட் 29,1947 இல் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரைவுக் குழுவின் தலைவராகவும் நேருவின் இடைக்கால அமைச்சரவையில் பொறுப்பேற்றார்.பொறுப்பேற்றபின் பல்வேறு பணிகளுக்கிடையிலும் ஏப்ரல் 9, 1948-இல் ஒரு வருட காலமாக பரணில் தூங்கிக் கொண்டிருந்த இந்து சட்ட வரைவு மசோதாவை தூசி தட்டி அரசியல் அமைப்பு சபையில் முன்வைக்க, அதை ஆராய்ந்து அறிக்கை தாக்கல் செய்யும் ஆய்வுக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

இது ஒரு நல் வாய்ப்பாக அம்பேத்கருக்கு அமைந்தது.மற்ற எதைக் காட்டிலும் இந்து சட்டத்தொகுப்பை அம்பேத்கர் ஈடு இணையற்றதாகவும், கடந்த காலத்தில் இந்திய சட்டப்பேரைவையில் இயற்றப்பட்ட எந்த சட்டமும், இனி நிறைவேற்றப்படவிருக்கும் எந்த சட்டமும் முக்கியத்துவத்தில் இதற்கு இணையாக முடியாது என்று கருதினார். எனவே அரசியல் சட்ட அமைப்புக்கு கொடுத்த அதே உழைப்பையும் ஆர்வத்தையும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவுக்கும் கொடுத்தார்.இந்து சட்டத் தொகுப்பு மசோதா மூலம் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் சம உரிமையை எப்படியாவது நிலை நாட்டிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். நடைமுறையில் இருந்த சொத்துரிமை, திருமணம், மணவிலகல் போன்றவற்றில் சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் மாறுதல்களைச் செய்தார்.

சாதி மறுப்புத் திருமணங்களை அங்கீகரிப்பது, தத்தெடுப்பில் சாதியை ஒழிப்பது, மறுமணம், விதவைத் திருமணம் ஆகியவைகளில் நிலவும், சாதியின் எல்லைகளை அழித்து இந்து அமைப்பில் சிதிலமாகி விட்டப் பாகங்களை இந்து சட்டத் தொகுப்பின் மூலம் செப்பனிட முயன்றார். மொத்தத்தில் இந்து மரபு வழிச் சிந்தனையிலிருந்து தீவிரமான விலகலுக்கானப் பாதையை அமைத்து விட இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பயன்படுத்த விரும்பினார்.அதற்காக வரைவு மசோதாவை ஒரு தேர்ந்த சிற்பியைப் போல பார்த்துப் பார்த்து செதுக்கினார்.

ராவ் குழுவால் முன்மொழியப்பட்ட இந்துக் குறியீடு மசோதா ஒரு சிவில் குறியீட்டை நோக்கமாகக் கொண்டிருந்தது.அதை முழுமையாக, ஒரு சட்டத் தொகுப்பின் லட்சணங்களுக்கு ஏற்றதாக மாற்றினார். மூல மசோதாவின் பாகங்களையும், பிரிவுகளையும் தர்க்கரீதியான வரிசைக்கிரமமாகவும், வரம்புக்கு உட்பட்ட சில திருத்தங்கள், மாற்றங்களோடு மறு சீரமைத்து, ஒரு முழுமையான சித்திரமாக்கினார். இந்து சட்ட தொகுப்பு மசோதா என்ற பெயரில் இருப்பினும், அது சீக்கியர்கள், பவுத்தர்கள், ஜைனர்கள் ஆகியோருக்கும் அனைத்து சாதி மற்றும் உட்பிரிவுகளுக்கும் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட அறிக்கையை ஆகஸ்ட் 12 1948 அன்று அம்பேத்கர் சபையில் முன்மொழிந்தார்.

இந்து சட்டத்தொகுப்பு (Hindu Code bill) -இந்துக் குறீட்டு மசோதா) வரைவு மசோதாவை சட்டமாக்குவதில் அம்பேத்கரின் முயற்சிகளுக்கு நவீன இந்தியாவை உருவாக்கும் கனவில் இருந்த பிரதமர் ஜவகர்லால் நேரு உறுதுணையாக இருந்தார். அதே வேளையில் அம்பேத்கரின் பார்வைக்கும் ஜவகர்லால் நேருவின் பார்வைக்கும் ஒரு நுண்ணிய வேறுபாடு இருந்தது.இந்து சமூகத்தை ஒன்றிணைப்பதில் நேரு ஆர்வமாக இருந்தார். இந்து சமூகத்திலுள்ள வேறு பாடுகளைத் துடைத்து, இந்துக்களுக்குள் ஒரு சமூக ஒற்றுமையை உருவாக்கி, இந்திய தேசிய அடையாளமாக இந்து சமூகத்தை நிறுவதற்கானப் பாதையில் இது ஒரு தொடக்கமாக இருக்கும் என்ற பார்வை நேருவிடம் இருந்தது.இதில் அம்பேத்கர் நேரு ஆகிய இருவரின் பார்வையும் வேறு வேறாக இருந்தாலும் இந்த நாட்டில் உள்ள சட்டங்கள் மற்றும் மரபுகள் பெண்களை அடக்கி வைத்து அவர்களது எழுச்சியைத் தடுக்கின்றன என்பதில் இருவரது பார்வையும் ஒன்றாகவே இருந்தது. ஆண் பெண் ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்பதிலும், பெண்களின் முன்னேற்றத்தைக் கொண்டே சமூக முனேற்றத்தை அளவிட முடியும் என்பதிலும் ஒன்றுபட்டனர். அம்பேத்கரின் சில கோட்பாடுகளும் கொள்கைகைகளும் ஜவஹர்லால் நேருவின் சிந்தனைகளோடு வேறுபட்டிருந்தாலும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பொறுத்த வரையில் இருவரும் ஒரே புள்ளியில் இணைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்து சட்டத் தொகுப்பு (Hindu code Law) மசோதா முன்வைத்த முக்கிய அம்சங்கள்

1948 ஏப்ரல் அரசியலமைப்பு சபையில் முன்வைக்கப்பட்ட இந்து சட்டத் தொகுப்பு மசோதாவானது பெண்களின் நிலைக் குறித்த அம்பேத்கரின் அக்கறையை முழுமையாகப் பிரதிபலித்தது.

திருமணம், தத்தெடுப்பது, காப்புரிமை, கூட்டுக் குடும்பச் சொத்து, மகளிர் சொத்து, உயில் எழுதா வாரிசுரிமை, உயில் வழி வாரிசு உரிமை, ஜீவனாம்சம், மரபுரிமை, ஆகியவை சம்பந்தமாக இந்து சட்டத்தை

முறைப்படுத்தி இருந்தார்.. மண வாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டளிப்பது மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின்படி கணவன்-மனைவி பிரிந்து வாழ்வது சம்பந்தமான இரு பிரிவுகளைச் சேர்த்தளித்தார்.. விதவைகள், மற்றும் விவாகரத்து பெற்றவர்கள் மறுமணம் செய்யும் உரிமையை அங்கீகரித்தது. மற்றும் ஊக்குவிக்கப் பட்டது. சாதிகளைக் கடந்த திருமணம் (கலப்பு மணம்)அனுமதிக்கப்பட்டது. திருமணம், மற்றும்மணவிலக்கு ஆகியவைகளுக்கு விரிந்த அளவிலான சுதந்திரமும், நெகிழ்வும் உறுதி செய்யப்பட்டது.திருமணத்தில் சாதி குறிப்பிடுவதைத் தடுத்தது.ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் கூடாது என்றத் தடையை நீக்கியது. வாரிசுரிமையைப் பொறுத்த வரை ஆண் பெண்ணுக்கு இடையிலான ஆறு பாரபட்சங்களை ரத்து செய்தது. பழைய முறையில் தந்தையின் சொத்து மகளை விட, மனைவியை விட மகனுக்கு அதிகமாகக் கிடைத்தது. அந்த நிலையை புதிய மசோதா மாற்றியது. பெண்ணையும் வாரிசாக்கி முழு உரிமையுடன் சொத்தை அனுபவிக்கும் உரிமையை உருவாக்கியது. ஒரு தந்தையின் சொத்தில் மகனுக்கு கொடுக்கும் பங்கு அளவுக்கு மகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும், தாயின் சொத்தில் மகளுக்கு அளிக்கப்படும் பங்கின் அளவுக்கு மகனுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறியது. ஸ்மிருதிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சுவிகார முறையில் மாற்றம் கொண்டு வந்தது. கொஞ்சம் விளக்கமாகக் கூற வேண்டுமென்றால்

- “ஓர் ஆண் இறந்தால் அவரது ஆண் வாரிசுகளுக்கு மட்டுமே சொத்தில் பங்குண்டு என்ற நிலையை மாற்றி அவரது விதவை மனைவிக்கும், பெண் வாரிசுகளுக்கும் கூட சொத்தில் பங்குண்டு என்று வரையறுத்தது.
- அதே போல இறந்து போன ஒரு பெண்ணின் சொத்து அவரது விருப்படி எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் யாருக்கு வேண்டுமானாலும் போய்ச் சேரலாம்.ஒரு பெண் எந்தச் சொத்தைப் பெற்றாலும் (சீதனம் உட்பட.) அது அவளின் முழுமையான சொத்தாகும்.பெண் என்பதற்காக மட்டும் எந்த நிபந்தனைகளையும் விதிக்க முடியாது.
- மதரீதியாக ஒரு திருமணத்தைப் புனிதப்படுத்த சாதி அதை சார்ந்த உட்சாதி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட விதிகளை ஒழித்தல். சாதி வேறுபாடுகளைக் கருதாமல் நடைபெறும் திருமணங்களில் யாராவது ஒருவரது இன முறைப்படியும், சட்ட ரீதியாகவும், நடைபெறுகிற கலப்புத் திருமணங்கள் இப்போது ஏற்புடையதாகக் கொள்ளப்படும்.
- கணவன் கொடுமைக்காரனாக, அல்லது தீராத வியாதிக்காரனாக இருந்தாலோ அல்லது வைப்பாட்டி வைத்திருந்தாலோ பெண் பிரிந்து தனியாக வாழ உரிமையுண்டு.அந்த நிலையில் கணவன் அவளுக்கு ஜீவனாம்சம் தர வேண்டும்.
- கணவன் மனைவி இருவருள் எவரையும் கொடுமையாக நடத்துதல், நம்பிக்கைத் துரோகம், தீராத வியாதி, முதலியவற்றில் ஏதேனும் ஒரு காரணத்தால் மணவிலக்குக் கோரிப் பெறலாம்
- ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரண்டுவிதமான ஒழுக்க முறைகள் இருக்கக் கூடாது.(கற்பென்று சொல்ல வந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்.) என்பதை வலியுறுத்தும் விதமாக ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற முறையில் ஒருதார மணம் கட்டாயமாக்கப்படும்.
- எந்த சாதியில் இருந்தும் தத்தெடுத்துக் கொள்ளலாம். (வாரிசு உரிமை பெறுபவர் ஆண் முன்னோர் வழி வந்தவராக இருக்க வேண்டும் என்ற பிரிவும் நீக்கப்பட்டது.)”[2]

நீண்ட நெடுங்காலமாக, வேதங்கள், ஸ்மிருதிகள், சாஸ்திரங்களின் மரபு வழிச் சட்டங்களால் இறுகக் கட்டப்பட்டு இருளில் சுருண்டுக் கிடந்த இந்திய பெண்களின் கால் விலங்குகளின் கண்ணிகளை இந்து சட்டத் தொகுப்பு மசோதா உடைக்க முயன்றது.

## ஆதரவும் எதிர்ப்பும்

ஆகஸ்ட் 12, 1948 இல் அம்பேத்கரால் அரசியல் அமைப்பு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு மசோதாவை, ஆகஸ்ட் 31,1948 இல் டாக்டர் அம்பேத்கர் பரிசீலனைக்கு, ஏற்றுக்கொள்ளுவதற்கான ஒரு

தீர்மானத்தை அரசியல் சபையில் முன்மொழிந்த அந்த நாளில் இருந்ததே இந்து சட்டத் தொகுப்பு மசோதாவுக்கான எதிர்ப்பும் ஆதரவும் அவைக்குள் சூட்டைக் கிளப்பியது. இந்து சட்டத் தொகுப்பு மசோதா. "இந்து சட்டங்கள், இந்து கலாச்சாரம், இந்து தர்மத்தின் மீது வீசப்பட்டுள்ள அணுக்குண்டு என்று கூறிய ஆர்.எஸ்.எஸ், இந்து மகாசபா, பிற வைதீக பார்ப்பன அமைப்புகள் அதைக் கருவிலேயே கலைத்து விடத் துடித்தனர். உலகம் ஆரம்பம் ஆனது முதல் இருந்து வரும் விதிகளை மாற்றுவதற்கு ராஜாவுக்கே அதிகாரம் இல்லாத போது இவர்களுக்கு ஏது அதிகாரம்? யார் கொடுத்தது.? என்று கேள்விக் குண்டுகளை வீசினர்.ரௌலட் சட்டத்தோடு ஒப்பிட்டு பேசினர்.

பல ஜென்மங்களுக்கு தொடர்ந்து வரும் திருமணம் புனிதமானது. மணவிலக்கு தந்தால் பெண்கள் பதிவிரதைகளாக இருந்து வரும் பாரத மரபு அழிந்து விடும், அவளுக்குச் சொத்துரிமை கொடுத்தால் இஷ்டப்பட்டவாக் கூட ஓடி விடுவா கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை சிதைந்து விடும் என்று கவலைப்பட்டனர்.

காஞ்சி சங்கராச்சாரி ஸ்திரிகளுக்கு பாத்யமோ சம்பாத்தியமோ இருக்கக் கூடாதுன்னு மனு ஸ்மிருதி சொல்லியிருக்கு.ஆம்படையானுக்கு அடிமையாக இருக்கிறது தான் ஸ்த்ரீக்கு அழகு.அவாளுக்கு சொத்தில் பங்கு கொடுத்தா இஷ்டப்பட்டவா கூட ஓடிப் போய்டுவா. அப்பட்டமா, அபச்சாரமா போயிடும் என்றார்.

சனாதனவாதிகள் இந்து தனிநபர் சட்டத்தை திருத்தாதே. அது இந்து மதத்துக்கு ஆபத்து என்று கூக்குரலிட்டுக் கொண்டிருக்கையில், பெரியார் விடுதலை (06-02-1951) நாளிதழின் தலையங்கத்தில். "எந்த சிறு மாறுதலையும் வைதீகம் எதிர்த்துக் கொண்டுதான் இருக்கும்.முன்பு மதத்துக்கு ஆபத்து என்ற கூக்குரலை எழுப்பி எதிர்த்து வந்தது. இப்போது இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று கூக்குரலை எழுப்பிக் கொண்டிருக்கிறது. "ஹிந்து லா (சட்டம்) என்பது ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் மனுதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டதாகும்.இதில் எவ்வளவோ முரண்பாடுகளும் அநீதிகளும் இருக்கின்றன என்பதை பற்றிக் கூறாத வழக்கறிஞரோ நீதிபதியோ கிடையாது.இந்த சட்டத்தை திருத்தினால் கூட போதாது தலைகீழாக மாற்றியமைக்க வேண்டும்."[3] என்று எழுதினார்.

சமூக சீர்திருத்தவாதிகளும், இடதுசாரிகளம், பெண்ணியல்வாதிகளும் "இந்தச் சீர்திருத்தத்தை சமுதாயத்தின் சிதைவு என்று கருதுபவர்கள் சமூக முன்னேற்றத்தின் எதிரிகள்" என்றும் "இந்த மசோதா சட்டப் புத்தகத்தில் ஏறும் போது அது இந்த நாட்டின் சமூக வரலாற்றில், அது ஒரு மாபெரும் மைல் கல்லாக இருக்கும்" என்றும் வாதிட்டனர்.

"சட்டம் என்பது மதத்திலிருந்து வேறுபட்டது. அது ஒரு போதும் மாற்றப்பட்ட முடியாததோ,, இறுகிப் போனதோ அல்ல.குறிப்பிட்ட சமயத்தில் உள்ள மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப அவ்வப்போது சட்டங்கள் மாறியுள்ளன" 5 என்கிற அறிவியல் பூர்வமான வாதங்கள், திருமதி சுவேதா கிருபளாயினி போன்றவர்களால் அவையில் வைக்கப்பட்டன. வர்க்க பேதமற்ற சமுதாயத்தை அமைப்பது என்றால் ஒரு சரியான அமைப்பை சமூக, அரசியல் ரீதியாக உருவாக்கி விரிவுபடுத்த நாம் பாடுபட வேண்டும். மாற்றம் இல்லாத சமுதாயம் மடிந்து விடும் என்றனர்.

கம்யூனிஸ்ட்கள் இந்த வரைவு மசோதாவை சீர்திருத்துக்கான மிக மிதமான, மென்மையான சாதாரண சமூக சீர்திருத்த முயற்சியாகவே கருதினர்., மேலும் தீவிரப்படுத்த வேண்டும். இன்னும் முன்னே சென்று இருக்கலாம் என்கிற குரலும், விவசாய உடைமைகள் விடயத்தில் போதிய அளவுக்கு சலுகைகள் பெண்களுக்கு வழங்கப்படவில்லை என்கிற கருத்தும் சீர்திருத்தவாதிகள், பெண்ணியல்வாதிகள் மத்தியிலிருந்து எழுந்தன.

மதசார்பற்ற அரசு என்று அழைத்துக் கொள்ள விரும்புகின்ற ஒரு ஆட்சியில் ஒரு தனி மதத்துக்காரர்களுக்கு மட்டும் பயன்படக் கூடிய மசோதா கொண்டு வருவது எவ்வாறு பொருத்தமாகும் என்கிற கேள்வியையும் அவர்கள் எழுப்பத் தவறவில்லை.பெரியாரும் அதே கேள்வியை முன் வைத்தார். அனைவருக்குமான பொது சிவில் சட்டம் உருவாக்குவதில் நேருவுக்கும் அம்பேத்கருக்கும் விருப்பம் இருந்தாலும் அதற்கான காலம் இன்னும் கனியவில்லை.விரைவில் அந்த நாள் வரும் என்று கூறினர்.

அவைக்குள் நடந்த விவாதங்களில் பத்மஜாநாயூடு, சுவேதா கிருபளாயினி, ஹஸ்க மேத்தா, அம்மு சுவாமிநாதன், தஷனாயி வேலாயுதன் பேகம் அசிசா ரசூல் போன்ற பெண்மணிகளின் வலுவான குரல்களும் மகளிர் அமைப்புகளும் அம்பேத்கருக்கு அரணாக நின்றன.

இதில் காங்கிரஸ் கட்சியின் நிலைதான் பரிதாபத்துக்குரியதாக இருந்தது.மசோதாவை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதில் காங்கிரஸ் கட்சி இரு அணிகளாகப் பிரிந்து மோதிக் கொண்டன. இந்திய அரசியல் சட்டக் குழுவின் தலைவரும், ஜனாதிபதியுமான டாக்டர் இராஜேந்திரபிரசாத் ” புதியக் கருத்து மற்றும் புதிய யோசனைகள் இந்து சட்டத்திற்கு அந்நியமானவை மட்டுமல்ல, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இடையூறு விளைவிக்கும்” என்று குறிப்பிட்டவர் அதன் முதல் எதிர்ப்பாளராக மாறினார்.அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. ஏனெனில் அவர் ஒரு மத மயக்கம் கொண்ட மனிதராகவே இருந்தார் என்பதற்கு பல சான்றுகள் உண்டு.அதனால் தான் 1948 ஜூனில் ஆய்வுக்கு குழு அமைக்கப்பட்ட உடனேயே டாக்டர் இராஜேந்திரப்பிரசாத் மசோதவை விலக்கிக் கொள்ளுமாறு நேருவை பலமுறைக் கேட்டுக் கொண்டார்.

காங்கிரசின் தூண்கள் பலவும் நேருவிடம் இருந்து விலகி நின்றன.மக்கள் நாயகனாக பிரதமர் நேரு இருந்தாலும் கட்சிக்குள் பட்டேல் மற்றும் இராஜேந்திரப்பிரசாத்தின் கைகளே ஓங்கியிருந்தன என்பதை அகில இந்திய காங்கிரஸ் தலைவராக பட்டேலின் ஆதரவாளரான புருசோத்மம் தாஸ் தாண்டன் தேர்வு உறுதிப்படுத்தியது.ஜவகர்லால் நேருவுக்கு நெருக்கமான தலைவராக அறியப்பட்ட சரோஜினி நாயுடு இந்த மசோதா திரும்பப் பெறா விட்டால் சாகும் வரை உண்ணா நோன்பு இருக்கப் போவதாக மிரட்டினார்.நேருவின் சீடராகக் கருதப்பட்ட தமிழத்தை சேர்ந்த ஓ.வி. அளகேசன் விவாக ரத்துக்கான உரிமை அளிப்பது இனிமையான விஷயமல்ல.விவாகரத்து ஆண்களை விட பெண்களுக்கு பெரும் நரகமாகி விடும். விவாகரத்தினால் பாரிஸ், மற்றும் சோவியத் ரஸ்யாவில் குடும்ப அமைப்பு உடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டி மசோதாவுக்கு எதிராக நின்றார். 6 இந்து சட்டம் போன்றவற்றை மதக் குருக்களிடம் விட்டு விடும்படியும், சமூக சீர்திருத்தம் என்ற மாயையில் விழ வேண்டாம் என்றும் காங்கிரஸ் கட்சியின் ஒரு பகுதியினர் அரசை கேட்டுக் கொண்டனர். -

அன்றைய காங்கிரசில் கோவிந்வல்லப பந்த், புஷோத்தம் தாஸ் தாண்டன், லால்பகதூர் சாஸ்திரி, வல்லபாய் பட்டேல், ஷியாம் பிரசாத் முகர்ஜி (பின்னாளில் பாரதீய ஜன சங்கத்தை தோற்றுவித்தவர்.), மாளவியா பட்டாபி சீதாராமையா, கே.எம்.முனிஷி போன்ற பலரின் சிந்தனைகளையும் இதயங்களையும் மதவாதம் ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. அவர்களில் சிலர் ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபாவின் ஸ்லீப்பர் செல்களாக இருந்தனர். மதவாத உணர்வின் அடிப்படையில் மதத்தையும் அரசியலையும் இணைக்கும் மோசமான ஆபத்தான முயற்சியில் அவர்களில் பலரும் ஈடுபட்டனர். காங்கிரஸ் கட்சி என்பது ஒரு அவியலாக அல்லது கதம்பமாக அல்லது ஒரு விசித்திர கூட்டாளிகளின் கூட்டணியாக இருந்தது.இந்த வேறுபாடுகள் தான் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் அவை விவாதங்களில் காங்கிரஸ் கட்சி என்பது ஒன்றல்ல அது இரண்டானது என அடையாளம் காட்டியது. காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் அம்பேத்கருக்கும் பல விடயங்களில் கருத்து வேறுபாடுகள் எழவும், அவர்களோடு ஒட்ட முடியாமல் போனதற்கும் இவைகளே காரணங்களாக அமைந்தன.

இந்து சட்டத் தொகுப்பு வரைவு மசோதா போல் கூடுதல் பரபரப்பையும், சர்ச்சையையும்,, கிளர்ச்சிகளையும் அரசியல் அமைப்பு சபைக்கு உள்ளேயும், வெளியிலும் தோற்றுவித்தது இல்லை. இந்து மதத்துக்கு ஆபத்து என்ற வாதம் தான் எல்லா பிரச்சனைக்கும் மூல காரணமாக சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் இந்து சட்டத் தொகுப்பு மசோதா இந்து மதத்தின் அடிப்படையின் மீது எந்த ஒரு தாக்குதலையும் தொடுக்கவில்லை.அதாவது புரட்சி எதையும் செய்யவில்லை.இந்து சிவில் சட்டத்தை திருத்துவதற்கும், மாற்றியமைப்பதற்குமே அவை முயன்றன.

“இந்து மசோதாவின் பெரும்பாலான ஷரத்துக்கள் அனுசரித்துப் போகின்ற அல்லது உதவுகிற தன்மை உடையது.சமுதாயத்தில் வைதீகமான பகுதியின் மீது எத்தகைய கட்டாயத்தையும்

அல்லது கடப்பாட்டையும் திணிக்கவில்லை. அதனுடைய ஒரே பயன் இந்துக்களின் ஆண்களும் பெண்களும் அவர்கள் விரும்பும் வாழ்க்கையை வாழ்வதற்கான சுதந்திரத்தை அளிப்பதே.என்று அம்பேத்கர் அவையில் தெளிவுபடுத்தினார்.மேலும் அது. ''புதியதற்கும், பழையதற்கும் இடையில் ஒரு வகையான சமரசத்துக்கு வருவதற்கு இந்த மசோதா முயன்றுள்ளது என்றார்[7].

அதே சமயம் இருப்பதைப் பாதுகாக்க விரும்புபவர்கள் அதை பழுது பார்த்து சரி செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும்.இந்து அமைப்பு, இந்து கலாச்சாரம், இந்து சமுதாயம் ஆகியவற்றை நீங்கள் நிலை நிறுத்த விரும்பினால் பழுது பார்ப்பது எங்கு அவசியமோ அங்கு பழுதுப் பார்ப்பதற்கு நீங்கள் தயங்கக் கூடாது.இந்த மசோதா பழுதுப் பார்க்கும் பணியைத் தான் செய்துள்ளது என்றார்.

அம்பேத்கர் இவ்வாறாக பல முறை தெளிவான விளக்கம் அளித்த போதும் மதத்தில் சாத்திர சடங்குகளில் மூழ்கிக் கிடந்த பிற்போக்குவாதிகளின், சனாதனவாதிகளின் காதுகளில் அவைகள் ஏறவே இல்லை.

அவர்கள் மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தனர். அதற்காக எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருந்தனர். மசோதாவைத் திரும்ப பெறவேண்டும் என்பதற்காகவே அகில இந்திய இந்து சட்டத் தொகுப்பு எதிர்ப்புக் குழுவை கர்பத்ரிஜி மகாராஜ் என்ற சாமியார் 1949 இல் தொடங்கினார்.இவர் சங்கராச்சாரிகளைப் போன்று "தண்டம்"வைத்திருக்கும் சிறப்பு பெற்றவர். நான்கு சங்கராச்சாரிகளை தேர்வு செய்யும் இடத்தில் இருந்தார் என்பதிலிருந்து அவரது அதிகாரத்தைப் புரிந்து கொள்ளலாம்.அவர் 1948 இல் ராமராஜ்ய பரிஷத் என்ற ஒரு கட்சியைத் தொடங்கி அரசியலை நோக்கித் திரும்பினார். அவரை துவாரகா சங்கராச்சாரி உட்பட செல்வாக்கு மிக்க சங்கராச்சாரிகள் பலரும் ஆதரித்தனர்.

பாரத் மண்டல் இந்து மகாசபா, அகில பாரதிய வர்ணாசிரம சங்கம், அகிலபாரத தர்ம சங்கம், சனாதன வேத தர்ம சபை, அகில இந்திய வர்ணாசிரமம் ஸ்வராஜ்ய சங், சமணர் கூட்டமைப்பு, இந்துமகா சபா, ஆர்.எஸ்.எஸ். ஆகியவைகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேவும் ஆர்ப்பாட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டன. இந்த மதவாதக் கூட்டமைப்பு நூற்றுக்கணக்கான கூட்டங்களை நாடெங்கும் நடத்தியது. இதை ஒரு தர்ம யுத்தமாகவும், இயக்கத்தில் பங்கேற்றவர்களைத் தர்ம வீரர்களாகவும் காட்டிக் கொண்டது.

ஆர்.எஸ்.எஸ்.ன் "ஆர்க்கணைசர்" இதழும், சுவாமி கர்பத்ரிஜி மகாராஜின் "சன்மார்க்கமும்" நச்சுக் கருத்துக்களை உமிழ்ந்தன. சனாதனம் கொழுப்பேறிய இந்து மகாசபாவின் மூத்த உறுப்பினரானப் போத்தாரின் கல்யாண் இதழும்" இந்தச் சட்டம் வழங்கும் சலுகையால் தாழ்த்தப்பட்ட சாதியினர் திருமண உறவுகள் வழியாக உயர் சாதியினரின் இல்லங்களுக்குச் செல்லும் உரிமையைப் பெற்று விடுவார்கள்.அது தடுக்கப்பட வேண்டும் என்றும், கலப்பு மணத்தால் வீட்டின் ஒரு மூலையில் பகவான் வழிபாடு நடைபெறும்.மற்றொரு பக்கம் குரான் ஓதப்பட்டு மாட்டிறைச்சி சமைக்கப்படும்.என்றும் இது போன்ற ஒரு சட்டத்தை எந்த இந்துவால் ஏற்றுக்கொள்ள முடியும்"?[9] என்ற பிரச்சாரத்தை மக்களிடையேப் பரவவிட்டது.மசோதாவுக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடந்தது. இந்துத்துவா ஆதரவு இதழ்கள் பலவும் தனது வாசகர்களை இந்து சட்ட மசோதாவுக்கு எதிராகக் கிளர்ச்சியில் எடுபடத் தூண்டியது. மசோதாவுக்கு ஆதரவாக நின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மிரட்டல்களும், தந்தியும், சுற்றறிக்கைகளும் பறந்தன.

அம்பேத்கரின் மீதுள்ள சாதியின் வன்மத்தை வைதீகப் பார்ப்பனர்கள் பல வகையிலும் வெளிப் படுத்தினர். "அம்பேத்கர் அறிமுகப்படுத்தியுள்ள இந்து சட்ட மசோதா, இந்து தர்மத்தை அழிப்பதற்கான அவரது சதித் திட்டத்தின் ஒரு முக்கியமான பகுதி என்பது இப்பொழுது உறுதியாகி உள்ளது. அவரைப் போன்ற ஒரு மனிதர் இந்துக்களின் சட்ட அமைச்சராக இருப்பது அவர்களை இழிவு படுத்துவதாகவும், நாணமுறச் செய்வதாகவும் இருப்பதோடு இந்து தர்மத்தில் கரும்புள்ளியாகவும் உள்ளது.9 என்று போத்தார், கல்யாண் இதழில் அம்பேத்கர் மீது வெறுப்பை உமிழ்ந்தார்

பார்ப்பனியவாதிகள் அத்தனை பேருக்கும் அம்பேத்கரின் சாதி பெரும் பிரச்சனையாக இருந்தது. வேத மந்திரங்களைக் கேட்டாலே ஈயத்தைக்

காய்ச்சி காதில் ஊற்றிய பழைய வேத கால நினைவுகள் வந்து அவர்களை வறுத்தெடுத்தது. ”பிராமணர்கள் மட்டுமே உருவாக்கக் கூடிய விதி முறைகளை தீண்டத்தகாதவனாக இருக்கும் ஒருவன் மாற்றுகின்றானே என்று நெருப்பில் இட்ட புழுபோல் சாமியார் கர்பத்ரிஜி போன்றவர்கள் துடித்தனர்.” 10 அன்றைக்கு இருந்த தலைவர்களில் மிக உயர்ந்த கல்வி கற்றவர் அம்பேத்கர் ஒருவரே. இருந்தால் என்ன சாக்கடையிலிருந்து வரும் கங்கை நீரை சுத்தமானதாகக் கருத முடியாது என்றனர்.இறுதியில் அம்பேத்கர் இந்த

மசோதாவை முன்னெடுத்து செல்லும் வரை அதை நிறைவேற்ற அனுமதிக்க மாட்டோம் என்று மாநாட்டில் வெளிப்படையாக முழங்கித் தீர்த்தனர்.

அம்பேத்கரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும் இந்து சட்ட மசோதாவைத் திரும்பப் பெறவும் 1949 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் டெல்லியில் ஒருவார காலம் மாநாட்டையும் அதற்கு முன்பும் பின்பும் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டங்களையும் சாமியார் கர்பத்ரிஜியும் இந்துத்துவ அமைப்புகளும் நடத்தின. மாநாட்டில் மூத்த இளவரசி தேவாஸ் (மத்திய இந்தியாவில் முன்னாள் சமஸ்தானம்) போன்ற பிரமுகர்கள் உட்பட 15000 பேர் கலந்து கொண்டனர்.ஒரு வாரம் நடந்த அந்த மாநாடு எரிகிற நெருப்பில் பெட்ரோல் ஊற்றியது.

1951 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நாடாளு மன்றத்தில் இந்து சட்ட மசோதா விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற அலுவல் நேரத்திலேயே அம்பேத்கர், நேருவின் உருவப் பொம்மையைக் கொளுத்தியும், பாரூக் அப்துல்லாவின் காரைத் தீயிட்டும் ரகளையில் ஈடுபட்டனர். அம்பேத்கரை பதவியை விட்டு நீக்கு.மசோதாவைத் திரும்ப பெறு என்ற முழக்கத்துடன் கர்பத்ரிஜி மகாராஜின் தலைமையில் தொடர்ந்த பேரணி நாடாளுமன்றத்தை முற்றுகை இட முயன்றதில் ஏற்பட்ட ரகளையில் சாமியார் கர்பத்ரிஜி மகாராஜின் தண்டம் முறிந்தது. புனிதமான தண்டம் முறிந்ததே அன்றைய தலைப்பு செய்தியானது.

ஆர்.எஸ்.எஸ்.இந்துமகா சபா, வைதீகப் பார்ப்பனர்களின் கூட்டமைப்பு இந்து சட்ட மசோதாவுக்கு எதிராக நடத்திய போராட்டங்களைக் கையாள்வதில் அரசு கையாண்ட மென்மையான போக்குக்கு எதிராக தமிழகத்திலிருந்தும் ஒரு குரல் எழுந்தது அது பெரியாரின் குரலாக இருந்தது. மசோதாவுக்கு எதிராக போராடுபவர்களை உள்ளே தூக்கிப் போடு என்றார். “மசோதாவுக்கு எதிராகப் போராடுபவர்களை கிரிமினல் லா அமெண்ட்மென்ட் சட்டத்தின் கீழ் ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்க இந்திய சர்க்காருக்கு தெரியவில்லையா அல்லது துணிவில்லையா என்று கேட்டார்.11. ”.

## அம்பேத்கர் பதவி விலகல்

1948 இல் இந்து சட்டத் தொகுப்பு வரைவு மசோதா அவையில் வைக்கப்பட்டாலும் எந்த முன்னேற்றமும் ஏற்பட்ட வில்லை. 1949 ஆம் ஆண்டு பிப்ரவரி,, மார்ச், ஏப்ரல் மாதங்களில் 8 நாட்களும், டிசம்பர் 19 இல் ஒரு நாளும் என்று மொத்தம் 9 நாட்கள் மசோதா விவாதிக்கப்பட்டும் பயன் எதுவும் விளையவில்லை. ஜனவரி 26, 1950 இல் இந்தியா குடியரசாகியது. குடியரசாக அறிவித்த பின் கூடிய புதிய அரசியல் அமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த பின் நாடாளுமன்றத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு அடி கூட நகராத வரைவு மசோதாவை மீண்டும் பழைய குருடி கதவைத் திறடி என்பதைப் போல அவையில் அறிமுகப் படுத்தப்பட்ட போதும் அந்த ஆண்டு(1950) முழுவதும் வரைவு மசோதா நாடாளுமன்ற அவையின் நிகழ்ச்சி நிரலிலேயே சேர்க்கப்படாமல் கிடந்தது.

எல்லாவற்றையும் கடந்து, பிப்ரவரி 5, 1951 அன்று நாடாளுமன்றத்தின் கடைசி அமர்வில் மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மூன்று நாட்கள் வழக்கம் போல், விவாதங்கள் நடந்தன. சர்க்கரை நோயினால். உடல்நலம் குன்றியிருந்த நிலையிலும் எதிர்க்கட்சிகளின் எல்லா வாதங்களையும் எதிர் கொண்ட. அம்பேத்கர் ஒவ்வொரு கேள்விக்கும் சோர்ந்துவிடாமல் கம்பீரமாக விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் 1951 செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சட்ட மன்றம் முடிவு செய்து வழக்கம் போல் தள்ளி வைத்தது.

இவ்வாறு பல முறை மசோதா தள்ளிவைப்புக்கு உள்ளான போது பெரியார்” இந்திய பார்லிமென்டில்

கொண்டு வரப்பட்டிருக்கும் ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா மிகவும் முக்கியமான ஒன்றாகும்.ஒரு சில வைதீகர்களின் எதிர்ப்புக்காக இந்திய சர்க்கார் இந்த மசோதாவை இவ்வளவு தாமதப்படுத்தியிருப்பது போற்றத்தக்கதல்ல என்றார். (விடுதலை 06-02-1951)

1948-51 ஆண்டுகளில் நடந்த அமர்வுகளில் விவாதம் என்ற பெயரில் மதிப்பு மிகுந்த நேரங்கள், சனாதனவாதிகளால் திட்டமிட்டே வீணாக்கப்பட்டன. ஒழுங்குப்பிரச்னைஎழுப்பியும்,ஒழுங்குப்பிரச்சனையின் மீது ஒழுங்குப் பிரச்னை எழுப்பியும், உரிமைப் பிரச்னை எழுப்பியும், தேவையற்றத் தெளிவில்லாத நீண்ட உரை ஆற்றியும் அவையின் வேலை நேரத்தைச் சிதைத்தனர்.கடைசியில் மசோதாவை மற்றொரு ஆய்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரினர். தீர்மானத்துக்கு மேல் தீர்மானமாக கொண்டு வந்து அவையின் நடவடிக்கைகளை முடக்கினர். இவைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்ளமுடியாத அம்பேத்கர் ".மசோதா அவையில் வரும் போதெல்லாம் மசோதாவைக் கிடப்பில் போடத் தீர்மானம் கொண்டு வர உறுப்பினர் யாராவது முன் வருகின்றனர்.இது நிறுத்தப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை வைத்தார்.இவ்வாறான பல்வேறு இழுத்தடிப்புகளால் வரைவு மசோதா(1948-1951 வரை) நின்ற இடத்திலேயே நிலை கொண்ட தேர் போல் நின்றது.

இருப்பினும் ஆகஸ்ட் 1951 முதல் வாரத்தில் இந்து கோட் மசோதா நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை நிலவி வந்த சூழலை குடியரசுத் தலைவரின் நிலைப்பாடுப் பின்னோக்கித் தள்ளியது. அதே நாடாளுமன்ற அமர்வில் மசோதாவை ஆதரித்து உரையாற்றிய குடியரசுத் தலைவர் இராஜேந்திரப்பிரசாத்

*"இந்த அமர்வில் இந்த சட்ட மசோதாவை நிறைவேற்றுவது என்ற குறிப்பை கைவிடுமாறும் நேரடி பொதுத் தேர்தல் மூலம் இப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் இங்கு வந்த பின்னர் மசோதா விஷத்தில் முடிவு எடுக்கலாம். அதையும் மீறி மசோதாவை அவை நிறைவேற்றினாலும் கையெழுத்திட மாட்டேன் "(தமிழ் நாடு ஆளுநருக்கு முன்னோடி)என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார்.12*

ஜனாதிபதியின் கடிதம் ஒரு எச்சரிக்கையாகவே இருந்தது. மசோதாவைத் திரும்பப் பெறத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்தால் பிரதமர் பதவியிலிருந்து விலகி விடுவதாக நேரு கூறியதோடு ஜனாதிபதியின் அதிகார எல்லை எதுவரை என்பதை சட்ட அறிஞர் அல்லாடி கிருஷ்ண சாமி ஐயங்கார் போன்றவர்கள் மூலம் குடியரசுத் தலைவருக்கு பிரதமர் நேரு கொண்டு சேர்த்தார். மந்திரி சபையின் ஆலோசனை மற்றும் உதவியுடன் செயல்படவே ஜனாதிபதி கடமைப்பட்டிருக்கிறார் என்பதை அரசியல் சட்ட விதிகளைக் காட்டிஅப்போதைய அட்டர்னி ஜெனெரலாக இருந்த எம்.சி. செடல்வாட் ஜனாதிபதிக்குப் புரியவைத்தார்.இருப்பினும் குடியரசுத் தலைவருடன் மோதல் போக்கை வளர்த்துக் கொள்ள பிரதமர் நேரு விரும்பவில்லை.

இதற்கிடையில் ஆகஸ்ட் 10 1951 அன்று அம்பேத்கர் தனது உடல்நிலை மோசமாகி வருவதாகவும் எனவே இந்த மசோதாவை விரைவில் நிறைவேற்றிட வேண்டுமென நேருவுக்கு கடிதம் மூலம் கேட்டுக் கொண்டார்.அன்றே நேரு பதில் எழுதினார்

### கடிதத்தின் ஒரு பகுதி...

*"இந்து சட்டத் தொகுப்பை பொறுத்தவரை அவையின் உள்ளேயும், வெளியிலும் நமக்கு பலத்த எதிர்ப்பு உள்ளதை அறிவீர்கள்.உலகிலேயே தலை சிறந்த மனஉறுதி இருந்தாலும் கூட எதிர்த் தரப்பைப் புறந்தள்ளி விட்டு எதுவும் சாதித்து விட முடியாது. பெருமளவு முட்டுக்கட்டையிட்டு தாமதப்படுத்த அவர்களுக்கு வலிமை இருக்கிறது. எனவே நாம் சற்று தந்திரத்துடன் இலட்சியத்தை அடையும் நோக்கோடு முன் செல்ல வேண்டும். இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த மசோதா நிறைவேற வேண்டுமென்று நானும் ஆவலோடு உள்ளேன்...*[13]

செப்டம்பர் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் ஒரு சாதகமான நிலை உருவாகும் என்று அம்பேத்கருக்கு நம்பிக்கை ஊட்டிய நேருவால், அமர்வுக்கு முன் அதே மாதத்தில் கூடிய நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட்டத்தில், மசோதாவுக்கு ஆதரவாக பெரும்பான்மையைத் திரட்ட முடியவில்லை. இந்த மசோதா சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ்

கட்சியைப் பாதிக்கும் என புதிதாக ஒரு கருத்தை உருவாக்கிய காங்கிரஸ் உறுப்பினர்களும், மந்திரி சபையும், மசோதாவை தள்ளி வைக்க வற்புறுத்தினர். நேருவுக்கு இவைகள் எல்லாம் கவலை தரும் விடயங்களாக இருந்தன.உட்கட்சியின் உரசலும், விரிசலும், ஜனாதிபதியின் எதிர்ப்பும், இந்துத்துவ அமைப்புகளின் தொடர்ச்சியான போராட்டங்களும் நேருவின் உறுதியைக் குலைக்கத் தொடங்கின.

செப்டம்பர் 17, 1951 அன்று மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனாலும் ஒத்த கருத்து ஏற்படவில்லை.ஓரடி முன்னால் ஈரடி பின்னால் என்ற நிலையே தொடர்ந்தது மசோதா வழுக்கு மரத்தின் உச்சியில் இருந்தது.விவாதம் நடந்து கொண்டிருந்த போது கட்சிக்குள் எடுத்த முடிவின்படி, பிரதமர் நேரு, "காலம் குறுகியதாக உள்ளதால் திருமணம் மற்றும் மணவிலக்கு தொடர்பான ஒரு பகுதியைத் தனிமசோதாவாக்கி நிறைவேற்றலாம் "என்று திடீரென ஒரு புதிய முன்மொழிவை அவையில் வைத்தார். அசல் மசோதாவிலிருந்து விலகி திருத்தப்பட்ட வடிவத்தில் தோகையற்ற மயிலாக இருந்தது. அந்த மசோதா செப்டம்பர் 25 அன்று விவாதத்துக்கு வந்தது. மசோதாவைத் துண்டுத் துண்டாகப் பிரிப்பதில் அம்பேத்கருக்கு உடன்பாடு இல்லை. என்றாலும் அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லை.இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் பல சமரசங்கள் செய்து கொண்டதைப் போலவே இந்து சட்ட மசோதாவிலும் நேரு அரசோடு சமரசம் செய்துகொள்ள வேண்டிய நிலையில் அம்பேத்கர் இருந்தார்.முழுமையையும் இழக்கப்படும் போது ஒரு பகுதியை சேமிப்பது நல்லது என்று நினைத்தார். நேருவுக்கு எழுதிய கடிதத்திலும் "நமது உழைப்புக்குக் கிடைத்த குறைந்தபட்சப் பலனாக இது இருக்கட்டுமே என்று ஒத்துக் கொண்டேன். என்றார்.[14] இவ்வாறு சமரசம் செய்து கொள்வதின் மூலம் இந்த மசோதாவையாவது நிறைவேற்றிட முடியும் என்று நம்பினார். ஆனால். 55 பிரிவுகளில். நான்குப் பிரிவுகளை நிறைவேற்றவே அவையின் பெரும் பகுதி நேரம் செலவானது. மசோதா குறித்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் விவாதங்களுக்குப் பின்னர் பிரதமர் நேரு "திருமணம், மணவிலக்குப் பகுதி உட்பட மசோதா முழுவதையும் கை விட்டு விடலாம் என்கிற கருத்தை முன் வைத்தார்."[15] அதைக் கேட்ட அம்பேத்கருக்கு" தலை மேல் இடி விழுந்தது போல் இருந்தது. அதிர்ச்சியில் என்ன முடிவெடுப்பது என்று அவர் தீர்மானிப்பதற்குள் கூட்டத்தொடர் முடிந்து விட்டது. மசோதாவும் காலாவதியாகி விட்டது.

நான்கு ஆண்டுகளாக இந்து சட்டத் தொகுப்பு மசோதாவுக்காக, அவமானங்களையும், இழிவுகளையும், விமர்சனங்களையும் தாங்கி வந்திருந்த போதும் பலன் ஏதுமின்றி மசோதாவின் இந்தப்பகுதியும் அழுவாரின்றி அழுகுரலின்றி, பாடுவாரின்றி கொன்று புதைக்கப்பட்டு விட்டதே என்று வருந்தினார். மனதளவிலும், உடளவிலும் அவர் மிகவும் சோர்வுக்கு உள்ளானார்.முற்போக்கு வாதியான பிரதமர் நேருவும் பழமை வாதிகளுக்கு பணிந்து போய் விட்டாரே என்று கவலை கொண்டார். நேரு நேர்மையாக இருந்தாலும், போதிய ஆர்வமும், உறுதியும், துணிவும் அவரிடம் இல்லை என்ற எண்ணம் அம்பேத்கருக்கு ஏற்பட்டது.காலத்தைக் காரணம் காட்டி மசோதாவைக் கைவிடும் பிரதமரின் முடிவை அம்பேத்கரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே இனித் தொடர்ந்து அமைச்சரவையில் இருப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தார். இன ஏற்ற தாழ்வும், பாலின ஏற்றத்தாழ்வும் இந்து சமுதாயத்தை பீடித்துள்ள பெரும் பிணியாகும். இதை அப்படியே விட்டு விட்டுப் பொருளாதார பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட சட்டங்களை மேலும் மேலும் இயற்றிக் கொண்டு செல்வது நமது அரசியல் சாசனத்தையே கேலிக்கூத்தாக்குவதாகும். சாணக் குவியல் மீது மாட மளிகை கட்டுவது போலாகும் என்று கூறிவிட்டு செப் 27, வியாழன் 1951 அன்று அமைச்சர் பதவியிலிருந்து விலகும் கடிதத்தை பிரதமர் நேருவுக்கு அனுப்பினார். (அமைச்சரவையில் நான்கு ஆண்டுகள், ஒரு மாதம் 26 நாட்கள் பதவி வகித்தார்).அடுத்த நாளே(28-09-1951) "நீங்கள் விலகுவது குறித்து உண்மையில் நான் வருந்துகிறேன்" என்று கடிதம் எழுதிய பிரதமர் நேரு, விலகலை உடனே ஏற்றுக் கொண்டார்.அந்த அளவுக்கு நேரு நல்லவராக இருந்தார் என்று அம்பேத்கர் பின்னாளில் கிண்டலாகக் கூறினார். ஆனாலும் கூட்டத் தொடர் முடியும் (அக்டோபர் 10)வரை அமைச்சராகத் தொடர நேரு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அமைச்சராகத் தொடர்ந்தார்.

கூட்டத் தொடரின் இறுதி நாளில் அம்பேத்கர் தனது முடிவை முதலில் அறிவிக்க விரும்பினார். ஆனால் உரை நகலை அவைத் துணைத் தலைவரிடம் முன்கூட்டிய கொடுக்காததினால், மாலை ஆறு மணிக்கே பேச அனுமதிக்க முடியும் என்று அவைத் துணைத் தலைவர் கூறிவிட்டார். இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை என அழைக்கப்பட்டவருக்கு நாடாளுமன்ற அவை கொடுத்த ராஜ மரியாதை இது தான். கோபத்துடன் வெளியேறிய அம்பேத்கர் ஊடகங்களிடம் தனது பதவி விலகலுக்கான காரணங்களை அறிக்கையாகக் கொடுத்தார்.

.ராஜினாமா ஏன் என்பது பற்றி 10, அக்டோபர் 1951 இல் அம்பேத்கர் விடுத்த அறிக்கை பல செய்திகளை நமக்கு விளக்கிச் செல்கிறது.

அதன் சுருக்கம்.

» “முதன்மையான பொருளாதாரம், மற்றும் நிதித்துறை மாணவனாக இருந்தும் பொருளாதார விவகாரக் குழு அமைக்கப்பட்ட போதோ, வெளியுறவுக் குழு, அல்லது பாதுகாப்புக்கு குழுகளிலோ, அமைச்சரவையின் முக்கியமான குழுவிலோ ஒரு உறுப்பினராகக்கூட நான் நியமிக்கப்படவில்லை. நான் பலவகையிலும் புறக்கணிக்கப் பட்டதை உணர்ந்தேன்.அந்தக் குழுக்கள் இரும்புத் திரைக்குப் பின்னால் வேலை செய்கின்றன.முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அவர்கள் எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டிய நிலையில் நான் இருந்தேன்.

» பின்தங்கிய வகுப்பினர் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு எந்தவித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அரசியல் சாசனம் முன்வைக்கவில்லை. அரசியல் அமைப்பு உருவாக்கி ஒரு வருடம் ஆன பின்னும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பாதுகாக்க ஒரு ஆணையம் அமைப்பது குறித்து சிந்தித்துப் பார்க்க கூட இல்லை.

» பட்டியிலப்பட்ட சாதியினர் பாதுகாப்பில் அரசிடம் அக்கறையின்மை நிலவுகிறது.அதே பழைய கொடுங்கோன்மை, பழைய அடக்கு முறைத் தொடர்கிறது. பட்டியல் சாதியினர் பல வகையிலும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

» சுதந்திரம் பெற்ற போது அனைத்து நாடுகளும் நமது நண்பர்களாக இருந்தனர்.நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நண்பர்கள் பலரும் விலகி விட்டனர்.நாம் நம்மை தனிமைப் படுத்திக்க கொண்டோம்.நமக்கான நண்பர்கள் யாருமில்லை.இது நமது மோசமான வெளியுறவுக் கொள்கையின் விளைவு.இதனால் ராணுவத் செலவு அதிகரிக்கும்.நாம் ஆண்டு தோறும் பெறும் 350 கோடி ரூபாய் வருமானத்தில் ரூ. 180 கோடி ராணுவத்துக்கு செலவிடுகிறோம். பாகிஸ்தானுடனான நமது சண்டை வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகும்இந்தக் கொள்கை மிகவும் அபாயகரமானதாகும்.இந்த நிலை மாற நமது வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட்ட வேண்டும்.

» காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வாக, காஷ்மீரை பாகிஸ்தானுடனும், பவுத்தர்கள் வாழும் லடாக், இந்துக்கள் வாழும் ஜம்மு ஆகியவைகளை இந்தியாவுடனும் இணைக்க வேண்டும்.

» கடைசியாக இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில் அரசு காட்டிய அக்கறையின்மை.”16 (கூடுதல் தகவல்களுக்கு அம்பேத்கர் நூல் தொகுப்பு-32-பின் இணைப்பை வாசிக்கவும். -ஆ.ர்)

1952இல் இந்தியாவில் நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் நேருவின் தலைமையில் காங்கிரசின் உறுதிமிக்க அரசு அமைந்த பின் மசோதா மீண்டும் உயிர்த்தெழுந்தது. (இந்த தேர்தலில் நேரு வென்றார்.அம்பேத்கர் பம்பாய் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார்.)

1950இல் வல்லபாய் படேல் மறைந்து போனதால் நேருவை எதிர்ப்பவர் எவரும் இல்லாத நிலை உருவானது.பெங்களூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் பட்டேலின் சீடர் புருசோத்மம் தாண்டன் தலைவர் போட்டியிலிருந்து விலகி விட நேரு தலைவரானார்.கட்சியும் ஆட்சியும் அவரது கட்டுப்பாட்டுக்குள் வந்தது.இந்து சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு எதிராகக் கர்ஜித்த கர்பத்ரிஜி மகாராஜா உட்பட பலரும் காணாமல் போயினர்.

எதிர்ப்பு அலை குறைந்தது. கொதி நிலை அடங்கிப் போனது. இதற்காகவே காத்திருந்த நேரு இந்து சட்ட மசோதாவை,. இந்து திருமணச் சட்டம், (1955) இந்து வாரிசு உரிமைச் சட்டம்(1956), இந்து சிறுபான்மை மற்றும் காப்புரிமைச் சட்டம்(1956) இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் (1956)என நான்கு தனித்தனி மசோதாவாகப் பிரித்து. பெரும்பான்மை ஆதரவோடு 1954-1956 க்கு இடப்பட்ட காலத்தில் நிறைவேற்றி பத்து ஆண்டுகளாக பேசுப்படு பொருளாக இருந்த மசோதா சட்டமாகியது. இந்தச் சட்டத்திற்காக இந்து சமூகத்தை அழுத்தி வைக்கும் சக்திகளுக்கு எதிராக நான்கு ஆண்டுகள் ஒற்றையாளாக சமத்துவ வாளேந்திக் களமாடிய அம்பேத்கர், பெண்களின் காலில் மாட்டிய விலங்குகள் ஒவ்வொன்றாக நொறுங்கி விழும் ஓசையைக் மாநிலங்கள் அவையில் ஒரு உறுப்பினராக, இருந்தபடிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

.பல நூறு ஆண்டுகளாக மதத்தின் பெயரால், ஸ்மிருதி, சாத்திரங்களின் பெயரால் மிதிபட்டு நசுக்கப்பட்டு கிடந்த பெண்களுக்கு இந்து சட்ட மசோதாவே பல்வேறு உரிமைகளைப் பெறுவதற்கானப் பாதையைச் செப்பனிட்டுத் தந்தது. ஆனால் அதுவும் எளிதில் கிடைத்து விடவில்லை.ஒவ்வொரு உரிமைக்குப் பின்னாலும் ஒரு போராட்டம் இருந்தது. எல்லா உரிமைகளையும் போராட்டமே பெற்றுத் தந்திருக்கிறது.அது இரத்தம் சிந்தியும், சிந்தாமலும் அல்லது அமைதியான வழியிலும் இருக்கலாம். ஆனாலும் போராட்டமே மாற்றத்துக்கான மந்திரக் கோல் என்பதில் மாற்றம் இல்லை.


## குறிப்புகள்


1. இந்து கோட் மசோதா மற்றும் ராவ் குழுவின் அடித்தளம் பகுதி-6. -அமித் காஷ்யப். judgementincriminallaw.word press. com ஜூலை 25, 2020-)
2. இந்திய வரலாறு காந்திக்குப் பிறகு (india after gandhi)–ராமச்சந்திர குஹா, தமிழில் ஆர்.பி.சாரதி பக்-343
3. இந்து மதம் எங்கே போகிறது.அக்கினி ஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார்.
4. விடுதலை 06-02-1951
5. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் நூல் தொகுப்பு -31 பக்.442.
6. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் நூல் தொகுப்பு -31 பக்- 1099
7. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் தொகுப்பு 31. பக்-385
8. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் தொகுப்பு 31. பக்-419
9. இந்து இந்தியா - அச்சும் மதமும் -பக்-385
10. இந்து இந்தியா கீதா பிரஸ்:அச்சும் மதமும்- பக் -387
11. விடுதலை 06-02-1951
12. The Indian Express.Com.Inder Malhothraa 01-05-2009
13. அம்பேத்கர் கடிதங்கள்-சுரேந்திர அஜ்நாத்.பக்-323
14. அம்பேத்கர் கடிதங்கள்-சுரேந்திர அஜ்நாத். பக் 327.
15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் பகுதி 32 -பக்.824.
16. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் பகுதி 32 - பக் 814-830


## ஆசிரியர் குறிப்பு


சங்கையா, இந்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் (BSNL) அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளனத்திலும் (NFTE -BSNL), அனைத்திந்திய தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்திலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மனித உரிமை ஆர்வலர். இவரது முதல் படைப்பான "லண்டன் - ஒரு பழைய சாம்ராஜ்யத்தின் அழகிய தலைநகரம்" என்ற நூலுக்கு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை, 2013ஆம் ஆண்டின் சிறந்த பயண இலக்கிய நூலுக்கான விருதினை வழங்கியது. உலகமயம் இந்தியாவில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் பற்றிய "பன்னாட்டுச் சந்தையில் பாரத மாதா", இந்திய வலதுசாரிகளைப் பற்றிய "காவி என்பது நிறமல்ல" போன்ற இவரது நூல்கள் பெரிதும் பேசப்பட்டவையாகும். இவரது சொந்த ஊர், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில், துறையூர் என்ற சிற்றூர் (கிராமம்). வசிப்பது தமிழ் வளர்த்த மாமதுரையில்.

விடுதலை இதழில் அம்பேத்கரின் மசோதாவுக்குப் பெரியார் ஆதரவு (ஆவணக் குறிப்பு)



***"There is substantial linguistic evidence favoring Dravidian authorship of the Indus Civilization.***

The evidence includes:

- The presence of Dravidian loanwords and loan translations in the Rig Veda.
- The substratum influence of Dravidian on Indo-Aryan as seen in phonological changes like introduction of retroflex sounds, morphological changes like switch-over from inflexion to post-fixation, and near-identical syntactical structures moving Indo-Aryan closer to Dravidian than to Indo-European languages.
- Computer analysis has shown that the Indus language had only suffixes (as in Dravidian) and no prefixes (as in Indo-Aryan) or infixes (as in Munda).
- The Indus religion as revealed by pictorial depiction on seals and sealings included worship of a buffalo-horned male god, mother-goddesses, the pipal tree, the serpent and possibly the phallic symbol, all of which are known to have been derived from the aboriginal populations".

(Interpreting the Indus Script: The Dravidian Solution
Convocation Address. Dravidian University – Feb 26 2015,
Kuppam. Andhra Pradesh, Union of India).

Prof. Dr. **IRAVATHAM MAHADEVAN**

*National Fellow of the Indian Council of Historical Research.*

# திராவிடப்பொழில் சூலை-செப்டம்பர் 2022 ஆய்வுக் கூட்டம்

திராவிடப் பொழில் சூலை-செப்டம்பர் 2022 இதழின்ஆய்வுக் கூட்டம் பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவின் சார்பாக அக்டோபர் 22 2022 சனிக்கிழமை இரவு 8:00 மணிக்கு(தமிழ்நாடு நேரம்) நடைபெற்றது. நிகழ்வுக்கு அமெரிக்காவில் வசிக்கும் பெரியார் பன்னாட்டு அமைப்பைச்சார்ந்ததோழர் மோகன் வைரக்கண்ணு அவர்கள் தலைமை ஏற்று அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில்,

“மொழி, பண்பாடு, நாகரிகம் இவை எல்லாவற்றிலும் மிகப் பழமையான, செம்மொழி வளமும், வரலாற்றுப் பொருண்மையும் படைத்த ஒரு சிறப்புமிக்க சொல், சமத்துவம்,சமநிலை, சமூகநீதி, பெண்ணுரிமை,சாதிமத மறுப்பு அனைத்தும் பேசும் சொல் இது. நான் சொன்னவுடன் அந்தச்சொல் என்னவென்று உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும்; அதுதான் திராவிடம் என்னும் சொல். திராவிடமும் மொழியும் இணைந்து தான் திராவிடப் பொழில். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுக் கட்டுரைகளை தாங்கி இந்த இதழ் வருகிறது. இதன் ஆசிரியர்களுக்கு மிகவும் நன்றி. அதுபோல ஆய்வுக் கட்டுரைகளைத் தருவதுதான் இந்தத் திராவிடப்பொழில். திராவிடப் பொழில் இதழில் வந்த கட்டுரைகளை ஆராய்ந்து, அதைத் தர அறிஞர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கேட்டு நாம் மகிழ்வோம். மனோன்மணீயம் சுந்தரனார் அவர்களால் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்... " என்ற பாடலில் திராவிட நல் திருநாடு என்று வருகின்றது. அதைப்போல 1903ல் இரவீந்திரநாத் தாகூர் அவர்களால் எழுதப்பட்ட பாடலில் "திராவிட உத்கல வங்கா" என்று வருகின்றது. அது இப்போது இந்திய தேசிய கீதம். அந்தஇந்திய தேசிய கீதத்திலும் திராவிட என்ற சொல் வருகிறது. 1903 க்கு முன்பே இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டதாக பல ஆய்வுகள் சொல்கின்றன; அறிஞர்கள் பேசி உள்ளார்கள். இந்தியதேசிய கீதம் மரியாதைக்கு உரியது. அரசு நிகழ்ச்சிகளில் முதலில் பாடப்படும் தமிழ்த் தாய் வாழ்த்து, இறுதியில் பாடப்படும் தேசிய கீதம் இந்த இரண்டிலுமே திராவிடம் இருக்கிறது. இதன் பொருட்டாகத்தான் இந்த திராவிடப் பொழில் வந்து கொண்டிருக்கிறது. அய்யா ஆசிரியர் கி. வீரமணி அவர்களுடைய ஆலோசனையின் பேரில் பேராசிரியர் கண்ணபிரான் ரவிசங்கர் அவர்களைச் சிறப்பு ஆசிரியராகக் கொண்டு இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்த ஆசிரியர் குழுவில் அய்யா டாக்டர் சோம. இளங்கோவன்,முன்னால் துணைவேந்தர் ஜெகதீசன்,பேரா. ப. காளிமுத்து,பேரா. நம். சீனிவாசன்,பேரா. சுப. திண்ணப்பன்,முனைவர் வா.

நேரு ஆகியோர் அடங்கியஆசிரியர் குழுவிற்கு என்றுமே எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். திராவிடப்பொழில் இந்தக் காலத்திற்கு வேண்டிய ஒரு கைவாள். எழுச்சிக்கு வேண்டிய ஒரு தூண்டுகோல். உலகிற்குத் திராவிடத்தை உணர்த்த பகுத்தறிவுப் பண்ணையில் வளரும் திராவிடப் பொழிலின் காற்று அயராது உலகெங்கும் வீசட்டும். அதற்கு உங்கள் அனைவரின் ஆதரவும் தொடர்ந்து கிட்டட்டும். இனத்தால் திராவிடன், மொழியால் தமிழன், தரணியில் தன்மானம் கொண்டவர்கள் நாம் என்ற முழக்கத்தோடு உங்கள் அனைவரையும் வரவேற்கின்றேன் என்று குறிப்பிட்டு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்வினைத் தோழர் கோதை அவர்கள் ஒருங்கிணைத்தார். தோழர் கோதை அவர்கள் மென்பொறியாளர். அமெரிக்காவில் உள்ள தமிழ்ப்பள்ளிகளில் ஆசிரியராகவும் வேலை செய்கிறார். இணைய வழியாகத் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் இருக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராகவும் இருக்கிறார். தமிழ்ச் சங்க நிகழ்வுகளில் தன்னார்வலராகப் பணியாற்றக் கூடியவர். தமிழில் கவிதை கதை கட்டுரைகள் எழுதக்கூடியவர். படைப்பாளர், தமிழ்ச் சங்கத்தில் பொறுப்பாளர், ஊடகங்களில் பட்டிமன்றங்களின் பேச்சாளராகவும் இருக்கக்கூடியவர். இன்று பெரியார் பன்னாட்டு அமைப்பின் நிகழ்வினை ஒருங்கிணைக்கிறார் என்று சிறப்பாகத் தலைமை ஏற்ற மோகன் வைரக்கண்ணு அவர்கள் குறிப்பிட்டார்.

ஒருங்கிணைத்த தோழர் கோதை அவர்கள், "திராவிடச் சிந்தனைகளை நம் மக்கள் அனைவரிடத்திலும் கொண்டு சேர்ப்பதற்கான பொறுப்பு அனைத்து திராவிடர்களுக்கும் உண்டு. திராவிடத்தைப் பற்றி மிக அழகாக மோகன் வைரக்கண்ணு அவர்கள் குறிப்பிட்டார். திராவிடச் சிந்தனையானது பெண்ணுரிமை, சமத்துவம், சமூகநீதி இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இவற்றை எல்லோரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்றுதான்தந்தை பெரியார் கனவு கண்டார். அதற்கான பொறுப்பு அனைத்து திராவிடர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், இந்தத் திராவிடப் பொழில் இதழின்ஆய்வுக்கூட்டம் என்ற முன்னெடுப்பும் கூட என்றுநம் கண்களுக்குத் தெரிகிறது. திராவிடப்பொழில். பொழில் என்பது சோலை. அந்தத் திராவிடச் சோலையில் பூக்கின்ற மலர்கள்தான் இதில் வரும் கட்டுரைகள். இந்தக் கட்டுரைகளான மலர்களைத் தேனீக்கள் ஆக மாறி ஆய்வு செய்து, அதில் இருக்கும் தேனைக் கொணர்ந்து நமக்கெல்லாம் தந்தால் நமக்கு எவ்வளவு இனிப்பாக இருக்கும். இப்படிப்பட்ட வேலையைத்தான் நமது ஆய்வாளர்கள் எல்லாம் செய்து நமக்கு அந்தத்தேனைக் கொண்டு வந்து தரக் காத்திருக்கிறார்கள். " என்று குறிப்பிட்டு நிகழ்வைத்துவக்கிமுனைவர் சுபாஷினி அவர்கள் எழுதிய 'ஜெர்மானிய மொழி பெயர்ப்பில் திருக்குறள்' என்னும் கட்டுரையைஆய்வு செய்ய எழுத்தாளர்,பேச்சாளர் ஜெயாமாறன் அவர்களை அழைத்தார்.

“ஜெயாமாறன் அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர். இப்போது அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா மாநகரத்தில் வசித்து வருகிறார். ஜார்ஜியாடெக் நிறுவனத்தில் மென் பொறியாளராக வேலை பார்க்கிறார். தமிழ்ப் பள்ளி ஆசிரியராக, மேடைப் பேச்சாளராக, எழுத்தாளராக, நாடகக்கலைஞராக இன்னும் நிறைய மேடைகளில் பேசிய அனுபவம் உள்ளவர். ஜெயாமாறன் அவர்கள் யூ டியூப் வழியாக இலக்கியக் காணொளிகளையும் வெளியிட்டு வருகிறார். சிறந்த நடிகைக்கான தமிழன்பன் 80 விருதைப் பெற்றவர். ஞானபாரதி 2020 விருது பெற்றவர். " என்று ஜெயாமாறன் அவர்களைப் பற்றிய அறிமுகத்தையும் கொடுத்து ஆய்வுரைக்கு அழைத்தார்.

## ஜெயாமாறன் அவர்களின் ஆய்வுரை

“ஜெர்மனியில் வசிக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவர் முனைவர் க. சுபாஷினி அவர்களின் **'ஜெர்மானிய மொழிபெயர்ப்பில் திருக்குறள்'** என்னும் கட்டுரை பற்றித்தான் இன்று நான் பேசப்போகிறேன். முனைவர் சுபாஷினி அவர்களை பலமுறை நான் இணையத்தில் பார்த்திருக்கிறேன்; பேசக் கேட்டிருக்கிறேன். இன்று அவருடைய கட்டுரையை ஆய்வு செய்ய வாய்ப்பு வழங்கிய அய்யா மருத்துவர் சோம. இளங்கோவன்

அவர்களுக்கும்,பெரியார் பன்னாட்டு அமைப்பிற்கும் நன்றி. இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது, சில வருடங்களுக்கு முன் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் சொன்ன ஒரு செய்தி நினைவுக்கு வந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மெட்ராஸ் பிரசிடென்சி கலெக்டராக இருந்த, தமிழ் மொழி மேல் தீவிர பற்றுக் கொண்டிருந்த பிரான்சிஸ் வொயிட் எல்லீஸ் அவர்கள் ஓலைச்சுவடிகளை அச்சில் ஏற்றுவதற்காகச் சேகரித்தவர். அப்போது மதுரையில் கலெக்டராக இருந்த ஜார்ஜ் ஹேரிங்டன்அவர்கள் வீட்டில் பட்லராக இருந்த கந்தப்பனார், தான் சேகரித்து வைத்திருந்த ஓலைச்சுவடிகளை எல்லீஸ் அவர்களிடம் கொடுத்தார் என்றும், இந்தக் கந்தப்பனார் அவர்கள் திராவிடக் கொள்கைகளின் முன்னோடியான அயோத்திதாச பண்டிதர் அவர்களுடைய தாத்தா என்ற செய்தியையும் பேராசிரியர் சுப. வீ. அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

அந்தச் செய்தியின் தொடர்ச்சி இந்தக் கட்டுரையில் இருக்கிறது. அப்படி பிரான்சிஸ் வொயிட் எல்லீஸ் அவர்களின் கைகளுக்கு வந்த அந்த ஓலைச்சுவடிகள் திருக்குறள் ஓலைச்சுவடிகள். அதை அச்சில் பதிப்பதற்கு முன் அதைச் செம்மைப் படுத்த வேண்டும். ஏனென்றால் காலம் காலமாக ஓலைச்சுவடிகளை மாற்றி மாற்றி எழுதிக் கொண்டே வரும்போது கையால் எழுதினால்எழுத்து மாற, கருத்து மாற வாய்ப்பு உண்டு. அதனால் அச்சில் ஏற்றுவதற்கு முன் அந்த மூலப்பிரதியை பிழைதிருத்திச் செம்மைப்படுத்தி கொடுக்கிறார் திருநெல்வேலியைச் சார்ந்த அம்பலவாணக் கவிராயர். அவருடைய அந்தப் பெரிய உழைப்பினாலும் எல்லிஸ் அவர்களின் பேருதவியாலும் 1812ல் திருக்குறளின் மூல பாடம் என்னும் பெயரில் தமிழில் திருக்குறள் அச்சிடப்படுகிறது; வெளியிடப்படுகிறது. அதே வருடம் பிரான்சிஸ் ஒயிட் எலிஸ் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலும் அதன் பின்னர் பிரெஞ்சு,ரஷ்ய மொழி,ஸ்வீடீஸ்மொழி,ஜெர்மனிய மொழி ஆகியவற்றிலும் மொழிபெயர்த்து வெளியிடுகிறார். ஆனால் இதற்கு எல்லாம் 80 ஆண்டுகளுக்கு முன்னால், 1730 லேயே வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் திருக்குறளை அச்சிட்டு வெளியிட்டாராம். இப்படி அந்தக் காலத்திலேயே உலகின் பல மொழிகளில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல் திருக்குறள்.

இதையெல்லாம் கேட்கும் போது நமக்கெல்லாம் மிகப் பெருமையாக இருக்கும். ஆனால் பெருமைப்படுவதோடு அப்படியே விட்டுவிடுவோம். இந்த மொழிபெயர்ப்புப் புத்தகங்களை நாம் பார்ப்பதில்லை, தேடுவதில்லை. இதைப் பற்றிய விவரம் எதுவுமே நமக்குத் தெரியாது. எல்லா குறட்பாக்களும் மொழிபெயர்க்கப்பட்டதா? தெரியாது. யாருடைய உரையின் அடிப்படையில் மொழிபெயர்க்கப்பட்டது? தெரியாது. இலத்தீன், ஆங்கில மொழி பேசுபவர்கள் எல்லாம் இதைப் படித்தார்களா? தெரியாது. இந்த நூலுக்கு அங்கே என்ன வரவேற்பு? தெரியாது. இது எல்லாம் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் தமிழக வரலாறு; தமிழக வரலாறு என்றால் நாம் சேர சோழ பாண்டியர் வரலாறு, நாயக்கர் சாளுக்கியர் வரலாறு வரைக்கும் கூட நமக்கு ஓரளவிற்கு தெரியும் ஆய்வுகள் இருக்கின்றன. அவையெல்லாம் இருக்கின்றன. ஆனால் ஐரோப்பியர் வருகை என்று வந்தவுடன் சுருக்கமாகச் சொல்லிவிட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கு வேகமாகப் போய்விடுகிறோம்.

ஆனால் இந்த ஐரோப்பியர்கள் வருகையால் எத்தனை சமய, சமூக, வாழ்வியல் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்தன; அவர்கள் வணிகத்திற்கு மட்டும் வரவில்லை. கிறித்துவ மதத்தைப் பரப்ப வந்தார்கள் என்றாலும் எளிய மக்களோடு பழகினார்கள். தமிழைப் படித்தார்கள். அவர்களின் மொழிக்கும் தமிழுக்குமான அகராதிகளை உருவாக்கினார்கள்; தமிழ் இலக்கணங்களை ஒழுங்குபடுத்தினார்கள். எழுத்துக்களைக் கூட மாற்றி அமைத்தார்கள். வீரமாமுனிவர் அப்படி மாற்றிய எழுத்துக்களை நாம் இன்றைக்கும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் தமிழ் படித்தது மட்டுமல்ல, தமிழ் இலக்கியங்களை முக்கியமாகத் திருக்குறளை அவர்கள் மொழியில் மொழி பெயர்த்தார்கள். அதன் மூலம் தமிழ்நாட்டை விட்டு தமிழ் வெளியே பரவியது. எல்லாவற்றுக்கும் மேல ஓலைச்சுவடிகளில் எழுதி வைக்கும் பழக்கம் போய் அச்சிட்டு பதிப்பிக்கும் பழக்கம் வந்தது. இவை அனைத்தும் ஐரோப்பியர் வருகையால் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வுகள். தமிழ் பண்பாட்டில் புரட்சியை ஏற்படுத்திய நிகழ்வுகள்.

இதையெல்லாம் மேலெழுந்த வாரியாக நாம் பார்த்துவிட்டுப் போய்விடுவோம். ஆனால் இதைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வுகள் இல்லை என்று சொல்கிறார் சுபாஷினி. அந்தக் குறையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகவும், திருக்குறளை மொழி பெயர்ப்பது பற்றிப் பெருமைப்படுவதோடு நின்று விடாமல், அந்தப் புத்தகங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும், ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற காரணங்களுக்காகவும் ஜெர்மானிய (இடாய்ச்சு) மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இரண்டு திருக்குறள் புத்தகங்களை ஆய்வு செய்கிறார் இந்தக் கட்டுரையில். அப்படி அவர்கள் ஆய்வு செய்கின்ற இரண்டு புத்தகங்கள் 1823ல் ஃப்ரெடிக் காம்மெரர் என்பவர் எழுதிய மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் புத்தகம் ஒன்று. 1856ல் டாக்டர் கார்ல் கிரவுல் என்பவர் எழுதிய மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் இன்னொன்று. இந்த ஜெர்மானிய மொழியை நாமெல்லாம் ஜெர்மன் என்று தான் சொல்லுவோம். அந்த ஜெர்மானிய மொழியின் ஜெர்மானியப்பெயர் இடாய்ச்சு என்பதே நான் இந்த கட்டுரையைப் படித்ததன் மூலமாகத்தான் தெரிந்து கொண்டேன்.

1612-ஆம் ஆண்டில், ஈஸ்ட் இந்தியா கம்பெனி போலவே, தாமும் இந்தியாவில் வணிகம் செய்ய வேண்டும் என்று இடாய்ச்சு ஈஸ்ட் இந்தியா கம்பெனி, தஞ்சாவூரில் ஆட்சி செய்த ரகுநாத நாயக்க மன்னர் என்பவரிடம் பேசி, தரங்கம்பாடியில் உள்ள ஒரு பகுதியை ஆண்டுக்கு 311 ரூபாய் கட்டணம் செலுத்தி, அந்தத் தரங்கம்பாடி என்னும் சிறு பகுதியை வாங்குகிறது. அந்த இடாய்ச்சு ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் கொடி தரங்கம்பாடியில் பறக்கிறது. வணிகம் செய்து கொண்டிருக்கும்போது வணிகம் மட்டும் போதாது என்று 1706இல் இரண்டு ஜெர்மானிய மூத்த பாதிரிமார்கள் வருகின்றார்கள் தமிழ்நாட்டுக்கு. அவர்களின் பெயர் சீகன் பால்க் மற்றும் ப்ளெட்சோ. இவர்களுக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னால் அதாவது 1500களில் போர்ச்சுகல்,இத்தாலி,பிரான்சு போன்ற நாடுகளில் இருந்து கத்தோலிக்கக் கிறிஸ்தவ பாதிரிமார்கள் வந்திருக்கிறார்கள். இங்கு வந்து, தென் தமிழகத்தில் திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தூத்துக்குடி போன்ற இடங்களில் மதத்தைப் பரப்புகிறார்கள். தமிழைப் படித்து மக்களோடு பழகி அடித்தட்டு மக்களுக்கு கல்வி தந்து மதத்தை பரப்புகிறார்கள்.

அவர்களை மாதிரியே தாமும் லூத்தரன் கிறித்துவத்தைப் பரப்ப வேண்டும் என்பதற்குத்தான்சீகன் பால்க்கும் ப்ளெட்சோவும் வருகின்றார்கள். இவர்களும் வந்து தமிழைப் படித்து இடாய்ச்சு மொழிக்கும் தமிழுக்குமான அகராதியை உண்டாக்கி எளிய முறையில் தமிழ் இலக்கண நூல்களை எழுதி, தமிழ் இலக்கியங்களை முக்கியமாக திருக்குறள் போன்றவற்றைப் படிக்கிறார்கள். அப்படிச் சீகன் பால்க் அவர்கள் படிக்கும் போது, (வீரமாமுனிவர் மொழிபெயர்ப்பு கிடையாது அது; 1730இல் தான் வருகிறது) சீகன் பால்க் அவர்கள் ஓலைச்சுவடியில் இருந்து நேரடியாகவே திருக்குறளை படிக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வீரமாமுனிவருடைய மொழிபெயர்ப்புதான் முதன் முதல் திருக்குறளை மொழி பெயர்த்ததாக இருக்கும்என்று தெரிகிறது. அது மட்டுமல்ல, வீரமாமுனிவர் அவர்கள் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் மட்டும்தான் மொழிபெயர்த்தார். காமத்துப்பாலை அவர் மொழிபெயர்க்கவில்லை என்னும் செய்தியும் இந்தக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்படித்தான் லூதரன் பாதிரிமார்கள் தமிழகத்திற்கு வரத் தொடங்கினார்கள். அப்படி கொஞ்சம் ஆண்டுகளுக்குப் பிறகு வந்தவர் தான் ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர் என்னும் பாதிரியார். அவரும் தரங்கம்பாடிக்கு வருகிறார். அவர் 1803ஆம் ஆண்டுதிருக்குறளை இடாய்ச்சு மொழியில் மொழிபெயர்க்கிறார். இந்தப் புத்தகம் ஜெர்மன் நாட்டில் உள்ள நூரன்பெர்க் நகரில் அச்சிடப்படுகிறது. நன்றாகக் கவனிக்க வேண்டும் 1812ல் தான் எல்லீஸ் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு வந்துள்ளது. அதற்கு முன்னாடியே 1803இல் ஜெர்மனிய மொழிபெயர்ப்பு வந்துவிட்டது. இதைப்பற்றிய செய்தி 1807இல் ஜெர்மனி நாட்டில் வெளிவந்த இலக்கிய நாளேடு ஒன்றில் செய்தி இருக்கிறது. செய்தியோடு திருக்குறள் நூலை பற்றிய விவரங்களும் அந்த இலக்கிய நாளேட்டுச்செய்தியில் உள்ளது.

அந்த நூலில் உள்ள விவரங்கள் தான் என்ன? அந்த நூலில் முதலில் ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர் அவர்கள் தன்னுடைய அறிமுக உரையை கொடுக்கிறார். அந்த அறிமுக உரையில் என்ன சொல்லியிருக்கிறார்? தமிழ்நாட்டில்

உள்ள தெய்வ வழிபாடுகள், சமூக நிலைகள், இலக்கியம் என இவற்றையெல்லாம் சொல்கிறார். அதற்கு அடுத்து திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு பற்றிய சில தகவல்களைச் சொல்கிறார். அவர் அதை எங்கிருந்து எடுக்கிறார் என்றால் அந்தக் காலத்தில் புழக்கத்தில் இருந்த வள்ளுவர் பற்றிய கதைகளை வைத்து அவர் திருவள்ளுவர் வாழ்க்கையை எழுதுகிறார். அதற்கு அடுத்து 1330 குறட்பாக்களுக்குமான மொழிபெயர்ப்பை 10, 10 குறட்களாக வரிசையாகக் கொடுத்திருக்கிறார். இதுதான் ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர்அவர்களின் திருக்குறள் பற்றிய மொழிபெயர்ப்பு நூல்.

இவருக்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு தரங்கம்பாடிக்கு, ஜெர்மானியஅறிஞர் கார்ல் க்ரவுல் வருகின்றார். இவர் தமிழ் இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றவராக இருக்கிறார். இவர் 1856இல் இடாய்ச்சு மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்து வெளியிடுகிறார். ஒரே நேரத்தில் ஜெர்மனியின் லைப்ஸிக் நகரில்இருக்கிற பதிப்பகம் மற்றும்லண்டனில் இருக்கிற பதிப்பகத்தாலும் இந்தப் புத்தகம் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. இவர் சொல்கிறார்: ”நான் எல்லிஸ் அவர்கள் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பை படித்தேன். அதில் 13 அதிகாரங்கள் ஆங்கில மொழிபெயர்ப்போடு இலக்கண குறிப்புகளோடு கொடுக்கப்பட்டிருக்கிறது” என்று சொல்கிறார். இப்போது நமக்கு ஒரு முக்கியமான செய்தி தெரிகிறது. வீரமாமுனிவர் அறத்துப்பாலையும் பொருட்பாலையுயம் மட்டும் தான் மொழிபெயர்த்தார். எல்லிஸ் அவர்கள் 13 அதிகாரங்களைத்தான் மொழி பெயர்த்தார். ஆனால் ஜெர்மன் மொழிபெயர்ப்புகள்தான் 1330 குறளையும் மொழி பெயர்த்த மொழிபெயர்ப்புகள்.

இடாய்ச்சுமொழியில் இவர் ஒரு தலைப்பு வைத்திருக்கிறார். அதனுடைய தமிழாக்கத்தையும் டாக்டர் சுபாஷினி கொடுத்திருக்கிறார்கள். அது என்னவென்றால்'திருவள்ளுவரின் குறள்'. மனித வாழ்வின் மூன்று முக்கிய போராட்டங்களைப் பற்றிய செய்யுட்கள் எனத் தமிழில் மொழி பெயர்க்கலாம்; இந்தப் புத்தகத்தைக் கார்ல் க்ரவுல்எழுதியிருக்கிறார். அட்டையில் ஆசிரியரின் பெயர் இருக்கிறது. அவர் வகித்த பதவிகள் இருக்கின்றன. அவர் லூதரன் மிஷனரியில் ஓர் இயக்குநராக இருந்திருக்கிறார். கீழ்த்திசை நாடுகளில் இறை இயல் அமைப்பின் ஓர் உறுப்பினராக இருந்திருக்கிறார். இந்த இரண்டு ஜெர்மானிய புத்தகங்களுடைய அட்டையும் திராவிடப் பொழில் இதழில் முனைவர்சுபாசினி அவர்களின் கட்டுரையில்பின்னிணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

இப்போது நூலுக்குள் போகலாம். அந்த நூலில் பதிப்பாசிரியர் உரை என்று இரண்டு பக்கம் இருக்கிறது. அதில் முக்கியமான ஒரு செய்தியை சொல்கிறார். என்னவென்றால் தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் தான் கற்ற நல்ஒழுக்கநூலை ஜெர்மானிய மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு இதை எழுதியிருக்கிறேன். தமிழகத்தைச் சொல்கின்ற போது தமிழர்களின் நாடு என்றே குறிப்பிடுகிறார். அப்போதே அப்படி எழுதுகின்றார். அப்புறம் அறிமுக உரை கொடுக்கின்றார். அது பத்து பக்கம் இருக்கின்றது. அதில் அந்தக்காலகட்டத்தில் திருக்குறளை வேறு யாரெல்லாம் மொழி பெயர்த்தார்கள் என்பதையும் அவர் சொல்கின்றார். அப்படிச் சொல்கின்ற பொழுது மெட்ராஸில் அந்தக் காலத்தில் பாதராக இருந்த ரெவரண்ட் ட்ரூ என்பவர், ஆங்கிலேயர், 24 அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கி, 1852 இல் வெளியிட்டிருக்கிறார். இந்த நூல் 1852-ல் வெளிவந்திருக்கிறது. அதே மாதிரி பிரான்ஸ் நாட்டின் ஏரியல் என்பவர் ஜர்னல் ஆசியாட்டிக் (Journal Asiatique) என்னும் இதழில் திருக்குறள் பற்றிய தெளிவுரையைத் தொடராகஎழுதி வந்திருக்கிறார். அவரும் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் ஒரு தொடராக எழுதியிருக்கிறார். அதைப்பற்றியும் கார்ல் க்ரவுல் எழுதியிருக்கிறார்.

அடுத்ததாக பரிமேலழகர் உரையைப் பற்றிய தன்னுடைய கருத்தை விளக்க உரையாக இரண்டு பக்கத்திற்குக் கொடுக்கிறார். எல்லா உரையாசிரியர்கள் பற்றிய அறிமுகமும் இருந்திருக்கிறது என்றாலும், பரிமேலழகர் உரையை வைத்துத்தான் இவர் புரிந்து கொண்டது போல் தெரிகிறது. நல்ல ஒழுக்கம், நற்பண்புகள், காமம் அதிலிருந்து மீளும்வழி இவை எல்லாம் தான் திருக்குறள் சொல்லும் முக்கிய செய்திகள் என்று சொல்லித் தன்னுடைய புரிதலுக்கு ஏற்ப ஒரு விளக்கத்தை அவர் அந்தப் பக்கங்களில் கொடுத்து இருக்கிறார். அப்புறம் ஒவ்வொரு திருக்குறளுக்கும் மொழிபெயர்ப்பு சில கடினமான

சொற்களுக்கு விளக்க உரையும் அந்த புத்தகத்தில் இருக்கிறது. கடைசியாகத் திருவள்ளுவரின் வரலாறு அந்தப் புத்தகத்தில் இருக்கிறது.

இவரும் அந்தக் காலத்தில் சொல்லப்பட்ட கதைகளைத்தான் திருவள்ளுவர் வரலாறாக மொழி பெயர்த்திருக்கிறார். பல கதைகள் திருவள்ளுவர் வரலாற்றைப் பற்றி உண்டு. இவர் இரண்டு கதைகளை எடுத்துக்கொண்டு அவற்றை மொழிபெயர்த்து இருக்கிறார். ஒன்று வேட்டைக்காரன் முதலியார் என்பவர் எழுதிய திருவள்ளுவர் வரலாறு என்னும் கதை. மற்றொன்று சரவணப் பெருமாள் ஐயர் என்பவர் எழுதிய திருவள்ளுவர் வரலாறு கதை. இரண்டுமே அதீத கற்பனையோடு பார்ப்பனீய வர்ணக் கோட்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் புனையப்பட்ட கதைகளாகத் தான் இருக்கிறது. அந்தக் காலத்தில் கிடைத்த ஆதாரங்களை வைத்துத் திருவள்ளுவருடைய வரலாற்றைச் சொல்ல முயற்சி செய்கிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

மொத்தம் 236 பக்கங்கள் இந்தக் கார்ல் க்ரவுல் அவர்களின் புத்தகம். இந்த இரண்டு புத்தகங்களையும் முனைவர் சுபாஷினி அவர்கள் முன்னுரையோடு தமிழ் மரபு அறக்கட்டளை 2019ல் மறு பதிப்பாக வெளியிட்டு இருக்கிறார்கள். சரி இந்த புத்தகங்களைப் பற்றிய விவரங்களை நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்த இரண்டு மொழிபெயர்ப்புகளும் ஜெர்மனியில் மட்டுமல்ல இடாய்ச்சு மொழி பேசப்படும் டென்மார்க், சுவிட் சர்லாந்து,ஆஸ்திரியா,ஹங்கேரி போன்ற நாடுகளில் பொதுமக்கள் வாசிப்பதற்காகவும் ஆய்வாளர்களுக்கும் அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆனால் இந்தப் புத்தகங்கள் திருவள்ளுவரைப் பற்றிய சமகால ஆய்வின் அடிப்படையில் திருக்குறள் மீண்டும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட வேண்டியது அவசியம் மட்டுமல்ல, அது நம்முடைய கடமை என்று ஐயத்திற்கு இடம் இல்லாமல் சொல்லி இந்தக் கட்டுரையை முடிக்கிறார்கள் சுபாஷினி அவர்கள். நம்மை நாமே வியந்து கொண்டு இருக்காமல் நம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையையும் விழிப்புணர்வையும் இந்தக் கட்டுரை தருகிறது" என்று குறிப்பிட்டு ஆய்வுரையை முடித்தார்.

## கட்டுரையாளர் சுபாஷினி அவர்கள் ஏற்புரை

“அனைவருக்கும் வணக்கம். சிறப்பாக எனது கட்டுரையை வாசித்து அதனை உள்வாங்கிக் கொண்டு அந்த உணர்வுகளோடு அதனை வெளிப்படுத்திக் கட்டுரையில் உள்ள அனைத்தையும் அறிமுகம் செய்து வைத்த ஜெயாமாறன் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு நான் ஜெர்மனிக்கு 1991ஆம் ஆண்டு வந்து சேர்ந்தேன். அப்பொழுது எனது உயர் கல்விக்காக இங்கு வந்து சேர்ந்தேன். இந்த நேரத்தில் தமிழுக்கும் ஜெர்மானிய மொழிக்கும் ஒரு தொடர்பு இருக்கும் என்ற செய்தியே எனக்குத் தெரியாது. எல்லோரும் வருவது போல உயர்கல்விக்காக வந்து சேர்ந்தேன். ஆனால் என் வாழ்க்கையில் என் ஆய்வுப் பயணத்தை மாற்றிய ஒரு பெரிய விஷயத்தை ஒரு நூல் செய்தது. அதாவது ஜெர்மன் தமிழாலஜி என்னும் ஒரு நூல் எனக்குப் பரிசாகக் கிடைத்தது.

இதனை எழுதியவர் சி. எஸ். மோகனவேலு என்ற ஆய்வறிஞர். இந்த நூல் எனக்கு 2006ஆம் ஆண்டு கிடைத்து, 2007 ஆம் ஆண்டு இந்த நூலை வாசித்த பிறகு தான், ஜெர்மனிக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏறத்தாழ 400 ஆண்டுகள் தொடர்பு இருக்கிறது என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக ஜெர்மனியின் பல பகுதிகளுக்குச் சென்ற போது, ஒவ்வொரு பகுதிக்கும் செல்லுகின்ற போது, அங்கு இருக்கக்கூடிய ஆவணப் பாதுகாப்பு மையங்களுக்கும் செல்லுகின்ற போது, நிறைய தொடர்புகள் கிடைத்தன. அதாவது டென்மார்க் அல்லது ஸ்வீடன், பின்லாந்து அல்லது பிரான்ஸ் என்று ஒவ்வொரு நாடுகளில் இருக்கும் ஆவணங்களுக்கும் ஒரு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. அந்தத் தேடுதலை விரிவுபடுத்தி இங்கு கொடுத்தவை இவை. அப்படித் தேடுகின்ற பொழுது திருக்குறள் பற்றிய புதிய புதிய செய்திகள் எனக்குக் கிடைக்க ஆரம்பித்தன. அதன் தொடர்பாக எழுதிய கட்டுரைதான் இந்தக் கட்டுரை.

திருக்குறள் என்பது நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருப்போம். அதாவது தமிழகத்தை எடுத்துக் கொண்டால் சமண மடங்கள், பௌத்த மதங்கள், வைணவ மடங்கள் எனப் பல மடங்கள்

இருக்கின்றன. ஆனால் நான் பார்த்தவரை எந்தச் சமய மடத்திலும் திருக்குறளை ஓலைச்சுவடி வடிவத்தில் பார்த்ததில்லை. இந்தத் திருக்குறள் என்பது பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையான தாக்கங்களை எதிர்கொண்டு, ஆனால் பாதுகாப்பாக ஏதோ சில குழுக்களால் பாதுகாக்கப்பட்டு, அது படிப்படியாக நம் கைகளுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதை இப்போது என்னால் உறுதியாக கூற முடிகிறது. எனது ஆய்வுகளைப் பார்க்கின்ற பொழுதுஏறக்குறைய கிபி 15ஆம் நூற்றாண்டு – அந்தக் காலகட்டத்தில் இருந்து, அதாவது கத்தோலிக்க பாதிரிமார்கள் தரங்கம்பாடியில்அவர்களுடைய குறிப்புகளில் இருந்து தான் முதலில் திருக்குறளைப் பற்றிய செய்திகளை பார்க்கின்றேன். ஆக அதற்குப் பிறகு படிப்படியாக நாம் பார்க்கின்ற பொழுது வீரமாமுனிவர்அவருடைய முயற்சிகள், அதற்கு பிறகு எல்லீஸ் அவர்களின் முயற்சிகள் என்று பாதுகாக்கப்பட்டு கடந்த நூற்றாண்டில் மிகப் பரவலாகத் தமிழ்நாட்டில் திருக்குறள் என்ற ஒன்று மீண்டும் அனைவரது கவனத்தையும் ஈர்த்து இன்று உலகளாவிய வகையில் தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஓர் அடையாளமாகத் திருவள்ளுவர் திருக்குறள் என்பது இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

இன்று ஜெர்மனியில் எடுத்துக் கொண்டால், இன்றைக்குக் கூட அகம் புறம் என்ற ஒரு கண்காட்சி ஒரு ஆறு மாதம் நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது நான் வசிக்கின்ற இப்பகுதியில், தமிழுக்காக, தமிழின் சிறப்பிற்காக என்று 2019ல் திருவள்ளுவரின் ஐம்பொன் சிலைகளை இங்கு நிறுவினோம். அதற்கு அடுத்து கோவிட் பிரச்சனை வந்ததால் எந்த நிகழ்வுகளும் இல்லை. இப்போது தமிழுக்கு என்று உலகில் அதாவது முதன்முறையாக ஆறு மாதம் நடக்கின்ற தமிழின் சிறப்புகளைக் கூறுகின்ற ஒரு கண்காட்சியை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இன்றைக்குக் குறிப்பாக பண்பாட்டு விடயங்களில் மரபு விளையாட்டுகளை நாங்கள் நினைவுபடுத்துகிறோம். எனவே திருக்குறள், திருவள்ளுவர், தமிழ்மரபு என்ற விடயங்களை ஜெர்மானியர்களும் பேச வேண்டும், அதாவது அந்த 400 ஆண்டுகால பண்பாட்டுத் தொடர்ச்சியை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்ற வகையில் செயல்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் ஏற்புரை ஏற்றுப் பேசுவதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். மிகவும் சிரமமாக இருந்த ஒரு காலகட்டத்தில், ஐரோப்பியர்கள் குறிப்பாக ஜெர்மனியர்கள் குட்டன்பெர்க், அவர்தான்1450-ல் அச்சு இயந்திரத்தை உருவாக்குகின்றார், மைன்ஸ் நகரில். நான் வசிக்கும் இடத்திலிருந்து ஏறத்தாழ 220 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த அச்சு இயந்திரம் என்பது பைபிள் நூல்களை அச்சாக்கம் செய்து உலகளாவிய அளவில் பைபிளை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக வந்தது. ஆனால் தமிழகத்திற்கு, இந்தியாவிற்கு அது வந்த பொழுது, அது தம்பிரான் வணக்கம் என்ற நூல் வழியாக பல நூல்கள் அச்சாக்கம் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது என்பதைப் பார்க்கிறோம். இந்தியாவிலேயே முதன்முதலாக வெளிவந்த நூல் தமிழில் வந்த நூல் தம்பிரான் வணக்கம். அந்த வகையில் அச்சு இயந்திரத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்ட ஒரு சமூகமாகவும் நாம் இருந்திருக்கிறோம்.

பல விடயங்கள், அதாவது ஐரோப்பியர்கள் வருகை என்பது பற்றி இந்த நூற்றாண்டில் பலர் அதிகமாகப் பேசவில்லை என்பதைப் பார்க்கின்றோம். இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டு இருப்பது போல, வரலாற்று ஆசிரியர்கள் வலிந்து திணிக்கிறார்கள். வலிந்து திணிப்பது எதில் இருக்கிறது என்றால் மன்னர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்போம் என்பதில் தான் இருக்கின்றது. வரலாறு என்பது எது என்ற கேள்வி நமக்கு வருகின்றது. மன்னர்களைப் பற்றி யாரெல்லாம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற வகையில் இருக்கிறார்களோ அவர்கள் சொல்வதுதான் வரலாறா? சாமானிய மக்கள் வாழ்க்கை என்பது வரலாறு இல்லையா? என்ற கேள்வி நம் முன்னே வந்து கொண்டே இருக்கிறது. ஆனால் ஐரோப்பியர்கள் செய்ததற்கும் இங்கே தமிழகத்தில் நாம் செய்ததற்கும் உரிய ஆவணங்களைப் பார்க்கின்ற பொழுது பல வேறுபாடுகளை நம்மால் காண முடிகின்றது.

கல்வெட்டுக்கள் கூறுவதெல்லாம் மன்னர்களுடைய ஆட்சியைப் பற்றி. இங்கு ஐரோப்பியர்களோ

சீனர்களோ அல்லது அரபியர்களோ அவர்களுடைய ஆவணத்தைப் பார்க்கின்ற பொழுது நாம் காண்பதெல்லாம் சாமானிய மனிதர்களின் வலிகள், சாமானிய மனிதர்களின் செயல்பாடுகள், அவர்களுடைய அன்றாட வாழ்க்கை, அவர்களின் உணவு, அவர்களுடைய தேவைகள், அவர்களின் குடும்ப விடயங்கள் என்றபல்வேறு செய்திகளை நாம் காண முடிகின்றது. ஆக அந்த வகையில் பார்க்கின்ற பொழுது, ஐரோப்பியர்கள் பார்வையின் வழியாக நாம் தமிழ் பாரம்பரியத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் வரலாற்றையும் நாம் அறிந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு நமக்கு கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக கடந்த 600 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டின் வாழ்நிலையை அறிந்து கொள்வது என்றால் ஐரோப்பியர்களோ சீனர்களோ அல்லது அரபியர்களோ இல்லாமல் நாம் அந்தச் சரியான வரலாற்றை நிச்சயமாக அந்தப் புள்ளிகளை இணைக்க முடியாது என்பது உறுதி. இதை நாம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்.

எனவே அந்த வகையில் செல்லும்போது நமது வரலாற்றை முன்னெடுத்துச் சென்றவர்கள் சிலரை வேண்டுமென்றே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை நம்மால் காண முடிகிறது. அந்த வகையில் நாம் காண்கின்ற பொழுது நம் பார்வை எங்கெல்லாம் செல்ல வேண்டும் என்று நான் யோசிக்கிறேன் என்றால், எல்லிஸ் அவர்களை நமது பார்வை சென்று அடைய வேண்டும். ஏனென்றால் அவர் காலத்தில் தமிழுக்காக அவர் செய்த பல விடயங்கள். ஒரு குறிப்பிட்ட மக்களால் யார் என்று நம்மால் இப்போது சொல்ல இயலாது, நஞ்சு கொடுத்து கொல்லப்பட்டவர் எல்லீஸ் என்பது நமக்கு எல்லாம் தெரியும். ஆக அதைப்பற்றி அதிகமாக பேசப்படவில்லை. அதற்கான காரணங்களை நாம் தனியாக இன்னொரு முறை கூட பேசலாம். தமிழுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை செய்தவர் அவர் என்று நாம் பார்க்கிறோம். அதனால் பல்வேறு விடயங்கள் நாம் செய்வதற்கு இருக்கிறது.

அதிலும் குறிப்பாக இந்தக் கட்டுரையில் நான் குறிப்பிட்டு சொன்னது என்னவென்றால், இந்த கார்ல் க்ரவுல்அவர்களுடைய நூல் எந்த வகையில் அமைந்திருக்கிறது, ஆனால் தற்சமயம் இங்கே ஜெர்மனியில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு அல்லது தமிழை விரும்பிப் படிக்கின்ற மக்களுக்கு நாம் எதை வழங்க வேண்டும் என்றால், திருத்தி அமைக்கப்பட்ட படைப்புகளை படைக்க வேண்டும்; ஒரு மொழிபெயர்ப்பை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது என்ற கருத்தை நான் கூறுகின்றேன். அந்த வகையில் இந்த இரண்டு நூல்கள் அதாவது கார்ல் க்ரவுல்தமிழ் மரபு அறக் கட்டளையின் பதிப்பாக வந்தது; ஆகஸ்ட் ஃப்ரெடிக் காம்மெரர்அவர்களின்நூலும் வந்தது. ஒரு நூலைக் கூறி நான் நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன். தமிழில் எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற திருக்குறள் இருக்கிறது. அதனை ஜெர்மனிய மொழியில் (இடாய்ச்சு மொழியில்) நான் சொல்வதென்றால்..... (இடாய்ச்சு மொழியில் அதனை வாசித்தார்) இதனை சரியாக மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள்.

இப்போது நாம் ஐரோப்பாவை எடுத்துக் கொண்டால் ஜெர்மானிய மொழி தெரிந்தவர்களாக பலரும் இருக்கிறார்கள். பிரான்ஸ் எடுத்துக் கொண்டால் பிரஞ்சு மொழி தெரிந்தபலரும் இருக்கின்றார்கள். இப்படிப் பல்வேறு மொழிகளில் படிக்க முடிகின்ற ஒரு காலகட்டத்தில் இருக்கின்ற பொழுது அதில் பிழைகளற்ற வகையிலான, தவறில்லாத ஒரு மொழிபெயர்ப்பு என்பது நமக்குத் தேவை. ஆக இந்த நூலை முழுமையாகப் படித்தபோதுஅதிலிருக்கும் பல கருத்துக்கள் எனக்குச் சரியாக இருந்தாலும் கூட, திருவள்ளுவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றி இருக்கக்கூடிய இந்தப் பகுதிஎன்பது சரியாக அமையவில்லை. அதாவது எப்படிச் சரவண பெருமாள் ஐயரும், விசாகப் பெருமாள் அய்யரும்கட்டுக்கதைகள் கட்டி திருவள்ளுவரைத் தாழ்த்த வேண்டும் என்று நினைத்தார்களோ, அதை எல்லாம் உள்வாங்கியே இந்த மொழிபெயர்ப்பை அவர் செய்திருக்கிறார் என்ற உண்மையையும் என்னால் உணர முடிந்தது. ஆக அப்படி இருந்தாலும் கூட இந்த நூல் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியோடு செய்திருக்கின்றார்கள். ஆக அந்த முயற்சி எல்லாம் பாராட்டிய அதே வேளையில், நாம் தமிழக அரசோடு இணைந்து இந்த மொழிபெயர்ப்புகளை பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் சீனம் மற்றும் அரேபிய

மொழிகளிலும் செம்மைப்படுத்திய வகையில் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கின்றது என்ற கருத்தை சொல்லிக்கொண்டு வாய்ப்பிற்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்த நிகழ்வு வழியாக உங்களை எல்லாம் சந்தித்தது மிக்க மகிழ்ச்சி என்று தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று உரையாற்றினார்

## மருத்துவர் சோம. இளங்கோவன் அவர்களின் ஆய்வுரை

………..

"அருமைத் தமிழ் நெஞ்சங்களே, தலைமை தாங்கும் மோகன் வைரக்கண்ணன் அவர்களே, வந்துள்ள பெரியோர்களே, துணைவேந்தர் ஜெகதீசன் அவர்களே, அனைவருக்கும் வணக்கம்.

இந்தத் திராவிடப் பொழில் இதழ் நமக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் நம்முடைய திராவிட சித்தாந்தத்தை கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் வருகின்றது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை வந்து கொண்டிருக்கிறது. இந்த இதழின் அட்டைப்படம் கனடாவில் நடந்த மனிதநேய சமூகநீதி மாநாட்டை ஒட்டி, அங்குள்ள கனேடிய மனிதநேய அமைப்போடு இணைந்துநடத்தியதை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அட்டைப் படமாக மாநாட்டிற்கு முன்பே போடப்பட்டது. இந்த இதழில் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் வரவேண்டும், அப்படி வரும் கட்டுரைகள் சிறப்பான கட்டுரைகளாக, ஆதாரபூர்வமான எழுத்துக்களாக இருக்க வேண்டும் என்பது நோக்கம்.

தனிநாயக அடிகளார் ஓர் அருமையான ஆங்கில இதழை நடத்தி வந்தார் அவருடைய எண்ணமெல்லாம்தமிழைத் தமிழர்கள் பாராட்டுவது பெரிதல்ல, மற்றவர்கள் தமிழைப் பற்றிச் சொல்ல வேண்டும்; உலகம் தமிழைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும், உலக அறிஞர்கள் தமிழைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்தார். அதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 108 நாடுகளில் இருந்து தமிழ் அறிஞர்களை அழைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை 1968-ல் நடத்தினார். அந்த மாநாட்டை நேரே பார்த்து மகிழ்ந்தவன் நான். இந்த அளவிற்கு நாம் செல்ல வேண்டுமென்று, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று ஆரம்பித்துள்ளோம். இதை எடுத்துச் செல்ல வேண்டியது இங்கு வந்துள்ள ஒவ்வொருவரின் பொறுப்பு.

இப்போது தமிழர்களின் பொற்காலம் ஆரம்பித்து விட்டது என்றுதான் நான் நினைக்கின்றேன். அதற்கான எல்லா அறிகுறிகளும் ஆட்சியிலிருந்து எல்லாமே தெரிகிறது. நாம் ஒரே ஒரு கீழடியைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கும் போது, ஆனால் பல கீழடிகள் உள்ளன என்பதை உலகெங்கும் காட்டிக்கொண்டு வருகின்றார் நம்முடைய சுபாஷினி அவர்கள். அவரின் ஆராய்ச்சிகள் இலக்கியத்திலே கீழடிகள். எந்தெந்த மொழிகளிலே தமிழ் இருக்கிறது, தமிழன் எங்கெல்லாம் சென்றான், எங்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஆஸ்திரேலியாவில் இருந்து இங்கிலாந்தில் இருந்து மற்றும் பல நாடுகளில் இருக்கும் ஆதாரங்களை அவர் சிறப்பாகக் காட்டி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய செயல். ஒரு தொண்டாகத்தான் அவர் இதைச்செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கட்டுரையை நானும் படித்தேன். ஆனால் ஜெயா மாறன்ஒரு கருத்தையும் தவறாமல் அதன் ஆழத்தைப் புரிந்து கொண்டு அவ்வளவு சிறப்பாக வெளிக்கொணர்ந்தது, உண்மையிலேயே புத்தக ஆராய்ச்சி புத்தக ஆய்வு என்பதற்கு, அதற்குரிய ஒரு பரிசு இருக்குமானால் முதல் பரிசு ஜெயாமாறன் அவர்களுக்கு தான்.

முதலில் இந்தக் கட்டுரையின் ஆசிரியர் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர். முதலில் பாராட்டப்பட வேண்டியது எதற்கு என்றால், அவர் சொர்ணம் நேரு அன்புமணி. சொர்ணம் அம்மா, நேரு அப்பா, அன்புமணி. பாராட்டுக்கள். இதைநாங்கள் எல்லாம் கடைப்பிடிக்கத் தவறிவிட்டோம். வரும் தலைமுறைகள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அய்யா நேரு பல விதங்களிலே தமிழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். அவர் ஓய்வு பெற்றது, நாங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி திராவிடப் பொழிலுக்கு பல வேலைகளைச் செய்து வருகின்றார்கள். அய்யா கண்ணபிரான் இரவிசங்கரோடு இணைந்து இதில் சிறப்பான கட்டுரைகள் வர வேண்டும் என்பதற்காக, துணைவேந்தர் அய்யா ஜெகதீசன்

போன்றவர்களோடும் இணைந்து செயல்படுகிறார். இன்னொரு மகிழ்ச்சியான செய்தி - ஐயா பேராசிரியர் நாகநாதன் அவர்கள் இங்கு ஆசிரியர் குழுவில் இணைந்து வழிநடத்த உள்ளார் என்பதை மிகவும் பெருமையாக மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது கட்டுரைக்கு வருகின்றேன். திராவிட மொழியில் பெரிய அறிஞர்கள் மட்டுமின்றி, இளைஞர்களும் அறிஞர்களாக இருக்கின்றார்கள். அவர்களுடைய திறமையும் வெளிவர வேண்டும் என்பதற்காகத் தான் இளைய தலைமுறையினரிடம் கட்டுரைகள் வாங்கி வெளியிடுகின்றோம். அந்த வகையில் இதில் மிகவும் சிறப்பாக அன்புமணி அவர்கள் கல்வியைப் பற்றி எழுதி இருக்கின்றார். ஒரு காலத்திலே பல பெண்கள் முதற்கொண்டு கவிஞர்களாக இருந்தார்கள் சங்க இலக்கியங்களிலே. என்ன ஆனது?இன்று சங்கங்கள் எல்லாம் சாதிச்சங்கங்களாக மாறிவிட்டன. சங்கங்கள் எல்லாம் தமிழ்ச் சங்கங்களாக இயங்குகின்றனவா? என்ற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லும்படி கல்வி எங்கே இருக்க வேண்டும்? எப்படி இருக்க வேண்டும்? எங்கே செல்ல வேண்டும் என்பதைச் சிறப்பாக ஆங்கிலத்தில் எழுதி உள்ளார் அதை நான் தமிழில் கூறுகின்றேன்.

அவருடைய கட்டுரையின் ஆரம்பமே தந்தை பெரியார் அவர்களுடைய கல்விக்கான இலக்கணம் பற்றி. கல்வி என்றால் என்ன? எப்படி இருக்க வேண்டும்? கல்வி என்பது பகுத்தறிவையும்சுயமரியாதையையும் பயிற்றுவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இரண்டு சொல்கின்றார் - ஒன்று பகுத்தறிவும் சுயமரியாதையும் இருக்க வேண்டும். இரண்டாவது அதனைப் படிப்பதனால் அவனுடைய வாழ்க்கை முன்னேறி ஒரு தொழில் செய்யவும் வேலை செய்யவும் பயன்பட வேண்டும் என்பதைத் தந்தை பெரியார் அவர்கள் சொல்லி இருக்கின்றார். திராவிடம் என்று இன்று நாம் பெருமையாக பேசிக்கொண்டு இருக்கிறோம். அந்தக் காலத்திலேயே எப்படி இருந்தது? ஒரு காலத்திலே எவ்வளவு மோசமான நிலையை அடைந்து விட்டோம் என்றால் தமிழ்நாட்டிலேயே சமஸ்கிருதம் பேசினால் தான் மரியாதை. இப்பொழுது எப்படி நுனிநாக்கு ஆங்கிலம் பேசினால் மரியாதை என்று நினைக்கின்றோமோ அப்படி சமஸ்கிருதம் பேசினால் தான் மரியாதை என்றுஇருந்தது. என்னுடைய தந்தையார் எல்லாம் சமஸ்கிருதம் படித்து தினமும் சமஸ்கிருத வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்க கூடிய அளவிற்கு கொண்டு வர முயன்றார்கள். பேசுவதும், எழுதுவதும் தமிழா சமஸ்கிருதமா என்ற அளவிலே திருமண அழைப்பிதழ்கள் சில தமிழ் வார்த்தைகள் பெரும்பாலும் சமஸ்கிருத வார்த்தைகள் என்றிருந்தன.

தமிழ் அறிஞர்களுக்குச் சரியான மரியாதை தரப்படவில்லை. சமஸ்கிருதம் படித்திருந்தவர்களுக்கே தரப்பட்டது. இதையெல்லாம் மாற்றி தமிழர்கள் மீண்டும் கல்வியில் சிறக்க வேண்டும் என்பதற்காக சர் பி டி தியாகராயர் அவர்கள் முதன் முதலில் சென்னை மாநகராட்சியில் (அப்போது மெட்ராஸ் கார்ப்பரேஷன்) குழந்தைகள் படிப்பதற்கு உணவு அதாவதுமதிய/காலை உணவு என்று சொல்கிறோமே அதை ஆரம்பித்தார்கள். அவர் கல்வி நிறுவனங்களுக்கு மிகவும் உதவி செய்தார். அங்கு படிப்பதற்கு மாணவர்களுக்கு உதவி செய்தவர்கள் பலர். அதில் முக்கியமானவர் அய்யா நடேசனார் அவர்கள். மாணவர்கள் தங்கிப் படிக்குமாறு விடுதியை ஏற்படுத்தியவர் மற்றும் பலர் செய்த உதவிகளையும் அப்படியே பட்டியலிட்டு அன்புமணி காண்பித்து இருக்கிறார். நாம் இன்று என்ன செய்ய வேண்டும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அன்புமணி ஆராய்ச்சியில் மிகவும் சிறப்பாகச் சொல்லி இருக்கக்கூடிய கருத்துக்களில் ஒன்று, தாய் மொழியில் கற்க வேண்டும். யார், யார் தாய் மொழியில் கற்று அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை போன்றவர்கள் எல்லாம் எப்படி வந்திருக்கிறார்கள், உலக அறிஞர்கள் எப்படித் தாய் மொழியில் கற்று அதனைப் பயன்படுத்திப் பின்னர் உயர்ந்திருக்கிறார்கள் என்பதைச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார். அடுத்த கருத்து, குழந்தைகளின் வளர்ச்சியில் யார்தலையிடுவது? எப்படி தலையிடுவது? என்பதாகும். இன்று நமக்குள்ள பெரிய இடர்ப்பாடு அதுதான். குழந்தைகள் படிக்கிறார்களா பெற்றோர்கள் படிக்கிறார்களா என்பதே இப்போது சந்தேகமாக இருக்கிறது. இங்கே நடத்திய தேர்விலேயே நாங்கள் வந்து இந்தக் கட்டுரை குழந்தையால் எழுதப்பட்டதா அல்லது பெற்றோர் எழுதினாரா என்ற அளவிற்கு வந்துவிட்டது. எவ்வளவு தூரம் குழந்தைகள் படிப்பில் பெற்றோர்கள் தலையிடுவது என்பதற்கு ஒரு அளவே

இல்லாமல் போய்விட்டது. இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டிலே பிள்ளைகள் சிந்திப்பது அவருடைய சொந்த சிந்தனையாக இருக்க வேண்டுமே தவிர பெற்றோர்களின் சிந்தனையாக இருக்கக் கூடாது. அதனைச் சிறப்பாக சொல்கிறார்.

பின்லாந்து நாட்டிலே எப்படி கல்வி கற்பிக்கப்படுகிறது என்பதைச் சிறப்பாக சொல்லி இருக்கிறார். ஓர் ஆசிரியர் பயிற்சிக்கு பின்லாந்து நாட்டிலே ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற வேண்டும். ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற்று தேர்வு பெற்றவர்கள், சிறப்பானவர்கள் மட்டும்தான் ஆசிரியர்களாக வர முடியும். அப்படிப்பட்டவர்கள் தான் ஆசிரியர்களாக பணியில் அமர்த்தப்படுகிறார்கள். நம் நாட்டிலே எப்படி ஆகிவிட்டது என்றால் மற்ற எதற்குமே பயனில்லாதவர்கள் (கூட்டத்தில் இருக்கும் ஆசிரியர்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள்) மட்டுமே ஆசிரியர் தொழிலுக்குப் போக வேண்டும் என்பதுபோல வந்துவிட்டது. அரசு பள்ளிகளிலே நல்ல ஊதியம் இருக்கிறது. அவர் சொல்லியிருக்கிறார். தனியார் பள்ளிகளிலே சரியாக ஊதியம் தருவதில்லை அவர்களுக்கு ஒரு உற்சாகத்தோடு வேலை செய்யும் நிலைமை அங்கு இல்லை என்பதை நன்றாகச் சொல்லி இருக்கின்றார்,

அடுத்து என்ன செய்ய வேண்டும்? மாணவர்களுடைய சிந்தனைகள் வெளிவரும்படி, அவர்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ அதை ஊக்குவிக்கும் வகையில் படிப்பு இருக்க வேண்டும். பின்தங்கியவர்களுக்கு ஒரு பயிற்சி முகாமை வைத்து அவர்களை ஊக்குவித்து அவர்களைப் படிக்க வைக்கும் நிலையை உருவாக்க வேண்டும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆராய்ச்சிகளுக்கு இடம் இருக்க வேண்டும். படிப்பைத் தவிர மற்றவைகளுக்கும் இடம் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். உலகில் கல்வி எங்கெங்கு சிறப்பாக இருக்கிறதோ அதனை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை எல்லாம் சொல்லி தமிழ்நாட்டில் கல்வியில் என்னென்ன மாற்றங்கள் வர வேண்டும் என்பதை இந்த 26 வயதிலேயே இவ்வளவு சிறப்பாக எழுதியதற்காக அன்புமணி உங்களை மிகவும் பாராட்டுகின்றேன். பெரிய ஆராய்ச்சி அறிஞர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்கள் என்று நினைக்காது நீங்கள் படித்து அதற்கு எங்கே ஆதாரம் இருக்கிறது என்பதைத் தேடிச் சொல்லித் தமிழ்நாட்டின் கல்வி எண்ணிக்கையில் மட்டுமல்ல எண்ணத்தாலும் சிந்தனையாலும் அவர்களது படைப்புகளாலும் உயர வேண்டும் என்பதை ஆழமாக சொல்லி இருக்கின்றீர்கள்.

இன்று எண்ணிக்கையில் நாம் பல மடங்கு உயர்ந்திருக்கின்றோம் அதை எடுத்துக்காட்டுகள் மூலம் எத்தனை விழுக்காடு எங்கே எந்த மாநிலத்தில் எப்படி என்பதை எல்லாம் சொல்லி இருக்கின்றார். ஆனால் நாம் எண்ணிக்கையில் உயர்ந்தது போல உண்மையான படிப்பு என்பதில் நாம் உயர்ந்திருக்கிறோமா என்பதைக் கேள்வியாகக் கேட்டிருக்கிறார். சிறப்பான கேள்வி. நாம் படிப்பதிலே எத்தனை மதிப்பெண்கள் பெறுகிறோம், முதல் ரேங்க் வாங்கினோமா இரண்டாவது ரேங்க் வாங்கினோமா என்பதில் செலுத்தும் கவனத்தை, அதைப் புரிந்து கொண்டு படித்திருக்கிறோமா என்பதில் செலுத்த வேண்டும் என்பதை ஆழமாகச் சொல்லி இருக்கின்றார் அது மிகவும் சிறப்பான கருத்து.

நாம் எப்படிப் படித்தோம் என்னும் சரித்திரத்தை சொல்லி இருக்கின்றார். ஆரம்பமாக பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே பள்ளிகள் தொடங்கப்பட்டன அதற்கு முன்பு ராஜகோபாலாச்சாரியார் மூடிய பள்ளிகளை எல்லாம் திறந்து பள்ளி இல்லாத ஊரே இருக்கக் கூடாது என்ற அளவிற்கு கொண்டு வந்தார் காமராஜர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்ததும் உயர்நிலை பள்ளிக்கூடக் கல்வி வரை அனைவரும் கல்விக் கட்டணம் இன்றிப்படிக்கலாம் என்று கொண்டு வந்தார். அதற்குப்பின் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வந்தபின் கல்லூரி வரை கட்டணம்கிடையாது என்று படிப்பு கொண்டு வந்தார். குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அதிலும் பெண்களுக்குக் கல்லூரியில் கட்டணம் இல்லாமல் படிப்பது மட்டுமல்ல, அவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுப்பது என்று இன்றைய மாண்புமிகு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சிவரை திராவிட மாடல் ஆட்சியில் என்ன என்ன சிறப்புகள், அதிமுக ஆட்சியாக இருந்தாலும் சரி அதில் என்னென்ன செய்தார்கள் என்பதைச் சுட்டிக் காண்பித்து இருக்கிறார், அதையே ஒரு வரைபடமாக ஆக்கிநமக்குப் புரியும்படி சொல்லி இருக்கின்றார்.

இதை எல்லாம் மிகவும் சிறப்பாகக் கவனித்துச் செயல்படவேண்டும். இன்று தமிழர்கள் இல்லாத இடமே இல்லை, தமிழர்கள் இங்கே அமெரிக்காவில் தமிழ்க் கல்வி என்பதில் மிகவும் ஆர்வமும், தமிழ் இலக்கிய ஆராய்ச்சி என்பதில் ஆர்வமும் காட்டி வருகின்றோம். இதையெல்லாம் சிறப்பாக நாம் பார்த்து தமிழகத்தில் இன்னும் எவ்வளவு தூரத்திற்கு முன்னேற வேண்டும், தமிழர்கள் வாழும் மற்ற நாடுகளில் எல்லாம் கல்விக்காக என்ன செய்ய முடியும் என்பதை எல்லாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். அதுதான் பொன்னான நாட்கள் என்று நான் சொன்னது. திராவிடச் சித்தாந்தங்களை 21 மொழிகளிலே உலகெங்கும் பரப்ப வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் திட்டம் மிகச்சிறப்பான திட்டம். அதற்கு சுபாஷினி போன்றவர்கள் மற்ற நாடுகளில் இருப்பதை எல்லாம் ஆராய்ந்து சொல்கின்றார்கள். அந்தக் குழுவில் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாம் பணிபுரிந்து தமிழன் என்பவன் நாகரிகப்பரம்பரையின் உச்சகட்டம், தமிழர் நாகரிகம் நாகரிகத்தின் உச்சம் என்பதை எல்லாம் நாம் வெறும் வார்த்தைகளால் சொல்லாமல் எடுத்துக்காட்டுகளாகச் சொல்லி எழுதிப் பரப்பி வாழ்ந்து தமிழை உயர்த்துவோம். தமிழ்க் கல்வியை உயர்த்துவோம். தமிழ்நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவோம் என்பதைச் சிறப்பாக எடுத்துச் சொல்லி உள்ள அன்புமணிக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க தமிழ்" என்று தனது ஆய்வுரையை நிறைவு செய்தார்

## கட்டுரையாளர் அன்புமணி உரை

இங்கு இருக்கக் கூடிய பெரியார் பன்னாட்டு அமைப்பு பொறுப்பாளர்கள், சான்றோர்கள் மற்றும் திராவிடப்பொழில் ஆசிரியர்கள் குழு உறுப்பினர்கள், இதைக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய கேட்பாளர்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டுரையை மிகச் சிறப்பாகப் படித்து அதனை ஆய்வு உரை செய்த மருத்துவர் அய்யா சோம. இளங்கோவன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு இந்தக் கட்டுரையை எழுதத் தோன்றியதற்கு காரணமே நான் கடந்த வருடம் ஆசிரியர் பயிற்சியினை முடித்தேன். என்னுடைய நண்பர்கள் பலர் தங்களுடைய துயரங்களை இன்னல்களை என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள். சூழல் வந்து இந்த மாதிரி இருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்களுக்கான சூழல் மிக மோசமாக இருக்கிறது. அதாவது ஆசிரியர்களுக்குரிய சரியான மதிப்பு அல்லது அவர்களுக்கு உரிய சரியான சம்பளங்களும் கொடுக்கப்படுவதில்லைஎன்று என்னிடம் பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அப்படி வருகின்ற பொழுது நான் பழைய வரலாறுகளை எல்லாம் எடுத்துப் படிக்கின்ற பொழுது திராவிட இயக்கம் கல்வியை மேம்படுத்துவதற்காக எவ்வளவு செயல்கள் செய்து இருக்கிறார்கள்.

அதாவது நம்முடைய நீதிக்கட்சி ஆட்சியில் ஆரம்பித்து அதற்கு அப்புறம் தந்தை பெரியார் அவர்கள்அப்புறம் பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், எம்ஜிஆர் போன்றவர்கள் நிறைய விஷயங்கள் செய்திருக்கிறார்கள். காமராஜரும் பெரியார் அவர்களால் உந்தப்பட்டு நிறைய பள்ளிகளைத் திறந்தார். அதனால் தான் நம்முடைய முன்னோர்கள் எல்லோரும் கல்வி கற்றார்கள். இவ்வளவு விடயங்கள் தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் ஆட்சிகளும் முன்னெடுத்து இருக்கின்றனர். கல்வியில் தமிழ்நாடு இவ்வளவு வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம் திராவிட இயக்கமும் அதனுடைய பங்களிப்பும் தான். இவ்வளவு தூரத்திற்கு கல்வியில் மேம்பாடு அடைந்திருக்கிறோம். அதற்கான கட்டமைப்புகள் வளர்ந்திருக்கிறது. திட்டங்கள் நிறைய வந்திருக்கின்றன.

அதாவது ஒவ்வொரு புதிய அரசும் வரும் பொழுது கல்விக்காக ஒரு புதிய திட்டத்தை அமுல்படுத்துகிறார்கள். அடுத்த அரசு வரும்பொழுது அதற்குப் போட்டியாக அதைச் செழுமைப்படுத்தி கல்வி வளர்ச்சியைக் கொண்டு வருகிறார்கள். இப்படியே கல்வியில் முன்னேறிக் கொண்டே போகிறோம். அதன் மூலமாக நமக்குச் சமூகநீதி என்பது கிடைக்கிறது. சமூகநீதியிலும்முன்னேறுகிறோம். அண்மைக் காலங்களில் பார்க்கின்ற பொழுது ஒட்டுமொத்த

கற்றல் வளர்ச்சி (Overall Development in Learning) என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதை வைத்து ஒன்றிய அரசுஒரு சர்வே எடுக்கிறார்கள். 2021ல் எடுக்கப்பட்ட அந்த சர்வேயில் பல நிலைகளில் நாம் முன்னணியில் இருக்கிறோம். ஆனால் ஒன்றில் மட்டும், நேஷனல் ஆவரேஜ்ஜை விடதமிழ்நாட்டில் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது ஒட்டுமொத்தக் கற்றல் வளர்ச்சி. அந்த சர்வேயை எடுத்து பார்க்கின்ற பொழுது அதன் மூலம் என்ன தெரிய வருகிறது என்று பார்த்தால், இங்கே இருக்கக்கூடிய கல்விச் சூழல் என்பது இப்போதைக்குச் சரியாக இல்லை. அதற்குக் காரணம் என்ன என்பதைத் தேடிப் பார்க்கின்ற பொழுது, இங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களின் மனநிலையை நாம் ஆராய வேண்டி இருக்கிறது.

ஆசிரியர்களுடைய மனநிலையைஆராய்ந்து பார்க்கின்ற பொழுது ஒரு ஐ. டி. நிறுவனம்அல்லது வேறுஒரு நிறுவனம் என்றுஎடுத்துக் கொண்டால் அங்குவேலை பார்க்கக் கூடிய இடத்தை எடுத்துக் கொண்டால், அங்கே இருக்கக்கூடிய மனிதர்கள் மிஷின் உடன் வேலை பார்க்கிறார்கள். அந்த மிஷினோடு வேலை பார்க்கக்கூடிய மனிதர்களின் மனநிலைமுக்கியம் என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு நிறைய வசதியும் சம்பளமும் தருகின்றார்கள். ஆனால் ஓர் ஆசிரியர் என்பவர் யார்? அவர்களுடைய சூழ்நிலை நன்றாக இருக்கிறதா? அவர்களுடைய மனநிலை நன்றாக இருக்கிறதா? என்பதை நினைக்க வேண்டியது இந்த சமூகத்தினுடைய கடமை, பெற்றோர்களுடைய கடமை, சமூகத்தில் உள்ள அனைவரின் கடமை சார்ந்தது என்று நான் நினைக்கிறேன். ஆனால் அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதாக தெரியவில்லை. அப்படி இருக்கின்ற பொழுது ஆசிரியர்களின் மனநிலை என்பது மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிறது. அதன் மூலமாகத்தான் இந்த ஓவரால் டெவலப்மென்ட் லேனிங்என்பது குறைந்திருப்பதாக நான் நினைக்கிறேன். நான் விசாரித்த இடங்கள் மற்றும் நேராக நான் பார்த்த அனுபவங்கள், கேள்விப்பட்ட இடங்கள், அதன் மூலமாக உருவானது தான் இந்தக் கட்டுரை. அனைவருக்கும் நன்றி

## பிற அறிஞர்களின் குறிப்புரை

நூல் ஆய்வுரை நிகழ்வு முடிந்தவுடன் கலந்துரையாடல் நிகழ்ந்தது. முன்னாள் துணைவேந்தரும், திராவிடப் பொழில் ஆசிரியருமான பேரா. ஜெகதீசன் அய்யா அவர்கள் ஆய்வுரைகளையும் கட்டுரை படைத்தவர்களையும் பாராட்டிப் பேசினார். ”ஜெர்மானிய பாதிரிமார்களின் தமிழ்ப்பணி பற்றி டாக்டர் சுபாஷினி அவர்கள் மிகச்சிறப்பாக கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு கூடுதல் செய்தி. ஜெர்மனிய பாதிரியார்களை அனுப்பி வைத்தது எல்லாம் டென்மார்க் அரசு. வரலாற்றுக் குறிப்பு ஒன்று இருக்கிறது. டென்மார்க் அரசு நிறைய பண உதவி செய்கிறேன் என்று சொன்ன போதிலும் கூட டென்மார்க்கிலிருந்து ஒருவரும்முன்வரவில்லை. ஜெர்மன் பாதிரிமார்கள் முன்வந்தார்கள். அவர்களுக்கு டென்மார்க் அரசு உதவி செய்தது என்பதைச் சொல்ல வேண்டும்” என்றார். கட்டுரை ஆசிரியர் டாக்டர் சுபாஷினி அவர்கள் அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். அதைப்போல அன்புமணியின் கட்டுரை குறித்தும் பாராட்டித் தன் கருத்துகளைப் பதிவு செய்தார்கள்.

தொடர்ந்து திராவிடப்பொழில் ஆசிரியர்கள் பேரா. நம். சீனிவாசன், முனைவர் வா. நேருஆகியோர் கருத்து தெரிவித்தார்கள். திராவிடப்பொழிலின் இலக்காக அய்யா ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தங்களிடம் குறிப்பிட்டது என்ன, அதில் திராவிடப்பொழில் எவ்வளவு தூரம் சாதித்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரப்படங்களோடு பேரா. கண்ணபிரான் இரவிசங்கர் அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட கங்காநிதி சிவபாண்டியன், டாக்டர். சரோஜா இளங்கோவன், துரைக்கண்ணன், பாரிகபிலன் ஆகியோர் தங்கள் கருத்துகளையும் ஆய்வுரை அரங்கத்திற்குப் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

இறுதியாகத் திராவிடர் கழகத்தின் பொருளாளர், தி மாடர்ன் ரேசனலிஸ்ட் இதழின் பொறுப்பு ஆசிரியர் வீ. குமரேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். அவர் தனது உரையில்,

"திராவிடப்பொழில் இதழ் தமிழர் தலைவர் அவர்களின் நீண்ட நாள் கனவு. திராவிட இயக்கம்

என்பது ஏடுகளை, இதழ்களை ஏராளமாக நடத்தி வளர்ந்த இயக்கம். அப்படிப்பட்ட இயக்கத்திலே ஆய்வுத் தளத்தில் இதழ்கள் என்பது அவ்வளவாக வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக வரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலையிலே ஒரு நீண்ட நாள் கனவாக ஆசிரியர் அவர்கள் திட்டமிட்டுச் சரியான நேரத்திலே இந்த திராவிடப் பொழில் இதழ்வெளிவருவதற்கு வழி காட்டுபவராகவழி நடத்துபவராக இருந்து வருகிறார், திராவிடப் பொழில் இதழ் ஆய்வுக்கூட்டத்தில் முதன் முறையாகக் கலந்து கொண்டிருக்கிறேன். இந்த ஆய்வுக் கூட்டத்தைப் பார்த்தபொழுது, இந்தக் கட்டுரையாளர்கள் எவ்வளவு ஈடுபாட்டோடு கட்டுரையைப் படைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதைப் போல இந்தக் கட்டுரையை வாசித்து, உள்வாங்கி எவ்வளவு ஈடுபாட்டோடு ஆய்வாளர்கள் கட்டுரையை மதிப்புரை செய்கிறார்கள் என்பதையும் உணரமுடிந்தது.

டாக்டர் சுபாஷினி அவர்கள் ஜெர்மனிக்கு ஏதோ சென்றோம், இருந்தோம் என்பதாக இல்லாமல், அந்த ஆய்வுக் களத்தில் எவ்வளவு தூரம் அவர்கள் பணியாற்றி இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. டாக்டர் சுபாஷினி அவர்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு எல்லாம் இருந்தது. ஆனால் அவருக்குப் பின்னால் இருக்கும் ஆய்வுப்பணியை முழுமையாகத் தெரிந்து கொள்ள இந்த நிகழ்வு உதவியிருக்கிறது. ஜெர்மனி என்று சொன்னால் மேக்ஸ் முல்லர்தான் நினைவுக்கு வரும். அவர் சமஸ்கிருதத்தை தூக்கிப்பிடித்தவர். ஆனால் ஜெர்மானியர்களும் தமிழ் மொழியைப் பற்றி, திருக்குறளைப் பற்றி, இவ்வளவு தூரம் விரிவாக பணி செய்து இருக்கிறார்கள் என்பது வெளிக்கொணர்ந்ததில் அம்மா சுபாஷினி அவர்களுக்கு மிகப்பெரிய பங்கு இருக்கிறது. பாராட்டுக்கள். ஜெயாமாறன் அவர்களின் ஆய்வுரை மிகச்சிறப்பாக இருந்தது. இந்த உரையின் மூலமாக ஜெர்மனுக்குச் சமமான சொல் இடாய்ச்சு என்பதைத் தெரிந்துகொண்டேன்.

அதைப்போல நம் வீட்டுப்பிள்ளை அன்புமணி எழுதிய கல்வி பற்றிய கட்டுரை. அவர் கணிதம் படித்தவர். கல்வியியலும் படித்திருக்கிறார். கல்வித் தளத்திலே ஒரு கட்டுரை படைத்தது மிகச்சிறப்பு. கட்டுரை நன்றாக இருந்தது. அந்தக் கட்டுரையை அய்யா டாக்டர் சோம. இளங்கோவன் அவர்கள் ஆய்வுரை செய்தார். டாக்டர் சோம இளங்கோவன் அவர்கள் தன்னை முன்னிலைப்படுத்தாமல் எத்தனையோ பேரை முன்னிலைப்படுத்திய பெருமைக்கு உரியவர். 50 ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்காவுக்கு வந்தவர். அவரோடு வந்தவர்கள் பலரும் பணம், பதவி என்று போய்விட்டார்கள். நான் கூடக் கேட்டேன், நீங்கள் அமெரிக்காவில் ஒரு எம். பி. யாகவாவது வரலாமே என்று. நமக்கு அது சரிப்பட்டு வராது என்று சொல்லிவிட்டார். அய்யாசோம. இளங்கோவன் அவர்களைப் பொறுத்த அளவில் எங்கு ஆரம்பித்தாரோ அங்கேயே பெரியார் கொள்கையிலியே நிற்கின்றார். தந்தை பெரியார் பதவியே வேண்டாம் என்று பணி செய்தது போல அய்யா சோம. இளங்கோவன் அவர்கள் செயல்படுகின்றார். சமுதாயப்பணி, தமிழ்ப்பணி ஆற்றுகிறார். தமிழர் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலில் பெரியாரை உலகமயப்படுத்தும் பணியில் முதல் தளபதியாகப் பணியாற்றுகிறார். அவர் பல பணிகளைச் செய்கின்றவர். திராவிடப்பொழில் அதில் ஒரு பகுதி.

திராவிடப் பொழில் சிறப்பு ஆசிரியர் பேரா. கண்ணபிரான் இரவிசங்கர் அவர்கள் சில புள்ளிவிவரங்களைக் கொடுத்தார். பெரியார் குறித்தகட்டுரைகளும் நிறைய வரவேண்டும். கடவுள் மறுப்பைத் தமிழ் நாட்டில், இந்தியாவில் பேசவேண்டும். ஆனால் கடவுள் மறுப்பு என்பது மட்டுமே பெரியார் கொள்கை அல்ல. அய்யா ஆசிரியர் அவர்கள் சொல்வார், கடவுள் மறுப்பு என்பது ஒரு வழிமுறை (Strategy), ஆனால் மனித நேயம் என்பதுதான் பெரியார் கொள்கை (Ideology) என்று. தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பிக்கும்போது சொல்லியிருக்கிறார், இன்றைக்கு நான் இதைத் தொடங்கியிருக்கிறேன். அமைப்பு என்பது சிறிய அளவில் இருக்கலாம். ஆனால் இது உலக அளவிலே செல்லக்கூடியது என்று சொல்லியிருக்கிறார். சுயமரியாதை வேண்டாம் என்று எந்த மனிதனும் சொல்லமுடியாது. பகுத்தறிவு எனக்குத் தொடர்பு இல்லாதது என்று எந்த மனிதனும்

சொல்லமுடியாது. நிறைய நாடுகளில் இருந்து கலந்து கொண்டிருக்கிறீர்கள். அந்தந்த நாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு சுயமரியாதை, பகுத்தறிவு அடிப்படையில் கட்டுரைகள் திராவிடப் பொழிலுக்கு கொடுக்கலாம். அப்படி கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஒரு வரலாற்றுத் தகவல். சதி தடுப்புச் சட்டத்தோடு தொடர்பு உடையது. வில்லியம் கேரி என்பவர் மதபோதகர். அச்சுக்கோக்கும் பணியில் ஆங்கிலேயர் காலத்தில் கல்கத்தாவில் இருந்தவர். அப்போது கவர்னராக இருந்த வில்லியம் பெண்டிங்கிடம் இருக்கிறார். சதி தடுப்பு மசோதாவை லண்டனுக்கு அனுப்பி, அதற்கான அனுமதியைக் கேட்கிறார். வில்லியம் பெண்டிங். அது சனிக்கிழமை வருகிறது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அதனை அச்சடித்து பணியைச்செய்ய வேண்டியவர் மதபோதகரான வில்லியம் கேரி. அவர் ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்குப் போகாமல், இந்த சட்டத்தினை அச்சுக்கோத்து அடித்து அனுப்பிகிறார். ஏனென்றால் தாமதிக்கும் ஒவ்வொரு மணி நேரமும் பல பெண்களின் உயிர் சதியால் பறிக்கப்படும் என்பதால் மத போதனையை அன்று விடுத்து மனித நேயப்பணிக்கு முன்னுரிமை கொடுத்து அடித்து அனுப்பினார் என்பது வரலாறு" என்று குறிப்பிட்டு ஆங்கிலக் கட்டுரைகள் நிறைய வர வேண்டும் எனக்குறிப்பிட்டுஅனைவருக்கும் நன்றி கூறி உரையாற்றினார்

**Notes :**

### Humanism: Canadian Multiculturalism's Secret Weapon

**Richard Dowsett,** Humanist Association of Toronto (HAT)

Multiculturalism is intended to preserve the cultural freedom of all individuals and provide recognition of the contributions of diverse ethnic groups. Canada's embracing of Multiculturalism was a pivotal change in government policy and this essay touches upon that and compares with Periyar's vision of an equal and equitable society.

### History of Social Justice in Tamil Society

Prof. Dr. **Vee. Arasu**

Tamil Society has gradually moved on the path of social justice from its historical annals until the current day. This paper attempts to explore that interesting history and also the contribution of the Dravidian Movement to instill Social Justice in the social fabric of the current day Tamil Society.

### வரலாற்றுச் சுவடுகளில் நாத்திகத்தின் அறிவுத் திறனோக்கிய வளர்ச்சி

எழுத்தாளர் ஓவியா

கடவுள் மறுப்பு வாசகங்களை வடிவமைத்தார் பெரியார். பலரும் இன்று வரை கடவுள் மறுப்பு வாசகங்களை ஒரு வகையான வசவு என்றே புரிந்தும் அதன்படியே பேசியும் வருவது சரியா? என இந்தக் கட்டுரை ஆராய்கிறது. மேலும், அமெரிக்காவைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் ஷேம்ஸ் வில்லியம் டிராப்பர் அவர்கள் எழுதிய மதத்துக்கும் அறிவியலுக்குமான முரண்பாட்டின் வரலாறு என்னும் நூலின் பல சுவையான பக்கங்களில், மதத்திற்கும் அறிவியலுக்கும் நடந்த உரையாடல்கள் பற்றி உரையாடுகிறது.

### கலைஞர் மு. கருணாநிதியின் மேற்கோளாட்சியில் பாரதிதாசன் கவிதைகள்

பேரா. முனைவர் **இ.கி. இராமசாமி**

கலைஞர் மு. கருணாநிதியின் படைப்புலகம் பரந்துபட்டது. அவருடைய படைப்புலகில் பாரதிதாசனின் கவிதை மேற்கோள்கள் எங்கெல்லாம் எடுத்து ஆளப்பட்டிருக்கிறது என்பதையும், காலம், களம், காரணம் ஆகிய மூன்று நிலைகளில் பாரதிதாசன் கவிதை வரிகளைக் கலைஞர் எப்படி எடுத்தாண்டுள்ளார் என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

### டாக்டர் அம்பேத்கரும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவும்

எழுத்தாளர் **மு. சங்கையா**

பெண் அடிமைத்தனத்தைக் களையும் பொருட்டு அண்ணல் அம்பேத்கர் வரைந்தளித்த இந்து சட்டத் தொகுப்பு (Hindu Code Bill) மசோதாவையும், அது முன்வைத்த முக்கிய அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்கும் இந்தக் கட்டுரை, யார் யாரால் இந்தச் சட்டத் தொகுப்பு எதிர்க்கப்பட்டது என்பதையும், யார் யாரால் ஆதரிக்கப்பட்டது என்பதையும், இந்தியாவில் இருந்த அன்றைய இயக்கங்களின் பார்வைகளோடு எடுத்து வைக்கிறது. விடுதலை இதழில் பெரியார் ஆதரவு கொடுத்து எழுதிய தலையங்கத்தையும் ஆராய்கிறது.

PERIYAR MANIAMMAI
INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University)
think • innovate • transform
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu